இளைஞர்

தமிழ் இலக்கணம்

முதற் புத்தகம்

[I, II, III பாரங்களுக்கு உரியது]

வித்வான்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

எழுதியது

மூன்றாம் பதிப்பு

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்

திருவல்லிக்கேணி :: சென்னை

காபிரைட்] 1936 [விலை அணா 8

Reprinted—1936

Approved by the Madras Text-Book Committee for School use

(Vide Fort St. George Gazette, Page 455, Part I. B. dated 7th November, 1933)

முன்னுரை

இக்காலத்தில், மாணவர்களுக்கு இலக்கணப்பாடம் என்றால் வெறுப்பு உண்டாகின்றது. அதற்குக் காரணம் பல உள்ளனவாயினும், அஃது அவர்களுக்கு எளிதின் விளங்காமையும் ஒன்றாகும். ஆகலின், மாணவர்களுக்கு இலக்கணப் பாடம் எளியதாகவும் இன்பமுள்ளதாகவும் இருக்கும்படி ஏற்ற முறையில் உதாரணங்களைக்கொண்டே கற்பித்தல் வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து. அம்முறையில் இப்புத்தகம் மாணவர்கள் எளிதின் அறிந்துகொள்ளுமாறே எழுதப்பட்டுளது.

இப்புத்தகம், மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள், முதற் பகுதி முதற் பாரத்துக்கும், இரண்டாம் பகுதி இரண்டாவது பாரத்துக்கும், மூன்றாம் பகுதி மூன்றாவது பாரத்துக்கும் அமைவுடையன. ஆயினும், இரண்டாம் பாரத்து மாணவர்க்கு, முதற்பகுதியின் பொருள்களை முதலில் தெரிவித்துவிட்டுப் பின்னர் இரண்டாம் பகுதியைக் கற்பித்தல் வேண்டும். அவ்வாறே மூன்றாம் பாரத்து மாணவர்க்கும், முதற்கண் முதல்இரண்டு பகுதிகளின் பொருளைத் தெரிவித்துவிட்டுப் பின்னர் மூன்றாம் பகுதியைக் கற்பித்தல் நலம்.

இப்புத்தகத்தில், அவ்வவ் வகுப்பிற்கு இன்றியமையாதனவே எழுதப்பட்டுள்ளன; அவ் வகுப்புக்களுக்கு வேண்டாதன சில விலக்கப்பட்டன. சுட்டெழுத்துக்களுள் உகரத்தையும், ஈற்றுவினவெழுத்துக்களுள் ஏகாரத்தையும், மொழிகளின் இறுதியில்நிற்கும் மெய்யெழுத்துக்களுள் ஞகர நகரங்களையும் நீக்கியதற்குக் காரணம் இதுவேயாகும். அன்றியும், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கே நன்னூலில் 60-சூத்திரங்களைப் பாடமாகக் குறித்திருப்பதனாலும், இளமாணவர்

களுக்குச் சூத்திரப்பொருள் விளங்குதல் அரிதாகலானும் நன்னூற் சூத்திரங்கள் இப்புத்தகத்தில் சேர்க்கப்படவில்லை.

தெலுங்கு முதலிய மொழிகளிற் கூறப்பட்டுள்ள இலக்கணங்களுள் இன்றியமையாதன சிலவற்றை இப்புத்தகத்தில் அமைத்துள்ளேன். அவை, 'செய்யும்' என்னும் முற்றிற்குப் பொருள் கூறியிருத்தலும் பிறவுமாம்.

எதிர்மறை வினைமுற்று, எதிர்மறை யேவல் வினைமுற்று, எதிர்மறை வியங்கோள் வினைமுற்று, வினைத்தொகை முதலியவை சிறுவர்களுக்கு எளிதின் விளங்கும்படி எழுதியுள்ளேன்; கட்டுரை எழுதுதற்கான இலக்கணங்களுட் சிலவற்றையும் ஆங்காங்கே அமைத்துள்ளேன். ஆகலின், இப்புத்தகம் இளமாணவர்களுக்குப் பெரிதும் பயன் தருவதாகும்.

தமிழ்ச் செல்வர், ம-ா-ா-ஸ்ரீ கா. நமச்சிவாய முதலியாரவர்கள் இப்புத்தகம் முழுதும் கடைக்கணித்துத் தந்தார்கள். அவர்களுக்கு என்றும் கடப்பாடுடையேன்.

யான் எழுதியுள்ள புத்தகங்களை ஆதரித்துவரும் அன்பர்கள் இவ்வாறே என்ஞான்றும் ஆதரித்து எனக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகின்றேன்.

வே. வேங்கடராஜுலு

உள்ளுறை

முதற் பகுதி
(FOR FORM I)

பக்கம்

I. எழுத்து

1. முதலெழுத்து ... 11
உயிரெழுத்து, மெய்யெழுத்து ... 11
உயிரெழுத்தின் வகை ... 12
மெய்யெழுத்தின் வகை ... 15
2. சார்பெழுத்து ... 16
உயிர்மெய்யெழுத்து ... 16
ஆய்தவெழுத்து ... 20

II. சொல்

1. பெயர்ச்சொல் ... 21
திணை, பால், எண், இடம், வேற்றுமை 24-34
2. வினைச்சொல் ... 35
காலம், வினைமுற்று ... 37
வினைமுற்றின் வகை ... 38
வினையெச்சம், பெயரெச்சம் ... 39
3. இடைச்சொல் ... 41
4. சொற்றொடர் ... 41

III. புணர்ச்சி ... 43

உயிர்முன் உயிர், உயிர்முன் மெய்,
மெய்முன் உயிர் ... 44-46
மொழியின் இடையில் எழுத்துக்களின்
அமைதி ... 47

இரண்டாம் பகுதி
(FOR FORM II)

பக்கம்

I. எழுத்து

1. முதலெழுத்து ... 49

சுட்டெழுத்து, வினவெழுத்து,

இனவெழுத்து ... 49-51

2. சார்பெழுத்து ... 52

குற்றியலுகரம், குற்றியலிகரம் ... 52-55

II. பதம் ... 55

III. சொல்

1. பெயர்ச்சொல் ... 57

காரணப்பெயர், இடுகுறிப் பெயர் ... 57

சுட்டுப்பெயர், வினைப்பெயர் ... 58

ஆகுபெயர் ... 58

திணை, பால், எண், இடம், வேற்றுமை 60-76

2. வினைச்சொல் ... 77

காலம் ... 77

செய்வினை செயப்பாட்டு வினைகள் ... 79

முற்றுவினை, எச்சவினை ... 79

எச்சவினையின் வகை ... 80

3. இடைச்சொல் ... 82

4. உரிச்சொல் ... 83

5. சொற்றொடர் ... 84

அடைமொழிகள், சொல்லிலக்கணம் ... 87

IV. புணர்ச்சி ... 89

மூன்றாம் பகுதி

(FOR FORM III)

பக்கம்

I. எழுத்து

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் 92
மொழியின் இறுதியில் நிற்கும் எழுத்துக்கள் ... 94
போலி ... 95

II. சொல்

திசைச் சொல் ... 96
1. பெயர்ச்சொல் ... 97
தொழிற்பெயரின் வகை ... 98
ஆகுபெயர் ... 100
வேற்றுமை ... 101
வேற்றுமை யுருபுகளை ஏற்காத பெயர்கள் 108
வேற்றுமை கொண்டுமுடியுஞ் சொற்கள் 109
சொற்கள் வேற்றுமையுருபு ஏற்கும்போது வருஞ் சாரியைகள் ... 110
2. வினைச்சொல் ... 111
தெரிநிலை வினைமுற்று ... 111
இறுதிநிலை ... 113
வினையின் வகைகள் - தன்வினை, பிறவினை 115
ஏவல்வினை, வியங்கோள்வினை ... 118
ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடு ... 120

பக்கம்

'செய்யும்' என்னும் முற்று ... 121
உடன்பாடு, எதிர்மறை ... 122
எதிர்மறை வினைமுற்று, எதிர்மறை ஏவல்வினைமுற்று, எதிர்மறை வியங்கோள் வினை 122-126
எதிர்மறைப் பெயரெச்சம், எதிர்மறை வினையெச்சம் ... 126

3. இடைச்சொல் ... 127
ஏகாரம், ஓகாரம், உம், கொல். 127-129

4. உரிச்சொல் ... 130

5. வழக்கியல் ... 131
குறிப்பு மொழிகள் ... 132
வழுவமைதி ... 133
முற்றும்மை வரவேண்டும் இடம் ... 135

6. சொற்றொடர் ... 136
சொற்றொடர் வகைகள் ... 136
தொடர்கள் ... 137
தொடரிலக்கணம் கூறுதல் ... 140

III. புணர்ச்சி

உயிரீற்றுப் புணர்ச்சி ... 141
மெய்யீற்றுப் புணர்ச்சி ... 142

இளைஞர்
தமிழ் இலக்கணம்

நான்முகம்

மாந்தர், தமது உள்ளத்தில் தோன்றுங் கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்ளும் அறிவு வாய்ந்தவர். அவர் பற்பல சொற்றொடர்களால் தம் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்; அவ்வாறு தெரிவித்துக்கொள்ளும் வழக்கிற்கு 'மொழி' (பாஷை) என்பது பெயர்.

சீனர், ஜப்பானியர் முதலியோர் பேசும் மொழிகள் நமக்கு விளங்குகின்றனவா? இல்லையே; ஏன்? அவர்கள் வழங்கும் மொழிகள், நாம் வழங்கும் மொழிக்கு முற்றும் வேறானவை; அவ்வாறே, இவ்வுலகில் பல்வேறு மொழிகள் வழங்குகின்றன.

சீனர் பேசுவது சீனமொழி; ஜப்பானியர் பேசுவது ஜப்பான்மொழி; ஆங்கிலேயர் பேசுவது ஆங்கிலமொழி; நாம் பேசுவது தமிழ்மொழி.

நாம், நமது கருத்தைத் தனித்தனிச் சொற்களால் மட்டும் பிறருக்கு அறிவித்தல் இயலாது. வா, போ, இரு என்பவைபோன்ற சில சொற்கள் தனித்தனியே நின்று, சந்தர்ப்பத்தினால் பொருள் தருமாயினும், அவ்வாறு எல்லா விடத்தும் சொற்கள் தனித்தனியே நின்று பொருள் தர மாட்டா.

இராமன் பாடம் படிக்கின்றான்.
சீதை கோலம் போடுகின்றாள்.
பசு பால் தரும்.
நாய் வீட்டைக் காக்கும்.

இவ்வாறு பல சொற்கள் தொடராகச் சேர்ந்த சொற்றொடரால் (வாக்கியத்தால்), ஒரு கருத்தைப் பிறருக்கு அறிவிக்கின்றோம். இவ்வாறன்றி இராமன், பாடம்; சீதை, கோலம்; பசு, பால்; நாய், வீடு என்பவைபோன்ற தனித் தனிச் சொற்களைச் சொன்னால், அவற்றால் நமது கருத்தைப் பிறர் அறிந்துகொள்ளுதல் முடியாது. இதனால், மொழி (பாஷை) முதன்முதலில் சொற்றொடரால் அமைந்தது என்பது நன்கு விளங்கும்.

பெரிய வடக்கயிறு ஒன்றனை எடுத்துப் பார்ப்போம்: அது, சிறிய கயிறுகள் பலவற்றால் இயன்றிருக்கும். அந்தச் சிறிய கயிறுகளும் பல நார்களால் அமைந்திருக்கும். அதுபோலவே, ஒரு வாக்கியத்தை நோக்குவோம்: வாக்கியம் பல சொற்களால் இயன்றிருக்கும்; ஒவ்வொரு சொல்லும் பல சிற்றொலிகளால் அமைந்திருக்கும். இதனால், மொழிக்கு முதற் காரணமாயிருப்பது ஒலியே என்பது நன்கு விளங்கும். ஆயின் தும்முதல், கனைத்தல் முதலிய ஒலிகள், மொழிக்கு முதற் காரணம் ஆகமாட்டா. ஏன்? மொழிக்கு உறுப்பாய் நிற்கும் ஒலியே மொழிக்கு முதற்காரணம் ஆகும். அந்த ஒலிகளைத் தெரிந்துகொள்ளுதற்கு அடையாளமாக எழுதப் பட்டுள்ள வடிவங்களுக்கு எழுத்து என்பது பெயர். எழுதப் படுதலின், அவை எழுத்து எனப்பட்டன. இனி, அவ்வெழுத்துக்களை நோக்குவோம்:

முதற் பகுதி

I. எழுத்து

எழுத்தாவது, மொழிக்குக் காரணமா யுள்ள ஒலி. தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்கள் முதலெழுத்து எனவும், சார்பெழுத்து எனவும் இரண்டு வகை யாகும். மொழி யில் மூலமாயுள்ள எழுத்துக்கள் முதலெழுத்து எனப்படும். அம் முதலெழுத்துக்களைச் சார்ந்து வரும் எழுத்துக்கள் சார் பெழுத்து எனப்படும்.

I. முதலெழுத்து

உயிரெழுத்து, மெய்யெழுத்து என்னும் இருவகை யெழுத்துக்களுக்கும் முதலெழுத்து என்பது பெயர்.

1. உயிரெழுத்து

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு. அவையாவன:

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

உயிர், வேறொன்றன் உதவி யின்றித் தானே இயங்கும். அதுபோல, இவை, பிறஎழுத்துக்களின் உதவியின்றித் தாமே ஒலிக்க இயலும்; அதனால் உயிரெழுத்து எனப்பட்டன.

2. மெய்யெழுத்து

மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. அவையாவன:

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

மெய் (உடம்பு), உயிரின் உதவி யின்றித் தானாக இயங்க இயலாது. அதுபோல, இப் பதினெட்டு எழுத்துக்களும்

உயிரெழுத்துக்களின் உதவி யின்றித் தாமாக ஒலிக்க இயலா; அதனால், இவை மெய்யெழுத்துக்கள் எனப்பட்டன.

மெய்யெழுத்துக்களை உயிரெழுத்துக்களின் உதவி யின்றி ஒலித்தல் இயலாமையின், அவற்றோடு அகரச் சாரியையினைச் சேர்த்து,

க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன என்று ஒலித்தல் வழக்கு.

1. உயிரெழுத்தின் வகை ✓

உயிரெழுத்துக்களை அ, ஆ, இ, ஈ என ஒலித்துக் கவனியுங்கள். சில எழுத்துக்கள் குறுகிய ஒலியுள்ளனவா யிருக்கும்; பல எழுத்துக்கள் அவற்றினும் நீண்ட ஒலியுள்ளனவா யிருக்கும். குறுகிய ஒலியுள்ள எழுத்துக்கள் குற்றெழுத்து எனப் பெயர் பெறும். நீண்ட ஒலியுள்ள எழுத்துக்கள் நெட்டெழுத்து எனப் பெயர் பெறும்.

(1) குற்றெழுத்து ✓

அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து எழுத்துக்கள், குறுகிய ஒலியுள்ளனவாயிருத்தலின், குற்றெழுத்துக்கள் எனப்படும். குற்றெழுத்து, ஒரு [1]மாத்திரை யளவு ஒலிக்கும்.

(2) நெட்டெழுத்து ✓

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துக்கள், நீண்ட ஒலியுள்ளனவாயிருத்தலின், நெட்டெழுத்து எனப்படும். நெட்டெழுத்து இரண்டு மாத்திரை யளவு ஒலிக்கும்.

1. மாத்திரையளவாவது - இயல்பாகக் கண் இமைக்கும் நேரம்.

அ, இ, உ, எ, ஒ— குற்றெழுத்து.
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—நெட்டெழுத்து.

இவற்றை இயல்பாக ஒலித்து, வேறுபாடு அறிக.

(3) சுட்டெழுத்து ✓

நாம், பொருள்களைச் சுட்டிக்காட்டிக் கூறும்பொழுது, அச் சுட்டுப்பொருள் தருதற்குச் சில உயிரெழுத்துக்களை வழங்குகின்றோம். அவற்றிற்குச் சுட்டெழுத்து என்று பெயர்.

அவ் வீடு உயரமானது
இவ் வீடு தாழ்வானது

என்னுமிடங்களில், அ, இ என்னும் எழுத்துக்கள், வீட்டைச் சுட்டிநிற்றல் அறிக.

தொலையில் இருக்கும் வீட்டைக் குறிக்கும்பொழுது அவ்வீடு என்றும், அருகில் இருக்கும் வீட்டைக் குறிக்கும் பொழுது இவ்வீடு என்றும் கூறுகின்றோம். இதனால், அகரம் தொலையில் இருக்கும் பொருளையும், இகரம் அருகில் இருக்கும் பொருளையும் சுட்ட வரும் என அறியலாகும்.

அகர இகர எழுத்துக்களுக்கு ஈடாக அந்த, இந்த என்னுஞ் சொற்களையே இக்காலத்தில் வழங்குகின்றோம்.

அந்த வீடு உயரமானது
இந்த வீடு தாழ்வானது

என்பது அறிக.

(4) வினாவெழுத்து ✓

'இராமன் வந்தான்' என்னுஞ் சொற்றொடரில், வந்தான் என்பது, இராமனது தொழிலைக் குறிக்கின்றது. இராமன் வந்தான் என்பதனோடு, ஆ என்னும் எழுத்தினைச் சேர்த்தால்,

இராமன் வந்தான் + ஆ = இராமன் வந்தானா?

என்று ஒரு கேள்வி ஆகும். இதில், கேள்விப்பொருளைத் தந்தது எது? ஆ என்னும் எழுத்தே. ஆ என்னும் எழுத்தே யன்றி ஓ என்னும் எழுத்தும் வினாப்பொருளைத் தரும்.

இராமன் வந்தானா? —ஆ
இராமன் வந்தானோ? —ஓ

ஆ, ஓ என்னும் எழுத்துக்கள், சொற்களின் ஈற்றில் சேர்ந்து வினாப்பொருளைத் தருதலின், ஈற்று வினா எனப் படும்.

'எனக்கு ஒரு புத்தகம் வேண்டும்' என்று வேண்டிய வனைப் பார்த்து, 'எப் புத்தகம் வேண்டும்?' என்று கேட்கின் றோமல்லவா? இதில் வினாப்பொருளைத் தந்த எழுத்து எது?

எ - என்பது.

எ - என்பதற்கு ஈடாக, எந்த என்னுஞ் சொல்லை வழங்கு தல் உண்டு.

எந்தப் புத்தகம் வேண்டும்?

என வரும்.

எ-என்பது, சொல்லிற்கு முதலில் நின்று, வினாப்பொரு ளைத் தருதலின், அது முதல்வினா எனப்படும்.

2. மெய்யெழுத்தின் வகை ✓

பக்கம்	அங்ஙனம்
அச்சம்	அஞ்ஞானம்
திட்டம்	திண்ணம்
முத்தம்	முந்நாள்
அப்பன்	அம்மன்
அற்றம்	அன்னம்

என்னும் இச் சொற்களை ஒலித்துக் கவனித்தால், இவற்றில் க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற என்பவற்றின் ஒலிக்கும், ங்ங, ஞ்ஞா, ண்ண, ந்நா, ம்ம, ன்ன என்பவற்றின் ஒலிக்கும் வேறுபாடு விளங்கும். க்க முதலியவற்றின் ஒலி வலிதாகவும், ங்ங முதலியவற்றின் ஒலி மெலிதாகவும் கேட்கின்றதன்றோ? அதனுல், வலிதாக ஒலிக்கின்ற க் முதலியவற்றிற்கு வல்லெழுத்து என்றும், மெலிதாக ஒலிக்கின்ற ங் முதலியவற்றிற்கு மெல்லெழுத்து என்றும் பெயரிட்டிருக்கின்றனர். இவ்விரண்டு வகையான எழுத்துக்களின் ஒலிக்கும் இடைப்பட்ட ஒலியையுடைய எழுத்துக்கள், இடையெழுத்து எனப் பெயர் பெறும். இம் மெய்யெழுத்துக்கள் ஒவ்வொன்றும் அரை மாத்திரை யளவு ஒலிக்கும்.

(1) வல்லெழுத்து ✓

மெய்யெழுத்துக்கள் பதினெட்டனுள்,

க, ச, ட, த, ப, ற என்னும் ஆறு எழுத்துக்களுக்கு வல்லெழுத்து என்பது பெயர்.

(2) மெல்லெழுத்து ✓

ங, ஞ, ண, ந, ம, ன என்னும் ஆறு எழுத்துக்களுக்கு மெல்லெழுத்து என்பது பெயர்.

(3) இடையெழுத்து

இவை ஒழிந்த ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறு எழுத்துக்களுக்கு இடையெழுத்து என்பது பெயர்.

II. சார்பெழுத்து ✓

1. உயிர்மெய்யெழுத்து

தமிழ்மொழியில் உயிர், மெய் என்னும் முதலெழுத்துக்கள்மட்டுமே இருக்குமாயின், முருகன் என்பதை,

ம் உ ர் உ க் அ ன்

என்றுதானே எழுத நேரும். அவ்வாறு எழுதின், எழுத்துக்கள் பலவாகும்; காலமும் நீடும். அதனால் மெய்யெழுத்துக்களின் வடிவங்களோடு உயிரெழுத்துக்களின் வடிவங்களின் ஒருபகுதியைச் சேர்த்து, தனித்தனி எழுத்துக்களாக அமைக்கலாயினர். அவ்வெழுத்துக்கள் உயிரும் மெய்யும் ஒன்றுகச் சேர்ந்தனவாகலின், அவற்றிற்கு உயிர்மெய் யெழுத்து எனப் பெயர் ஏற்படுவதாயிற்று. உயிர்மெய்யெழுத்துக்களில், மெய்யெழுத்தின் ஒலி முன்னும், உயிரெழுத்தின் ஒலி பின்னுமாய் ஒலிக்கும்.

கீரி = க்இ ர்இ

கீ என்பதில், இகாரத்தின் ஒரு பகுதியும், ீ

ரி என்பதில், இகரத்தின் ஒரு பகுதியும் ி

சேர்ந்திருத்தல் காண்க. இவ்வெழுத்துக்கள், மெய்யெழுத்தோடு உயிரெழுத்து சேரப்பிறத்தலால், சார்பு எழுத்து ஆயின.

ஒவ்வொரு மெய்யெழுத்தோடும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களுஞ் சேரும். எப்படியெனின்,

1. க் + அ = க
2. க் + ஆ = கா
3. க் + இ = கி
4. க் + ஈ = கீ
5. க் + உ = கு
6. க் + ஊ = கூ
7. க் + எ = கெ
8. க் + ஏ = கே
9. க் + ஐ = கை
10. க் + ஒ = கொ
11. க் + ஓ = கோ
12. க் + ஔ = கௌ

என வரும். இவ்வாறே, ஙகரம் முதலிய மெய்யெழுத்துக்கள் ஒவ்வொன்றனோடும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் சேரும். அவ்வாறு சேருமிடத்து உயிர்மெய்யெழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறு (18 × 12 = 216) ஆகும்.

உயிர்மெய்க்குறில் ஒரு மாத்திரை யளவு ஒலிக்கும்.

உயிர்மெய்நெடில் இரண்டு மாத்திரை யளவு ஒலிக்கும்.

1. உயிர்மெய்க் குற்றெழுத்து—90

மெய்	அ	இ	உ	எ	ஒ
க் +	க	கி	கு	கெ	கொ
ங் +	ங	ஙி	ஙு	ஙெ	ஙொ
ச் +	ச	சி	சு	செ	சொ
ஞ் +	ஞ	ஞி	ஞு	ஞெ	ஞொ
ட் +	ட	டி	டு	டெ	டொ
ண் +	ண	ணி	ணு	ணெ	ணொ
த் +	த	தி	து	தெ	தொ
ந் +	ந	நி	நு	நெ	நொ
ப் +	ப	பி	பு	பெ	பொ
ம் +	ம	மி	மு	மெ	மொ
ய் +	ய	யி	யு	யெ	யொ
ர் +	ர	ரி	ரு	ரெ	ரொ
ல் +	ல	லி	லு	லெ	லொ
வ் +	வ	வி	வு	வெ	வொ
ழ் +	ழ	ழி	ழு	ழெ	ழொ
ள் +	ள	ளி	ளு	ளெ	ளொ
ற் +	ற	றி	று	றெ	றொ
ன் +	ன	னி	னு	னெ	னொ

ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
கா	கீ	கூ	கே	கை	கோ	கௌ
ஙா	ஙீ	ஙூ	ஙே	ஙை	ஙோ	ஙௌ
சா	சீ	சூ	சே	சை	சோ	சௌ
ஞா	ஞீ	ஞூ	ஞே	ஞை	ஞோ	ஞௌ
டா	டீ	டூ	டே	டை	டோ	டௌ
ணா	ணீ	ணூ	ணே	ணை	ணோ	ணௌ
தா	தீ	தூ	தே	தை	தோ	தௌ
நா	நீ	நூ	நே	நை	நோ	நௌ
பா	பீ	பூ	பே	பை	போ	பௌ
மா	மீ	மூ	மே	மை	மோ	மௌ
யா	யீ	யூ	யே	யை	யோ	யௌ
ரா	ரீ	ரூ	ரே	ரை	ரோ	ரௌ
லா	லீ	லூ	லே	லை	லோ	லௌ
வா	வீ	வூ	வே	வை	வோ	வௌ
ழா	ழீ	ழூ	ழே	ழை	ழோ	ழௌ
ளா	ளீ	ளூ	ளே	ளை	ளோ	ளௌ
றா	றீ	றூ	றே	றை	றோ	றௌ
னா	னீ	னூ	னே	னை	னோ	னௌ

2. ஆய்தவெழுத்து

அஃது, எஃகு என்னுஞ் சொற்களில் மூன்று புள்ளியை (ஃ) உடைய எழுத்துக் காணப்படுகின்ற தன்றோ? அதற்கு, ஆய்த எழுத்து என்பது பெயர்.

ஆய்தவெழுத்து, யாதேனும் ஒரு குற்றெழுத்தின்முன்னரே வரும்; நெட்டெழுத்தின்முன் வாராது. ஆய்தவெழுத்திற்குமுன் வல்லின உயிர்மெய்யெழுத்துக்களுள் யாதேனும் ஒன்றே நிற்கும்; வேறு எழுத்துக்கள் நிற்கமாட்டா. இம் முறையை மேற்குறித்த

அஃது — (அகரம் குறில்; து–வல்லெழுத்து)
எஃகு — (எகரம் குறில்; கு–வல்லெழுத்து)

என்னுஞ் சொற்களில் காண்க.

ஆய்தவெழுத்து, உயிரெழுத்துக்களைப்போல் தானாக ஒலித்தற்கும் வாராது; மெய்யெழுத்துக்களைப்போல் உயிரெழுத்துக்களோடு சேர்ந்து ஓரெழுத்தாகவும் வாராது; அவ்வெழுத்துக்களைச் சார்ந்தே வரும். அதனால், ஆய்தமும் சார்பெழுத்தின் இனம் ஆயிற்று. இது, அரைமாத்திரை அளவு ஒலிக்கும்.

ஆய்தவெழுத்தை அஃகேனம் என்று வழங்குவர்.

II. சொல் ✓

இராமன் படிக்கின்றான்.

குதிரை ஓடுகின்றது.

இச் சொற்றொடர்களில், இராமன், குதிரை என்னுஞ் சொற்கள் எவற்றைக் குறிக்கின்றன? அவை மனிதன், மிருகம் என்னும் பொருள்களைக் குறிக்கின்றன. பொருள்களின் பெயர்களைக் குறிக்குஞ் சொற்களுக்குப் பெயர்ச்சொல் என்பது பெயர். படிக்கின்றான், ஓடுகின்றது என்னுஞ் சொற்கள் எவற்றைக் குறிக்கின்றன? அவை, இராமன் செய்யுந் தொழிலையும், குதிரை செய்யுந் தொழிலையும் குறிக்கின்றன. தொழிலைக் குறிக்குஞ் சொற்களுக்குத் தொழிற்சொல் என்பது பெயர். தொழிலை, வினை எனவுஞ் சொல்லலாம். அதனால், தொழிற்சொல்லிற்கு வினைச்சொல் என்று பெயரிட்டிருக்கின்றனர். முதலில், பெயர்ச்சொற்களைக் கவனிப்போம் :

I. பெயர்ச்சொல் ✓

இராமன் பள்ளிக்குக் காலையில் போகிறான்.

யானைக்கோம்பு வெண்மை நிறம் உள்ளது.

அவன் பாடுதலில் வல்லவன்.

இச் சொற்றொடர்களில், இராமன், காலை, பள்ளி, கோம்பு, வெண்மை, பாடுதல் என்னுஞ் சொற்களெல்லாம் பெயர்ச்சொற்களே ஆயினும், அவை குறிக்கும் பொருள்களுள் வேறுபாடு உளது. என்னை எனின்,

இராமன் என்பது-(மனிதனாகிய)பொருளைக் குறிக்கின்றது;
பள்ளி என்பது-ஓர் இடத்தைக் குறிக்கின்றது;
காலை என்பது-ஒரு காலத்தைக் குறிக்கின்றது;
கொம்பு என்பது-ஓர் உறுப்பினைக் குறிக்கின்றது;
வெண்மை என்பது-நிறமாகிய ஒரு குணத்தைக் குறிக் [கின்றது;
பாடுதல் என்பது-ஒரு தொழிலைக் குறிக்கின்றது.

ஆதலால்,

1. பொருளைக் குறிக்கும் பெயர் —பொருட்பெயர்
2. இடத்தைக் குறிக்கும் பெயர் —இடப்பெயர்
3. காலத்தைக் குறிக்கும் பெயர் —காலப்பெயர்
4. உறுப்பினைக் குறிக்கும் பெயர்—சினைப்பெயர்
5. குணத்தைக் குறிக்கும் பெயர்—பண்புப்பெயர்
6. தொழிலைக் குறிக்கும் பெயர் —தொழிற்பெயர்

எனப்படும். [சினை = உறுப்பு; பண்பு = குணம்.]

(1) பொருட் பெயர்:
இராமன், சீதை, யானை, நாற்காலி, தங்கம் முதலியன.

(2) இடப் பெயர்:
மதுரை, பள்ளிக்கூடம்,குளம்,தெரு,வீடு முதலியன.

(3) காலப் பெயர்:
இளவேனிற்காலம், சித்திரை மாதம், திங்கட்கிழமை, பகல், இரவு, நாழிகை முதலியன.

(4) சினைப் பெயர்:
கை, கால், தலை; பூ, காய், பழம்; கொம்பு, குளம்பு முதலியன.

(5) பண்புப் பெயர் :✓

கருமை, வெண்மை ; இனிமை ; நெடுமை, குறுமை, வட்டம் ; அன்பு முதலியன.

(6) தொழிற் பெயர் :

நடை, ஓட்டம், தூக்கம் ; நடத்தல், ஓடுதல், தூங்குதல் முதலியன.

குறிப்பு:—மனிதர், விலங்கு, பறவை முதலிய உயிருள்ள பொருளின் பெயரும், நாற்காலி, பொன், இரும்பு, மண், கல் முதலிய உயிரில்லாத பொருளின் பெயரும் பொருட் பெயரே. நிறம், சுவை, அளவு முதலியவையெல்லாம் பண்புப்பெயர் ஆகும்.

பயிற்சி

அடியில் வரும் பெயர்களை அட்டவணையிற் பொருத்தமாகக் குறிக்க.

முருகன், பல், பசுமை, உறக்கம், கட்டில், சதுரம், திருநெல்வேலி, ஓலை, மூக்கு, சிவப்பு, வெள்ளிக்கிழமை, வள்ளியம்மை, பகல், பூ, வால், வெள்ளி, தலை.

பொருள்	இடம்	காலம்	சினை	பண்பு	தொழில்

1. திணை

இராமன் படிக்கின்றான். மரம் வளர்கின்றது.
குதிரை ஓடுகின்றது. கல் உறுதியானது.

இச் சொற்றொடர்களில் இராமன், குதிரை, மரம், கல் என்னும் பெயர்கள் நான்கும் பொருட்பெயரே யாயினும், அவை, தம் இயல்பில் வேறுபாடு உடையன.

இராமன், பகுத்து அறியும் அறிவு உள்ளவன்; குதிரை, பகுத்தறியும் அறிவு இல்லாதது; மரம், பரிச உணர்ச்சி உள்ளது; கல் அறிவே அன்றி உயிரும் இல்லாதது. ஆகலின், இந் நான்கு பொருள்களையும் ஒரே இனமாகக் கொள்ளுதல் முறையாகாதன்றே? அதனால், பகுத்தறியும் அறிவுள்ள உயிர்களை மட்டும் ஓரினமாகவும், மற்றைய எல்லாவற்றையும் ஓரினமாகவும் பிரித்திருக்கின்றனர். இந்தப் பிரிவிற்கு, இலக்கணத்தில் திணை என்பது பெயர்.

அறிவுள்ள உயிர்களாகிய மனிதரும் தேவரும் உயர் வுடையவ ராகலின் அவர்கள் உயர்திணைப் பொருள் ஆவர். அவர்களைக்குறிக்குஞ் சொல், உயர்திணைச் சொல் எனப்படும். விலங்கு, பறவை முதலிய உயிருள்ள பொருள்களும், கல், மண் முதலிய உயிரில்லாத பொருள்களும் உயர்வு அல்லாத திணைப்பொருள் ஆகும். உயர்வு அல்லாத திணையை, அஃறிணை (அல் + திணை) என்பர். அஃறிணைப் பொருள் களைக் குறிக்குஞ் சொல், அஃறிணைச் சொல் எனப்படும்.

இராமன்—உயர்திணைப் பொருள்.
இராமன் என்னுஞ் சொல்—உயர்திணைச் சொல்.
குதிரை—அஃறிணைப் பொருள்.
குதிரை என்னுஞ் சொல்—அஃறிணைச் சொல்.

2. பால்

இராமன் சிறந்த வீரன். ✓
சீதை நல்ல குணம் உள்ளவள்.

இச் சொற்றொடர்களில், இராமன், சீதை என்னும் பெயர்கள் இரண்டும் எந்தத் திணைப்பொருளைக் குறிக்கின்றன? உயர்திணைப் பொருளைக் குறிக்கின்றன. இராமன், சீதை என்பவர் இருவரும் உயர்திணைப் பொருள்களே ஆயினும், வேறுபாடு இருக்கின்றது. என்ன வேறுபாடு?

இராமன் — ஆண்பிள்ளை
சீதை — பெண்பிள்ளை

இதனால், உயர்திணைப் பொருள்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம் எனத் தெரிகின்றதல்லவா? திணையில் உள்ள பிரிவிற்கு, பால் (பகுப்பு) என்பது பெயர்.

இராமன்,	முருகன்	—	ஆண்பால்
சீதை,	வள்ளி	—	பெண்பால்
இடையர்,	குறவர்	—	ஆண் பலர்பால்
இடைச்சியர்,	குறத்தியர்	—	பெண் பலர்பால்
மக்கள்,	மனிதர்	—	பொதுப் பலர்பால்

இவ்வாறே, அஃறிணைப் பொருள்கள் எல்லாவற்றையும் ஆண், பெண் என்று பிரிக்க முடியுமா? முடியாது. ஏன்? விலங்கு, பறவை முதலிய உயிருள்ள பொருள்கள் சிலவற்றில் மட்டுமே ஆண், பெண் என்னும் பிரிவு காணப்படுகின்றது. மாமரம், தென்னைமரம் முதலிய உயிருள்ள சில பொருள்

களிலும், கல், மண், நாற்காலி, கட்டில் முதலிய உயிரில்லாத பொருள்கள் எல்லாவற்றிலும் ஆண், பெண் என்னும் பிரிவு இல்லை. ஆகலின், அஃறிணைப் பொருள்களை ஆண்பால், பெண்பால் எனப் பிரித்தல் இயலாது. அதனால் அவற்றை ஒன்று, பல எனப் பிரித்திருக்கின்றனர்.

குதிரை, கிளி, மரம், வீடு —ஒன்றன் பால்
குதிரைகள், கிளிகள், மரங்கள், வீடுகள்—பலவின் பால்

3. எண்

உயர்திணையில், ஆண்பாற் பெயர் ஒருவனையே குறிக்கும்; பெண்பாற் பெயர் ஒருத்தியையே குறிக்கும்.

அஃறிணையில் ஒன்றன்பாலும் அவ்வாறு ஒரு பொருளையே குறிக்கும். ஆகலின், இம் மூன்று பால்களும் தனித் தனி ஒவ்வொரு பொருளையே குறிப்பவை.

உயர்திணையில் பலர்பால், அஃறிணையில் பலவின்பால் ஆகிய இரண்டு பால்களும் பல பொருள்களைக் குறிப்பவை.

ஒவ்வொரு பொருளையே குறிக்கும் பால்கள் ஒருமை எனவும், பல பொருள்களைக் குறிக்கும் பால்கள் பன்மை எனவும் பெயர் பெறும்.

இராமன், சீதை, குதிரை, —ஒருமை
அரசர், தேவியர், குதிரைகள், —பன்மை

பயிற்சி

ஒருமைப் பெயர்க்குப் பன்மைப் பெயரும், பன்மைப் பெயர்க்கு ஒருமைப் பெயரும் எழுதுக.

அரசன், தேவியர், புதல்வன், மனைவி, குழந்தை, மரங்கள், கற்கள், குரு, பெரியோர், மகள்.

4. இடம்

நான் படிக்கிறேன்.
நீ எழுதுகிறாய்.
அவன் ஓடுகிறான்.

இச் சொற்றொடர்களில், நான் என்பது பேசுபவனை யும், நீ என்பது பேசுபவனுக்கு முன் நிற்பவனையும், அவன் என்பது முன்னிலையிடத்தில் அன்றி வேறு இடத்தில் இருப் பவனையும் குறிக்கின்றன அல்லவா? பேசுபவன், தன்னைக் குறித்துச் சொல்லுஞ் சொல்லுக்குத் தன்மைச் சொல் என் றும், முன் நிற்பவனைக்குறித்துச் சொல்லுஞ் சொல்லுக்கு முன்னிலைச் சொல் என்றும், தன்மை முன்னிலை அல்லாத வேறு இடத்தில் இருக்கும் பொருளைக்குறித்துச் சொல்லுஞ் சொல்லுக்குப் படர்க்கைச் சொல் என்றும் பெயர்.

(1) தன்மையிடத்துச் சொற்கள் :

யான், நான்	— ஒருமை
யாம், யாங்கள், நாங்கள் ; நாம்	— பன்மை

(2) முன்னிலையிடத்துச் சொற்கள்:

நீ	— ஒருமை
நீர், நீங்கள்	— பன்மை

(3) படர்க்கையிடத்துச் சொற்கள் :

அவன்	ஆண்பால்	ஒருமை
அவள்	பெண்பால்	
அது	ஒன்றன்பால்	
அவர்கள்	பலர்பால்	பன்மை
அவை	பலவின்பால்	

குறிப்பு:—தன்மைச்சொல், முன்னிலைச்சொல் அல்லாத மற்றைய சொற்களெல்லாம் படர்க்கைச்சொற்களே.

5. வேற்றுமை ✓

இராமன் கண்டான்.

இராமனைக் கண்டான்.

இச் சொற்றொடர்கள் இரண்டனுள், முதற் சொற்றொடரில்,கண்டவன் இராமன்; இரண்டாஞ் சொற்றொடரில், கண்டவன் இராமன்அல்லன், வேறொருவன்; இராமன் காணப்பட்டவன் ஆகின்றான். கண்டவன் ஆகிய இராமனைக் காணப்பட்டவனாக வேறுபடுத்தியது எது? ஐ என்னும் எழுத்தே. இவ்வாறு பொருள்களை வேறுபடுத்தும் எழுத்து முதலியவற்றிற்கு வேற்றுமையுருபு என்று பெயர்.

முதல் வேற்றுமை:

இராமன் என்று தனியாகச் சொல்லும்பொழுது, அது ஒரு பெயர்ச்சொல் அளவில் நிற்கின்றது.

இராமன் ஓடுகின்றான்

என்னுமிடத்தில், இராமன், ஓடுதலாகிய தொழிலைச் செய்பவன் (கருத்தா) ஆகின்றான். ஆகலின், இங்கு இராமன் என்பது எழுவாய் வேற்றுமை ஆகும். இதனை முதல்வேற்றுமை என்றும் வழங்கலாம். இராமன் என்னும் பெயர்ச்சொல், சிறிதும் திரியாமலே எழுவாய்வேற்றுமையில் நிற்பது காண்க. எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை.

இரண்டாம் வேற்றுமை:

இரண்டாம் வேற்றுமையின் உருபு—ஐ

இராமன் இராவணனை வென்றான்.

பூனை எலியைப் பிடிக்கும்.

அவன் நிலத்தை உழுகிறான்.

என வரும்.

மூன்றாம் வேற்றுமை :

மூன்றாம் வேற்றுமையின் உருபு—ஆல், ஒடு, ஓடு.

ஆல்—தச்சன் அரத்தால் அராவுகிறான்.

நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது.

ஒடு—தலைவனொடு வேலைக்காரன் வந்தான்.

ஓடு—அண்ணனோடு தம்பி வந்தான்.

நான்காம் வேற்றுமை :

நான்காம் வேற்றுமையின் உருபு—கு

அவர் ஏழைகளுக்கு அன்னம் இடுகின்றார்.

இராமனுக்குத் தம்பி இலக்குவன்.

ஐந்தாம் வேற்றுமை :

ஐந்தாம் வேற்றுமையின் உருபு—இன். அதனோடு நின்று என்னுஞ் சொல் சேர்ந்தும் வரும்.

இன்—பரதனின் பெரியவன் இராமன்.

இன்நின்று—அவன் குதிரையினின்று இறங்கினான்.

ஆறாம் வேற்றுமை :

ஆறாம் வேற்றுமையின் உருபு—அது

இராமனது புத்தகம்.

எனது கை.

ஏழாம் வேற்றுமை :

ஏழாம் வேற்றுமையின் உருபு—இல், மேல், இடம் முதலியன.

இல் —ஆசிரியர் நாற்காலியில் இருக்கின்றார்.
மேல் —பலகைமேல் புத்தகம் இருக்கின்றது.
இடம்—என்னிடம் ஒரு ரூபாய் இருக்கின்றது.

எட்டாம் வேற்றுமை :

எட்டாம் வேற்றுமைக்குத் தனியாக உருபு இல்லை; பெயர்ச்சொல்லிற்கு வருந் திரிபே உருபாகும்.

தம்பீ இங்கே வா.
இராமா எங்கே போகின்றாய் ?

தம்பி என்னுஞ் சொல்லில் ஈற்றெழுத்து நீண்டு, தம்பீ என்றாயிற்று.

இராமன் என்னுஞ் சொல்லில் ஈற்றெழுத்துக் கெட்டும், அதற்குமேல் நின்ற எழுத்து நீண்டும், இராமா என்றாயிற்று.

இவ்வாறு பல வேறுபாடு வரும்.

வேற்றுமை	உருபு
முதல் வேற்றுமை	—
இரண்டாம் வேற்றுமை	ஐ
மூன்றாம் வேற்றுமை	ஆல், ஒடு, ஓடு
நான்காம் வேற்றுமை	கு
ஐந்தாம் வேற்றுமை	இன், இன்நின்று
ஆறாம் வேற்றுமை	அது
ஏழாம் வேற்றுமை	இல், மேல், இடம்
எட்டாம் வேற்றுமை	(பெயரில் வருஞ் சில திரிபுகள்)

லகர ளகர ணகர னகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமை யுருபினை ஏற்றல் ✓

'அவன்' என்னுஞ் சொல்லோடு வேற்றுமை யுருபு களைச் சேர்த்தால்,

அவனை — (அவன் + ஐ)
அவனொடு — (அவன் + ஒடு)
அவனால் — (அவன் + ஆல்)
அவனுக்கு — (அவன் + உ + கு)
அவனின் — (அவன் + இன்)
அவனது — (அவன் + அது)
அவனிடம் — (அவன் + இடம்)

என வரும். இவற்றுள், நான்காம் வேற்றுமை உருபாகிய கு-வந்த விடத்து, உ-என்னும் எழுத்து வந்துளதன்றோ? இவ்வாறே, ல், ள், ண் இந்த எழுத்துக்களை ஈற்றிலுள்ள சொற்களுக்கும் நான்காம் வேற்றுமையில் உ - வரும்.

ல் —பல் + கு = பல்லுக்கு = பல் + உ + கு
ள் —எள் + கு = எள்ளுக்கு = எள் + உ + கு
ண் —மண் + கு = மண்ணுக்கு = மண் + உ + கு

பயிற்சி

வில், முள், கண், இராமன், தேள், பால் இச்சொற் களுக்கு நான்காம் வேற்றுமை யுருபு சேர்த்துச் சொல்லுக.

தன்மைப்பெயர் வேற்றுமையுருபு ஏற்றல்

என்னை அடித்தான்.　　என்னோடு வந்தான்.

இச்சொற்றொடர்களில், ஐ, ஒடு என்னும் உருபுகளை ஏற்ற

பெயர் யாது? யான் என்பது. யான் என்பது என் என்று திரிந்துளது. ஆதலின், என் + ஐ = என்னை என்று வந்தது. இவ்வாறே,

யாம் என்பது எம் என்றும்,

யாங்கள் என்பது எங்கள் என்றும்,

நாம் என்பது நம் என்றும்

திரிந்து, வேற்றுமையுருபுகளை ஏற்கும்.

பெயர்	வே. 2.	3.	4.	5.	6.	7.
யான்	என்னை	என்னொடு என்னால்	எனக்கு	என்னின்	எனது	என்னிடம்
யாம்	எம்மை	எம்மொடு எம்மால்	எமக்கு	எம்மின்	எமது	எம்மிடம்
யாங்கள்	எங்களை	எங்களொடு எங்களால்	எங்களுக்கு	எங்களின்	எங்களது	எங்களிடம்
நாம்	நம்மை	நம்மொடு நம்மால்	நமக்கு	நம்மின்	நமது	நம்மிடம்

என வரும்.

முன்னிலைப்பெயர் வேற்றுமையுருபு ஏற்றல்

நின்னை அடித்தவன் யாவன்?
உன்னோடு வந்தவர் யாவர்?

இச்சொற்றொடர்களில் ஐ, ஒடு என்னும் உருபுகளை ஏற்ற

பெயர் யாது? நீ என்பது. நீ என்னும் பெயர் எப்படித் திரிந்துளது? முதலில் நின் எனத் திரிந்து, பின்னர் உன் எனத்திரிந்துளது. இவற்றுள், உன் என்பதுவே மிகுதியாக வழங்குகின்றது.

இவ்வாறே, நீர் என்பது நும் என்றாகி, பின்னர் உம் எனத் திரிந்துளது. உம் என்பதுவே வழக்கில் உளது.

நீங்கள் என்பது நுங்கள் என்றாகி, பின்னர் உங்கள் எனத் திரிந்துளது. உங்கள் என்பதுவே வழக்கில் உளது.

பெயர்	வே. 2.	3.	4.	5.	6.	7.
நீ	நின்னை	நின்னொடு நின்னால்	நினக்கு	நின் னின்	நினது	நின் னிடம்
,,	உன்னை	உன்னொடு உன்னால்	உனக்கு	உன் னின்	உனது	உன் னிடம்
நீர்	நும்மை	நும்மொடு நும்மால்	நுமக்கு	நும்மின்	நுமது	நும் மிடம்
,,	உம்மை	உம்மொடு உம்மால்	உமக்கு	உம்மின்	உமது	உம் மிடம்
நீங்கள்	உங்களை	உங்களொடு உங்களால்	உங்க ளுக்கு	உங்க ளின்	உங்க ளது	உங்க ளிடம்

என்று வருதல் காண்க.

இவ்வாறே வேற்றுமையுருபினை ஏற்குமிடத்து,
தான் என்பது தன் எனவும்,
தாம் என்பது தம் எனவும்,
தாங்கள் என்பது தங்கள் எனவும்
திரியும்.

பெயர்	வே. 2	3	4	5	6	7
தான்	தன்னை	தன்னொடு தன்னால்	தனக்கு	தன்னின்	தனது	தன்னிடம்
தாம்	தம்மை	தம்மொடு தம்மால்	தமக்கு	தம்மின்	தமது	தம்மிடம்
தாங்கள்	தங்களை	தங்களொடு தங்களால்	தங்களுக்கு	தங்களின்	தங்களது	தங்களிடம்

என்று வருதல் காண்க.

பெயர்ச்சொற்களில் திணை, பால், எண், இடம், வேற்றுமை இவைகளை அறியலாகும். எப்படி எனின்,

இராமன் பள்ளிக்கூடத்துக்குப் போனான்.

இச் சொற்றொடரில்,

பெயர்	திணை	பால்	எண்	இடம்	வேற்றுமை
இராமன்	உயர்திணை	ஆண்பால்	ஒருமை	படர்க்கை	முதல் வேற்றுமை
பள்ளிக்கூடத்துக்கு	அஃறிணை	ஒன்றன் பால்	ஒருமை	படர்க்கை	நான்காம் வேற்றுமை

என அறிக.

பயிற்சி

அடியிற் காணுஞ் சொற்றொடர்களி லுள்ள பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால் முதலியவற்றைக் குறிக்க.

1. சீதை இராமனோடு காட்டுக்குப் போனாள்.
2. உழவன் நிலத்தை உழுகிறான்.
3. அவன் குதிரையினின்று இறங்கினான்.
4. யானைகள் காடுகளில் திரியும்.

II. வினைச்சொல்

இராமன் ஓடுகிறான்.
கொற்றன் வீட்டைக் கட்டினான்.

இச் சொற்றொடர்களில், இராமன், கொற்றன் என்னுஞ் சொற்கள், பொருள்களின் பெயர்களைக் குறித்தலின், பெயர்ச் சொல் எனப்படுகின்றன. ஓடுகிறான் என்னுஞ் சொல் இராமனது தொழிலையும், கட்டினான் என்னுஞ் சொல் கொற்றனது தொழிலையும் குறித்தலின், அவை வினைச்சொல் எனப்படும்.

நாம் செய்யுந் தொழில்களுள், சில தொழில்களின் பயனுக்கு வேறுபொருள் சார்பாயிருக்கும்; சில தொழில்களின் பயனுக்கு நாமே சார்பாயிருப்போம்.

கொற்றன் வீட்டைக் கட்டினான்

என்பதில், கொற்றன் செய்த தொழில், செங்கல் முதலியவற்றை ஒன்றன்மேல் ஒன்றாக அமைத்தல்; அதன் பயன், சுவர் முதலியன அமைதல். அதற்குச் சார்பாயிருப்பது வீடு.

இராமன் ஓடுகிறான்

என்பதில், இராமன் செய்த தொழில் ஓடுதல். அதன் பயன் இடம்விட்டுப் பெயர்தல். அதற்குச் சார்பாயிருப்பவன் இராமன்.

ஆதலின், கட்டினான் என்பது போலத் தொழிலின் பயனுக்கு வேறு பொருள் சார்பாயிருக்கும் வினைச்சொல் செயப்படு பொருள் உள்ள வினை ஆகும்.

ஓடுகிறான் என்பது போலத் தொழிலின் பயனுக்குத் தொழில் செய்தவனே சார்பாயிருக்கும் வினைச்சொல், செயப்படு பொருள் இல்லாத வினை ஆகும்.

வினைச்சொற்களை, செயப்படு பொருள் உள்ள வினை என்றும், செயப்படு பொருள் இல்லாத வினை என்றும் அறிதற்கு வேறொரு வழி உளது. வினைச்சொல்லுக்குமேல், யாரை அல்லது எதனை என்னுஞ் சொல்லைச் சேர்த்துக் கேள்வி கேட்கவேண்டும். அதற்கு வரும் விடையே செயப்படு பொருள். விடைதரும் வினைச்சொல், செயப்படுபொருள் உள்ள வினை ; விடையாக ஒரு பொருளையும் தாராத வினைச் சொல், செயப்படுபொருள் இல்லாத வினை.

கொற்றன் வீட்டைக் கட்டினான்

என்பதில், கட்டினான் என்பது வினைச்சொல். அதன்மேல், எதனை என்னுஞ் சொல்லைச் சேர்த்து,

எதனைக் கட்டினான்?

என்று கேள்வி கேட்க வேண்டும். அதற்கு வரும் விடை யாது? வீடு என்பது. அதனால், கட்டினான் என்பது செயப்படு பொருள் உள்ள வினை.

இதுபோல, 'இராமன் ஓடுகிறான்' என்பதில், ஓடுகிறான் என்னும் வினைச்சொல்லின்மேல் எதனை என்னுஞ் சொல்லைச் சேர்த்து, 'எதனை ஓடுகிறான்?' என்று கேள்வி கேளுங்கள். அதற்கு வரும் விடை யாது? ஒன்றும் இல்லை. அதனால், ஓடுகிறான் என்பது செயப்படு பொருள் இல்லாத வினை.

பயிற்சி

கீழ்க்காணுஞ் சொற்றொடர்களில் உள்ள வினைச்சொற்களை இன்ன வினைச்சொல் என்று குறிக்க.

1. குதிரை வண்டி இழுக்கின்றது.
2. மரம் அசைகின்றது.
3. பூனை எலியைப் பிடிக்கும்.
4. பிள்ளைகள் ஓடுகின்றார்கள்.

காலம் :

வண்டி வந்தது
வண்டி வருகின்றது
வண்டி வரும்

என்னுஞ் சொற்றொடர்களில், வந்தது என்பது முன்னமே நடந்த செய்தியைக் குறிக்கின்றது; வருகின்றது என்பது இப்போழுது நடக்கின்ற செய்தியைக் குறிக்கின்றது; வரும் என்பது இனிமேல் நடக்கப்போகுஞ் செய்தியைக் குறிக்கின்றது அல்லவா? ஆகலின்,

தொழில் நடந்த காலம் —இறந்த காலம்
தொழில் நடக்கின்ற காலம் —நிகழ் காலம்
தொழில் நடக்கப்போகுங் காலம்—எதிர் காலம்

எனப்படும்.

வினைமுற்று :

தச்சன் நாற்காலியைச் செய்தான்
தச்சன் நாற்காலியைச் செய்து

என்பவற்றில், செய்தான் என்னுஞ் சொல், நாற்காலியைச் செய்தலாகிய வேலை முடிந்தது என்பதைத் தெரிவிக்கின்றது; செய்து என்பது, இன்னும் அவ் வேலை முடியவில்லை என்பதைத் தெரிவிக்கின்றது. செய்தான் என்பதுபோல, பொருள் முடிந்ததை அறிவிக்குஞ் சொல்லுக்கு வினைமுற்று என்பது பெயர்; செய்து என்பதுபோல, பொருள் முடியா திருத்தலை அறிவிக்குஞ் சொல்லுக்கு வினையெச்சம் என்பது பெயர். (எச்சம் - குறைவு)

வினைமுற்றின் வகை :

வினைமுற்று - தன்மை வினைமுற்று, முன்னிலை வினை முற்று, படர்க்கை வினைமுற்று என இட வகையால் மூன்று வகைப்படும்.

அஃது-இறந்தகால வினைமுற்று, நிகழ்கால வினைமுற்று, எதிர்கால வினைமுற்று என கால வகையால் மூன்று வகைப் படும்.

அதுவே - ஒருமை வினைமுற்று, பன்மை வினைமுற்று என எண் வகையால் இரண்டு வகைப்படும்.

உதாரணமாக, செய் என்னும் பகுதி அடியாகப் பிறந்த சொல்லை நோக்குவோம் :

செய் - [ஒருமை வினை]

இடம்	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
தன்மை	செய்தேன்	செய்கின்றேன்	செய்வேன்
முன்னிலை	செய்தாய்	செய்கின்றாய்	செய்வாய்
படர்க்கை ஆண்	செய்தான்	செய்கின்றான்	செய்வான்
,, பெண்	செய்தாள்	செய்கின்றாள்	செய்வாள்
,, ஒன்றன்பால்	செய்தது	செய்கின்றது	செய்யும்

செய் - [பன்மை வினை]

தன்மை	செய்தோம்	செய்கின்றோம்	செய்வோம்
முன்னிலை	செய்தீர்	செய்கின்றீர்	செய்வீர்
	செய்தீர்கள்	செய்கின்றீர்கள்	செய்வீர்கள்
படர்க்கை-பலர்	செய்தார்	செய்கின்றார்	செய்வார்
	செய்தார்கள்	செய்கின்றார்கள்	செய்வார்கள்
,, பலவின்பால்	செய்தன	செய்கின்றன	செய்யும்

என வரும்.

வினையெச்சம்

வினையெச்சம், மற்றொரு வினைச்சொல்லைக் கொண்டு முடியும். செய்து என்பது வினையெச்சச் சொல் அன்றோ? அதனோடு, முடித்தான் என்னும் வினைச்சொல்லைச் சேர்த்துச் சொல்லுங்கள்.

தச்சன் நாற்காலியைச் செய்து முடித்தான். இதில் சொற்றொடர் முடிந்துளது காண்க. இவ்வாறே,

சாத்தன் வந்து உண்டான்
இராமன் உறங்கி எழுந்தான்
முருகன் படித்துத் தேர்ந்தான்

என்பவற்றில், வந்து, உறங்கி, படித்து என்னும் வினையெச்சங்கள், முறையே உண்டான், எழுந்தான், தேர்ந்தான் என்னும் வினைச்சொற்களைக் கொண்டு முடிந்துள்ளன காண்க.

பெயரெச்சம்

படித்து என்னுஞ் சொல், பொருள் முற்றுப்பெறுதது போலவே, படித்த என்னுஞ் சொல்லும் பொருள் முற்றுப்

பெறவில்லை. ஆனால், இவ்விரண்டு சொற்களுக்கும் முடிபில் வேறுபாடு உண்டு. என்ன வேறுபாடு? படித்து என்னுஞ் சொல், தேர்ந்தான் என்னும் வினைச் சொல்லைக் கொண்டு முடிந்ததன்றோ? அதுபோல, படித்த என்னுஞ் சொல், ஒரு வினைச்சொல்லைக் கொண்டு முடியாது.

படித்த தேர்ந்தான்

என்றால், பொருள் அமையவில்லை யல்லவா? இனி, படித்த என்பதனோடு ஒரு பெயர்ச்சொல்லைச் சேர்த்துச் சொல்லுங்கள்.

படித்த மனிதன்.

இதில், மனிதன் என்பது பெயர்ச்சொல்லாகலின், பொருள் அமைதியா யிருக்கின்றது. அதனால், படித்த என்னுஞ் சொல், பெயரெச்சச் சொல் எனப்படும். இவ்வாறே,

வந்த மனிதன்
வருகின்ற மனிதன்
வரும் மனிதன்

என்பவற்றில், வந்த, வருகின்ற, வரும் என்னுஞ் சொற்கள் பெயரெச்சச் சொற்கள் ஆதல் அறிக.

பயிற்சி

அடியிற்காணும் எச்சச் சொற்களோடு ஏற்ற சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. குதிரை ஓடி—
2. அவன் நடந்து—
3. நேற்று வந்த—
4. நான் கடைக்குப் போய்—
5. பசு மேய்ந்து—
6. வயலில் உழுத—
8. நெற்பயிர் விளைந்து—
7. அவன் எழுதின—

III. இடைச்சொல்

முருகன் வந்தான்.
வேலன் வந்தான்.

என்னுமிடத்தில், வந்தான் என்னுஞ் சொல்லை இரண்டு முறை சொல்லுகின்றோம். இவ்வாறு இரண்டு முறை ஒரே சொல்லைச் சொல்வதனால் காலம் கழிகின்றது; எழுதுவதனால் வேலை மிகுகின்றது. ஆதலின், அந்த இரண்டு சொற்றொடர்களையுஞ் சேர்த்து ஒரேசொற்றொடர் ஆக்குதல் நலமன்றோ ?

முருகனும் வேலனும் வந்தனர்

என்றால், ஒரே சொற்றொடராக் அமையும். இதற்கு, எந்தச் சொல் உதவியாயிற்று? உம்-என்பது. இது, சொற்களின் இடையே நிற்றலின், இதனை இடைச்சொல் என்பர். ஐ, ஒடு, முதலிய வேற்றுமையுருபுகளும் பெயர்ச்சொல்லை அடுத்து இடையே வருதலின், அவையும் இடைச்சொல் எனப்படும்.

இராமனைக் கண்டான் — ஐ
இராமனோடு வந்தான் — ஒடு

முதலியன காண்க.

IV. சொற்றொடர்

நாம், நமது கருத்தைத் தெரிவிக்க வேண்டுமாயின், பொருளமைதியான சொற்களைச் சேர்த்துச் சொற்றொடர் ஆக்கிக் கூறுகின்றோம் அல்லவா ? சொற்றொடர் எவ்வாறு அமைந்திருக்கின்றது என்று நோக்குவோம் :

தச்சன் நாற்காலியைச் செய்தான்

என்பதில், செய்தான் என்பது முற்றுவினை. சொற்றொடரி லுள்ள முற்றுவினைக்குப் பயனிலை என்று பெயர். நாற் காலியைச் செய்தவன் தச்சன். ஆதலின், தச்சன் கருத்தா (எழுவாய்) ஆகின்றான். தச்சன் செய்த தொழிலின் பயனுக்குச் சார்பாயிருப்பது நாற்காலி. அதனால், நாற்காலி செயப்படுபொருள் ஆகும். ஆகவே, இச்சொற்றொடரில், முதலில் எழுவாயும், அதனை யடுத்துச் செயப்படுபொரு ளும், கடைசியில் பயனிலையும் அமைந்திருக்கின்றன.

குதிரை ஓடுகின்றது

என்பதில், செயப்படுபொருள் இல்லாததனால், எழுவாயை அடுத்துப் பயனிலை அமைந்துளது.

கோலம் போடுகிறாள்.

இதில் எழுவாய் இருக்கின்றதா? இல்லை. இதில், அவள் என்னும் எழுவாய் மறைந்திருக்கின்றது. இவ்வாறு வெளிப்படாமல் மறைந்துநிற்கும் எழுவாயைத் தோன்றா எழுவாய் என்பர்.

மேற்காட்டிய சொற்றொடர்களி லெல்லாம் பயனிலை வினைச்சொல்லாகவே இருக்கின்றது. சில இடங்களில் பெயர்ச் சொற்களும் பயனிலையாக வரும்.

இது என் வீடு.

இச்சொற்றொடரில், இது என்னும் எழுவாய்க்கு, வீடு என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக நிற்றல் அறிக.

III. புணர்ச்சி

வாழைப்பழம் (வாழை + பழம்), கீரைத்தோட்டம் (கீரை + தோட்டம்) என்னுந் தொடர்களில் இரண்டு இரண்டு சொற்கள் சேர்ந்துள்ளன அல்லவா? தொடர்களில், முதலில் நிற்குஞ் சொல்லுக்கு நிலைமொழி என்றும், அதனோடு வந்து சேருஞ்சொல்லுக்கு வருமொழி என்றும் பெயர். சொற்கள் ஒன்றனோடு ஒன்று சேர்தற்கு, இலக்கணத்தில் 'புணர்ச்சி' என்று பெயர்.

மழை + பெய்தது என்னும் இரண்டு சொல் சேர்ந்து மழை பெய்தது என வரும். இதில் வேறுபாடு ஒன்றுமே உண்டாகவில்லை; சொற்கள் இயல்பாகவே இருக்கின்றன. இவ்வாறு இயல்பாக நிற்றல் இயல்பு புணர்ச்சி எனப்படும்.

வாழை + பழம் என்னும் இரண்டு சொல் சேர்ந்து வாழைப்பழம் என ஆகும். அவ்வாறு ஆகும்போது இடையே 'ப்' தோன்றிய தன்றோ? இப்படி இடையே தோன்றுவது தோன்றல் எனப்படும்.

பணம் + கோடு என்னும் இரண்டு சொல் சேர்ந்து பணங்கோடு என ஆகும். அவை சேர்ந்தபோது என்ன வேறுபாடு உண்டாயிற்று?

பணம் என்பதிலுள்ள மகரமெய் (ம்), ஙகரமெய் (ங்) ஆயிற்று. இவ்வாறு ஓரெழுத்து வேறோர் எழுத்தாக மாறுவது திரிதல் எனப்படும்.

மரம் + வேர் என்னும் இரண்டு சொல் சேர்ந்து, மரவேர் என ஆகும். அவை சேர்ந்தபோது என்ன வேறுபாடு நேர்ந்துளது?

மரம் என்பதிலுள்ள மகரமெய் (ம்) கெட்டது. இவ்வாறு கெடுவது, கெடுதல் எனப்படும்.

தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூவகைப் புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சி எனப்படும்.

ஆகலின் இயல்பு, தோன்றல், திரிதல், கெடுதல் எனப் புணர்ச்சி நான்கு வகைப்படும்.

(1) உயிர்முன் உயிர்

மாவிலை, பனையோலை என்னுந் தொடர்களைப் பாருங்கள்.

மா + இலை = மாவிலை (மா + வ் + இலை)
பனை + ஓலை = பனையோலை (பனை + ய் + ஓலை)

இவற்றில் இடையே, வ், ய் என்னும் மெய்யெழுத்துக்கள் வந்துள்ளன. அவை வருதல் என்? உயிரெழுத்திற்கு முன் உயிரெழுத்து வரின், அவற்றை ஒருங்கே சேர்த்துச் சொல்லுதல் இயலாது. அதனால், இடையே வ், அல்லது ய் வருகின்றது. அவற்றிற்கு உடம்படுமெய் என்று பெயர்.

மரவுரல்	— (மர + வ் + உரல்)
மாவிலை	— (மா + வ் + இலை)
தெருவோரம்	— (தெரு + வ் + ஓரம்)
பூவரசு	— (பூ + வ் + அரசு)
சேவுழவு	— (சே + வ் + உழவு) [சே-எருது.]
கோவூர்	— (கோ + வ் + ஊர்)

இவற்றில், இடையே வகரமெய் வந்துளதன்றே? இதனால், அ, ஆ, உ, ஊ, ஏ, ஓ என்னும் உயிரீற்று மொழிகளுக்குமுன் உயிர் முதன்மொழி வரின், இடையே வகரமெய் (வ்) தோன்றும் என அறிக.

மணியொளி — (மணி + ய் + ஒளி)
தீயனல் — (தீ + ய் + அனல்)
பனையோலை — (பனை + ய் + ஓலை)

இவற்றில், இடையே யகரமெய் வந்துளதன்றே? இதனால், இ, ஈ, ஐ என்னும் உயிரீற்று மொழிகளுக்குமுன் உயிர் முதன்மொழி வரின், இடையே யகரமெய் (ய்) தோன்றும் என அறிக.

அவ்வூர்	— (அ + வ் + ஊர்)	உயிர்
இவ்வேடு	— (இ + வ் + ஏடு)	உயிர்
எவ்வோலை	— (எ + வ் + ஓலை)	உயிர்
அவ்யானை	— (அ + வ் + யானை)	— யகரம்

இவற்றின் இடையே வகரமெய் தோன்றிற்று அன்றே? இதனால், அ, இ என்னுஞ் சுட்டெழுத்துக்களுக்கு முன்னும், எ என்னும் வினாஎழுத்திற்கு முன்னும் உயிரெழுத்துக்களும் யகரமும் வரின், இடையே வகரமெய் தோன்றும் என அறிக.

(2) உயிர்முன் மெய்

1. அ, இ என்னுஞ் சுட்டெழுத்துக்களுக்கு முன்னும், எ என்னும் வினாவெழுத்துக்கு முன்னும் வரும் க, ச, ஞ, த, ந, ப, ம, வக்கள் மிகும்.

அ—	அ + குளம்	= அக்குளம்		
	அ + சோலை	= அச்சோலை		
	அ + ஞாண்	= அஞ்ஞாண்		சுட்டு
இ—	இ + தெரு	= இத்தெரு		
	இ + நாடு	= இந்நாடு		
	இ + பக்கம்	= இப்பக்கம்		
எ—	எ + மலை	= எம்மலை?	வினா	
	எ + வழி	= எவ்வழி?		

என, க - முதலிய எட்டெழுத்தும் மிக்கு வந்தன காண்க.

2. அந்த, இந்த, எந்த என்னுஞ் சொற்களுக்குமுன், க, ச, த, பக்கள் மிகும்.

அந்த + குளம் = அந்தக் குளம்
அந்த + சிறுவன் = அந்தச் சிறுவன்
இந்த + தோட்டம் = இந்தத் தோட்டம்
எந்த + பக்கம் = எந்தப் பக்கம்?

3. அப்படி, இப்படி, எப்படி என்னுஞ் சொற்களுக்குமுன், க, ச, த, பக்கள் மிகும்.

அப்படி + கூறினன் = அப்படிக் கூறினன்
இப்படி + சொன்னன் = இப்படிச் சொன்னன்
எப்படி + தெரியும் = எப்படித் தெரியும்?
எப்படி + படித்தான் = எப்படிப் படித்தான்?

(3) மெய்முன் உயிர்

தூணுயரம் — (தூண் + உயரம்)
நோயாளி — (நோய் + ஆளி)
போரூர் — (போர் + ஊர்)
மேலூர் — (மேல் + ஊர்)

பாழூர் — (பாழ் + ஊர்)
வாளொளி — (வாள் + ஒளி)
கானாறு — (கான் + ஆறு)

என்பவற்றில், ண், ய், ர், ல், ழ், ள், ன் என்னும் மெய்யெழுத்துக்களுக்கு முன் உயிர்கள் வந்தவிடத்து, அம்மெய்கள் இயல்பாக நின்றன. ஆனால்,

கண்ணொளி — (கண் + ண் + ஒளி)
நெய்யாறு — (நெய் + ய் + ஆறு)
நெல்லூர் — (நெல் + ல் + ஊர்)
எள்ளளவு — (எள் + ள் + அளவு)
மின்னொளி — (மின் + ன் + ஒளி)

என்பவற்றில், ண், ய், ல், ள், ன் இம்மெய்யெழுத்துக்களுக்கு முன் உயிர்முதன் மொழி வரும்போது என்ன ஆயிற்று? ண், ய் முதலிய மெய்யெழுத்துக்கள் இரட்டின. ஏன்? அவை, ஒரு குற்றெழுத்தினை அடுத்து நின்றதனால் இரட்டின.

இவற்றால், தனிக் குற்றெழுத்துக்களை அடுத்திருக்கும் மெய்கள், உயிர்வரின் இரட்டும் எனவும், மற்ற இடங்களில் இருக்கும் மெய்கள் இரட்டா எனவும் அறியலாகும்.

மொழியின் இடையில் எழுத்துக்களின் அமைதி

தமிழ்மொழியில், எல்லா மெய்யெழுத்துக்களோடும் எல்லா மெய்யெழுத்துக்களும் சேர்ந்து வரமாட்டா. முக்கியமாக நாம் அறிய வேண்டியவை சில உள. அவையாவன:

ங்—இதற்குமுன், வல்லெழுத்துக்களுள் க - ஒன்றே வரும்; பிற எழுத்துக்கள் வரமாட்டா.

தங்கம்—க

ஞ்—இதற்குமுன், வல்லெழுத்துக்களுள் சகரம் ஒன்றே வரும்.

பஞ்சம்—ச

ண்—இதற்கு முன், வல்லெழுத்துக்களுள் க, ச, ட, ப இவை வரும். [த, ற இரண்டும் வரமாட்டா.]

வெண்கலம்	— க	அண்டர்	— ட
மண்சட்டி	— ச	நண்பன்	— ப

ங்—இதற்குமுன், வல்லெழுத்துக்களுள் த ஒன்றே வரும்.

பங்தம் — த

ம்—இதற்குமுன், வல்லெழுத்துக்களுள் ப ஒன்றே வரும்.

அம்பலம் — ப

ன்—இதற்குமுன், வல்லெழுத்துக்களுள் க, ச, ப, ற இவை வரும். [ட, த இரண்டும் வரமாட்டா]

புன்கண்	— க	அன்பன்	— ப
வன்சமர்	— ச	தென்றல்	— ற

இதனல், ஒரு சொல்லில்

1. தகாரத்திற்குமேல் மெல்லெழுத்துக்களுள் ங் ஒன்றே இருக்கும் என்றும்,

2. டகாரத்திற்குமேல், மெல்லெழுத்துக்களுள் ண் ஒன்றே இருக்கும் என்றும்,

3. றகாரத்திற்குமேல், மெல்லெழுத்துக்களுள் ன் ஒன்றே இருக்கும் என்றும் அறிந்துகொள்ளலாம். ஆதலின்,

வங்தான் என்பதுபோன்ற சொற்களில், தகாரத்திற்கு மேல், ங் - அன்றி, ன், ண் இவை நிற்கமாட்டா.

கண்டான் என்பதுபோன்ற சொற்களில், டகாரத்திற்கு மேல், ண் - அன்றி, ங், ன் இவை நிற்கமாட்டா.

நின்றுன் என்பதுபோன்ற சொற்களில், றகாரத்திற்கு மேல், ன்-அன்றி, ண், ங் இவை நிற்கமாட்டா என அறிக.

இரண்டாம் பகுதி

I. எழுத்து

I. முதலெழுத்து

1. சுட்டெழுத்து

அகச்சுட்டு, புறச்சுட்டு

அவன்
அம் மனிதன்

என்னும் இரண்டு சொற்களும் மனிதனொருவனைச் சுட்டுகின்றன. ஆனால் அவன் என்னுஞ் சொல்லில் அ, என்பது சுட்டாயிருப்பினும், அது, அச் சொல்லைவிட்டுப் பிரிந்திருக்கவில்லை. அதில், அ என்பதை நீக்கிவிட்டால், பிறகு, 'அன்' என்பது தனியே வழங்காது. அம் மனிதன் என்பதில், அ என்பதை நீக்கிவிட்டால், மனிதன் என்னுஞ் சொல் தனியே வழங்கும். ஆகலின், அவன் என்பதிற் போலச் சொல்லின் அகத்தே யிருக்குஞ் சுட்டினை அகச்சுட்டு என்பர்.

அகச்சுட்டு:

அவன்	அது	இவன்	இது
அவள்	அவை	இவள்	இவை
அவர்		இவர்	

புறச்சுட்டு:

அம்மனிதன் இம்மனிதன்

இங்கு, அகர இகரங்கள், மனிதன் என்னும் சொற்குப் புறத்தே நின்று சுட்டுதல் காண்க. [புறம்—வெளி]

அலை, இலை என்பவற்றின் முதலில், அகரம் இகரம் இருப்பினும், அவை சுட்டிக்காட்ட வருதல் இல்லை. அன்றியும், அவன், இவன் என்னுஞ் சொற்களில், அ, இ க்கள் பிரிந்துநின்றும் பொருள் தருதல்போல, அலை, இலை என்னுஞ் சொற்களில், அ, இ க்கள் பிரிந்துநின்று பொருள் தரமாட்டா. அதனால், அவற்றில் இருக்கும் அகர இகரங்கள், சுட்டெழுத்துக்கள் ஆவன அல்ல.

2. வினாவெழுத்து

அகவினா:

எவன் ?

எம் மனிதன் ?

என்னும் இரண்டு சொற்களிலும், எ - என்பது வினாப் பொருளைத் தரினும், எவன் என்பதில், எகரம் சொல்லின் அகத்திலேயே நின்று வினாப்பொருளைத் தருதலின், அதில், எ-என்பது அகவினா ஆகும். ஆகலின்,

எவன்	யாவன்	யாது	எது	ஏது
எவள்	யாவள்	யாவை	எவை	
எவர்	யாவர்			

இங்கு, எ, யா, ஏ இம் மூன்றும் அகவினா எனப்படும்.

புறவினா:

எம் மனிதன் என்பதில், எ-என்பது, மனிதன் என்னுஞ் சொல்லிற்குப் புறத்தே நின்று வினாப்பொருளைத் தருகின்றது. அதனால் இங்கு, எ-என்பது புறவினா ஆகும்.

3. இனவெழுத்து

உயிரெழுத்துக்களுள், குற்றெழுத்துக்களை நீட்டி ஒலிக்கின், அவை நெட்டெழுத்துக்கள் ஆகும். அதனால், அந்நெட்டெழுத்துக்களுக்கு அக்குற்றெழுத்துக்கள் இனவெழுத்து எனப்படும்.

ஆகாரத்திற்கு	இனவெழுத்து	அகரம்
ஈகாரத்திற்கு	,,	இகரம்
ஊகாரத்திற்கு	,,	உகரம்
ஏகாரத்திற்கு	,,	எகரம்
ஓகாரத்திற்கு	,,	ஒகரம்

எனக் கொள்க.

ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் இனமாகிய குற்றெழுத்துக்கள் இல்லையல்லவா? ஐ என ஒலியுங்கள். அதன் இறுதியில், இ என்னும் ஒலி கேட்கும்; அவ்வாறே ஔ என ஒலியுங்கள். அதன் இறுதியில், உ என்னும் ஒலி கேட்கும். ஆகலின்,

ஐகாரத்திற்கு	இனவெழுத்து	இகரம்
ஔகாரத்திற்கு	,,	உகரம்

என்று கொள்வர்.

மெய்யெழுத்துக்களுள், வல்லெழுத்துக்களுக்கு மெல்லெழுத்துக்கள் இனவெழுத்து ஆகும். எவ்வாறு எனின்,

ககரத்திற்கு	இனவெழுத்து		ஙகரம்
ச	,,	,,	ஞகரம்
ட	,,	,,	ணகரம்
த	,,	,,	நகரம்
ப	,,	,,	மகரம்
ற	,,	,,	னகரம்

ஆகும். இடை யெழுத்துக்களுள் இப்படிப்பட்ட பிரிவு இல்லை; அவை ஆறும் ஓர் இனமாகவே கொள்ளப்படும்.

II. சார்பெழுத்து

1. குற்றியலுகரம்

நகு	நாகு	சுளகு
முசு	மாசு	பலாசு
அடு	ஆடு	அகடு
எது	காது	எருது
தபு	காபு	காப்பு
கறு	தாறு	கயிறு

என்னுஞ் சொற்களில், கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களின் ஒலி எவ்வாறு கேட்கின்றது என நன்கு கவனியுங்கள்.

நகு, முசு, அடு, அது, தபு, கறு என்னுஞ் சொற்களில், கு, சு, டு, து, பு, று இவற்றின் ஒலி நன்கு கேட்கும்.

நாகு, மாசு; சுளகு, பலாசு முதலிய சொற்களில், கு, சு முதலிய எழுத்துக்களின் ஒலி, அவ்வாறு கேட்காது; குறுகி

யதாய்க் கேட்கும். இப்படிப்பட்ட இடங்களில் குறுகி ஒலிக்கும் உகரத்திற்கு, குற்றியலுகரம் என்பது பெயர்.

நகு, முசு, அடு, எது, தபு, கறு என்பவற்றில் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்கள் ஏன் குறுகவில்லை? அவை, ந, மு, அ, எ, த, க என்னுந் தனிக்குற்றெழுத்தை அடுத்து நிற்றலின் குறுகவில்லை.

இதனால் கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு எழுத்துக்களும் தனிக்குற்றெழுத்தை அடுத்து நிற்பின் குறுகமாட்டா எனவும், மற்ற எழுத்துக்களை அடுத்து நிற்கும் இடங்களிலெல்லாம் குறுகும் எனவும் அறியலாகும். மற்றைய இடம் ஆறு. அவை நெட்டெழுத்து முதலியன.

1. பாகு - கு, நெட்டெழுத்தை அடுத்து வந்தது
2. வரகு - கு, உயிரெழுத்தை அடுத்து வந்தது
3. சுக்கு - கு, வல்லெழுத்தை அடுத்து வந்தது
4. பங்கு - கு, மெல்லெழுத்தை அடுத்து வந்தது
5. தெள்கு - கு, இடையெழுத்தை அடுத்து வந்தது
6. எஃகு - கு, ஆய்தஎழுத்தை அடுத்து வந்தது

சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களும் இவ்வாறே ஆறு எழுத்துக்களையும் அடுத்து வரும்.

குறிப்பு:— வரகு என்பதில், ர உயிர்மெய்யெழுத்தாயினும் அதனைப் பிரித்தால், ர்+அ என்று ஆகுமாகலின், கு-அகரவுயிரை அடுத்து வந்தது எனக் கொள்க. இவ்வாறே, பலாசு என்பதில், சு - ஆகாரவுயிரை அடுத்துவந்ததாகக் கொள்க.

நெட்டெழுத்தினை அடுத்துவரும் உகரம்-நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

உயிரெழுத்தினை	,,	,, உயிர்த்தொடர்க்	,,
வல்லெழுத்தினை	,,	,, வன்றொடர்க்	,,
மெல்லெழுத்தினை	,,	,, மென்றொடர்க்	,,
இடையெழுத்தினை	,,	,, இடைத்தொடர்க்	,,
ஆய்தவெழுத்தினை	,,	,, ஆய்தத்தொடர்க்	,,

எனப் பெயர் பெறும்.

1. நெடிற்றொடர்க் குற்றியலுகரம்
   பாகு, காசு, மாடு, காது, காபு, ஏறு.
2. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
   வரகு, பலாசு, கரடு, எருது, மரபு, கயிறு.
3. வன்றொடர்க் குற்றியலுகரம்
   சுக்கு, அச்சு, வட்டு, பத்து, தப்பு, புற்று.
4. மென்றொடர்க் குற்றியலுகரம்
   அங்கு, பஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று.
5. இடைத்தொடர்க் குற்றியலுகரம்
   தெள்கு, வீழ்து, மார்பு.
6. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
   எஃகு, கஃசு, அஃது.

குறிப்பு:—வல்லெழுத்தை ஊர்ந்துவரும் உகரமே குறுகும்; **மற்றைய உகரங்கள் எவ்விடத்திலும் குறுகமாட்டா; ஆகலின் அவை முற்றியலுகரம்** எனப்படும்.

குற்றியலுகரம் அரைமாத்திரை யளவு ஒலிக்கும்.

பயிற்சி

கீழ்வருஞ் சொற்களுள், குற்றியலுகரவீற்றுச் சொற்களையும் முற்றியலுகரவீற்றுச் சொற்களையும் எடுத்து எழுதுக. குற்றியலுகரவீற்றுச் சொற்களுக்குத் தொடரும் குறிக்க.

சுக்கு	மோரு	கதவு	செலவு
கடு	ஆடு	மன்று	யாண்டு
மார்பு	பதக்கு	தெரு	மடு

2. குற்றியலிகரம்

குற்றியலுகரவீற்றுச் சொற்களுக்குமுன், யகர முதன் மொழி வரின், அக் குற்றியலுகரம் இகரமாகத் திரியும். அந்த இகரமும் அரைமாத்திரை யளவாகவே ஒலிக்கும். அதனால், அது குற்றியலிகரம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

நாடு + யாது = நாடியாது

குரங்கு + யாது = குரங்கியாது

என வரும். இவற்றில் நாடு, குரங்கு என்பவற்றின் உகரம் இகரமாகத் திரிந்துளது காண்க.

II. பதம்

தெரு, கல், கணக்கன், பொன்னன் என்னுஞ் சொற்களை நோக்குங்கள். இவற்றுள்,

கணக்கன் என்பதை, கணக்கு + அன் என்றும்,

பொன்னன் என்பதை, பொன் + அன் என்றும்

பிரிக்கலாம். தெரு, கல் என்பவற்றை இவ்வாறு பிரிக்க முடியுமா? முடியாது. கணக்கன், பொன்னன் என்பவை

போல, பிரிக்கத் தக்கதா யுள்ள சொல்லுக்குப் பகுபதம் என்பது பெயர். தெரு, கல் என்பவைபோல, பிரிக்க முடியாதிருக்குஞ் சொல்லுக்குப் பகாப்பதம் என்பது பெயர்.

ஒரு பதத்தைப் பிரித்துக் காணும்போது, அதில், முதலில் நிற்கும் உறுப்பிற்கு முதல்நிலை (பகுதி) என்றும், இறுதியில் நிற்கும் உறுப்பிற்கு இறுதிநிலை (விகுதி) என்றும், அவ்விரண்டற்கும் இடையே நிற்கும் உறுப்பிற்கு, இடைநிலை என்றும் பெயரிட்டிருக்கின்றனர். இம்மூன்று உறுப்பும் எல்லா வினைச்சொற்களிலும் உண்டு. இவையே யன்றி வேறு சில உறுப்புக்களும் வினைச்சொற்களில் இருக்கும். ஆயினும் அவை எல்லாவினைச்சொற்களிலும் இருத்தல் இல்லை.

சொல்	முதல் நிலை	இடை நிலை	இறுதி நிலை
செய்தான்	செய்	த்	ஆன்
செய்கின்றான்	செய்	கின்று	ஆன்
செய்வான்	செய்	வ்	ஆன்

பயிற்சி

ஓடினான், ஆடுகின்றான், பாடுவான், காண்பான் இச்சொற்களின் முதல்நிலை இடைநிலை இறுதிநிலைகளைக் குறிக்க.

சொல்	முதல் நிலை	இடை நிலை	இறுதி நிலை

III. சொல்

1. பெயர்ச் சொல்

நாற்காலி, பறவை என்பவை போன்ற சில பெயர்களுக்குச் சொற்பொருள் தெரிகின்றது; இலை, கல் என்பவை போன்ற பெயர்களுக்குச் சொற்பொருள் தெரியவில்லை. சொற்பொருள் தெரிகின்ற பெயர்களுக்குக் காரணப் பெயர் என்றும், சொற்பொருள் தெரியாத பெயர்களுக்கு இடுகுறிப் பெயர் என்றும் பெயர் வழங்கும். [இடுகுறிப்பெயர்-பொருள்களுக்கு அடையாளமாக இட்ட பெயர்.]

காரணப் பெயர்:

நாற்காலி—நான்கு காலை உடையது
பறவை —பறப்பது
வளையல் —வளைந்திருப்பது
சிலம்பு —(சிலம்புவது) ஒலிப்பது
கணக்கன்—கணக்கு எழுதுவோன்

முதலியன.

இடுகுறிப் பெயர்:

தலை, கண், கால், தெரு, சோலை, இரவு, நாள் முதலியன.

பெயர்களின் வகைகள்

பெயர்கள்—1பொருட்பெயர், 2இடப்பெயர், 3காலப் பெயர், 4சினைப் பெயர், 5பண்புப் பெயர், 6தொழிற்பெயர்; என அறுவகைப்படும் என்று மேலே படித்திருக்கின்றோம்.

அவையே யன்றி, சுட்டுப் பெயர், வினாப்பெயர் என வேறு இரண்டு பெயர்களும் உள்ளன. [இவையும், மேற்கூறிய ஆறுவகைப் பெயர்களுள் அடங்கும்.]

சுட்டுப்பெயர்.

அவன்	இவன்	அது	இது
அவள்	இவள்	அவை	இவை
அவர்	இவர்		

வினாப்பெயர்

எவன்	யாவன்	எது	எவை
எவள்	யாவள்	யாது	யாவை
எவர்	யாவர்		

ஆகுபெயர்:

வீட்டுக்கு வெள்ளை யடித்தான் என்பதில், வெள்ளை என்பது சுண்ணும்பினைக் குறிக்கின்றதன்றோ? வெள்ளை என்பது ஒரு நிறத்தின் பெயர். அது, இங்கு வெள்ளை நிறமுள்ள சுண்ணும்பிற்குப் பெயராகி வந்திருக்கின்றது. இவ்வாறே, ஒன்றன் பெயர் அதன் சம்பந்தம் உள்ள வேறொரு பொருளுக்குப் பெயராகி வருதல் உண்டு. அப்படிப்பட்ட பெயர்களை ஆகுபெயர் என்று வழங்குவர். ஆகுபெயர் பலவகைப்படும்.

(1) முதலாகு பெயர்:

இலக்குமி தாமரையில் இருப்பாள்

என்பதில், தாமரை என்னும் (முதற்)பொருளின் பெயர்

அதன் பூவிற்கு ஆயிற்று. என்னெனின், இலக்குமி யிருப்பது தாமரைப் பூவிலாகலின். அதனால், இங்கே தாமரை என்பது முதலாகுபெயர். இது, பொருளாகுபெயர் எனவும் படும்.

(2) சினையாகு பெயர் :

தலைக்கு ஒரு மாம்பழம் கொடு

என்பதில், தலை என்னுஞ் சினைப்பெயர் அதனையுடைய முதற் பொருளுக்கு, அஃதாவது மனிதனுக்கு ஆயிற்று. ஆதலின், தலை என்பது இங்கே சினையாகுபெயர்.

(3) இடவாகு பெயர் :

ஐரோப்பிய யுத்தத்தில் இந்தியா பேருதவி செய்தது

என்பதில், இந்தியா என்னும் இடப்பெயர் இந்தியாவில் இருக்கும் மனிதர்களைக் குறித்தது; அதனால், இந்தியா என்பது இடவாகு பெயர்.

(4) காலவாகு பெயர் :

ஞானிகள் முக்காலமும் அறிந்தவர்கள்

என்பதில், முக்காலம் என்னுங் காலப்பெயர் மூன்று காலத்துச் செய்திகளுக்குப் பெயராயிற்று. அதனால், இங்கே காலம் என்பது காலவாகு பெயர்.

(5) பண்பாகு பெயர் :

சிறுவர்களுக்கு இனிப்புக் காட்டலாகாது

என்பதில், இனிப்பு என்னும் பண்புப்பெயர் இனிமையுள்ள பண்டங்களுக்குப் பெயராயிற்று. அதனால், இனிப்பு என்பது பண்பாகுபெயர்.

(6) தொழிலாகு பெயர் :

நான், பொங்கல் சாப்பிட்டேன்

என்பதில், பொங்கல் என்னுந் தொழிற்பெயர் பொங்குவதனாலாகிய ஒருவகை உணவிற்குப் பெயர் ஆயிற்று. அதனால், பொங்கல் என்பது தொழிலாகு பெயர்.

1. திணை

திணை-உயர்திணை எனவும், அஃறிணை எனவும் இரண்டு வகைப்படும் என்று மேலே படித்திருக்கின்றோமல்லவா? மனிதர், உயர்திணைப்பொருள்களாகலின், அவர்களைக் குறிக்குஞ் சொல், உயர்திணைச் சொல் எனப்படும். ஆயினும் மனிதரது உடம்பினையும், உறுப்புக்களையும், உயிரையும் பிரித்துக் கூறின், அச்சொற்கள் அஃறிணைச் சொற்களே யாகும். எப்படியெனின்,

அவன் அறிவு மிக்கவன்

என்னுமிடத்தில், அவன் என்னுஞ் சொல் உயர்திணைச் சொல்லாயிருக்கின்றது.

அவனது உடம்பு பருத்திருக்கின்றது

என்னுமிடத்தில், உடம்பு என்னுஞ் சொல் அஃறிணைச் சொல்லாயிருக்கிறது.

அவன் தலை சிறியது
இவன் உயிர் நீங்கிற்று

என்பவற்றில், தலை, உயிர் என்னும் பெயர்கள் அஃறிணைச் சொற்களே யாதல் அறிக.

கடவுள், சூரியன், சந்திரன் முதலிய பொருள்களை உயர்திணையாகவும், அஃறிணையாகவும் வழங்குதல் உண்டு.

உயர்திணை	அஃறிணை
கடவுள் இருக்கின்றார்	— கடவுள் இருக்கின்றது
சூரியன் மறைந்தான்	— சூரியன் மறைந்தது
சந்திரன் உதித்தான்	— சந்திரன் உதித்தது

2. பால்

பால் என்பது பகுப்பு ; அஃதாவது பிரிவு. பால் ஐந்து வகைப்படும். அவற்றுள்,

உயர்திணைப் பால்கள் 3 :

ஆண்பால் — இராமன், முருகன், தந்தை, அண்ணன்.
பெண்பால் — சீதை, வள்ளி, தாய், அக்கை.
பலர்பால் — மாந்தர், மக்கள், தாயர், அவர்கள்.

அஃறிணைப் பால்கள் 2 :

ஒன்றன்பால்—யானை, குதிரை, எறும்பு, மரம்.
பலவின்பால்—யானைகள், குதிரைகள், எறும்புகள், மரங்கள்.

உயர்திணை ஆண்பாலைக் குறித்தற்கு அன், ஆன், மன், மான் என்னும் விகுதிகள் வரும்.

அன் —பொருளன் =(பொருள் + அன்)
ஆன் —நாட்டான் =(நாடு + ஆன்)
மன் —வடமன் =(வடக்கு + மன்)
மான் —கோமான் =(கோ + மான்)

என்பன காண்க.

உயர்திணைப் பெண்பாலைக் குறித்தற்கு, அள், ஆள், இ என்னும் விகுதிகள் வரும்.

அள்	—குழையள்	=(குழை + அள்)
ஆள்	—இல்லாள்	=(இல் + ஆள்)
இ	—பொன்னி	=(பொன் + இ)

1. ஆண்பாலில், அன் விகுதி பெறும் பெயர்கள், பெண்பாலில் அள் விகுதி பெறும்.

ஆண்பால்	பெண்பால்
அவன்	அவள்
இவன்	இவள்
எவன்	எவள்
நல்லவன்	நல்லவள்

2. ஆண்பாலில் அன் விகுதி பெறும் பெயர்கள், பெண்பாலில் இ விகுதி பெறுதலும் உண்டு.

ஆண்பால்	பெண்பால்
அரசன்	அரசி
தலைவன்	தலைவி
தோழன்	தோழி
பாட்டன்	பாட்டி
மாமன்	மாமி
செவிடன்	செவிடி
குருடன்	குருடி

3. *ஆண்பாலில் அன் விகுதி பெறும் ஜாதிப் பெயர், பெண்பாலில் தி, அல்லது சி விகுதி பெறும்.*

ஆண்பால்	பெண்பால்	
மறவன்	மறத்தி	தி
குயவன்	குயத்தி	
குறவன்	குறத்தி	
இடையன்	இடைச்சி	சி
கணக்கன்	கணக்கச்சி	
வாணியன்	வாணிச்சி	

4. *ஆண்பாலில் ஆன் விகுதி பெறும் ஜாதிப் பெயர், பெண்பாலில் தி விகுதி பெறும்.*

ஆண்பால்	பெண்பால்
தட்டான்	தட்டாத்தி
கன்னான்	கன்னாத்தி
வண்ணான்	வண்ணாத்தி

5. *ஆண்பாலில் காரன் என்று முடியும் பெயர்கள், பெண்பாலில் காரி என்று முடியும்.*

ஆண்பால்	பெண்பால்
வேலைக்காரன்	வேலைக்காரி
கூலிக்காரன்	கூலிக்காரி
கடைக்காரன்	கடைக்காரி
வீட்டுக்காரன்	வீட்டுக்காரி

6. சில பெயர்கள், ஆண்பால் பெண்பால் இரண்டற்கும் ஒன்றுபோலவே வரும்.

ஆண்பால்	பெண்பால்	
அவன் நோயாளி	அவள் நோயாளி	தமிழ்ப் பெயர்
அவன் குற்றவாளி	அவள் குற்றவாளி	
அவன் கடனாளி	அவள் கடனாளி	
அவன் சாது	அவள் சாது	வட மொழிப் பெயர்
அவன் பாவி	அவள் பாவி	
அவன் புத்திசாலி	அவள் புத்திசாலி	
அவன் தைரியசாலி	அவள் தைரியசாலி	
அவன் குணசாலி	அவள் குணசாலி	

7. ஆண்பாலின் வான் என்று முடியும் வடமொழிப் பெயர், பெண்பாலில் வதி என்று முடியும்.

ஆண்பால்	பெண்பால்
குணவான்	குணவதி
பாக்கியவான்	பாக்கியவதி
புண்ணியவான்	புண்ணியவதி

8. சில பெயர் ஆண்பாலில்மட்டுமே வரும்.

குரிசில், தோன்றல், விடலை முதலியன

[இவற்றிற்கு நேரான பெண்பாற்பெயர்கள் இல்லை.]

9. சில பெயர்கள் பெண்பாலில்மட்டுமே வரும்

செவிலி, தையல், மங்கை, மடந்தை முதலியன.

[இவற்றிற்கு நேரான ஆண்பாற்பெயர்கள் இல்லை.]

உயர்திணைப் பலர்பால் :

உயர்திணைப் பலர்பாற்பொருளை ஆண்பாற்பலர், பெண்பாற்பலர், இருபாற்பலர் என மூன்று பகுதியாகப் பிரிக்கலாம்.

ஆண்பாற்பலர் —அரசர், புதல்வர்
பெண்பாற்பலர்—பெண்டிர்
இருபாற்பலர் —மக்கள்

அஃறிணை ஒன்றன்பால் :

து - விகுதி பெற்றுள்ள பெயர், அஃறிணை ஒன்றன் பாற் பெயராகும்.

அது, எது, நல்லது, பெரியது, இனியது முதலாயின.

அஃறிணைப் பலவின்பால் :

அ, வை, கள்-இவ்விகுதி பெற்றுள்ள பெயர்கள், பலவின்பாற் பெயர்களாகும்.

அ — நல்லன, சிறியன, உள்ளன
வை — நல்லவை, சிறியவை, உள்ளவை
கள் — குதிரைகள், யானைகள்

அஃறிணைப்பாற் பொதுப்பெயர் :

மேற்கூறிய, து, அ, வை, கள்—இவ் விகுதிகள் இல்லாத அஃறிணைப் பெயர்களை ஒன்றன்பா லாகவும் பலவின்பா லாகவும் செய்யுளில் வழங்குவர். இவை, பால்பகா அஃறிணைப் பெயர் எனப்படும்.

மரம் வளர்கின்றது—ஒன்றன்பால்
மரம் வளர்கின்றன—பலவின்பால்

3. எண்

ஒரு பொருளைக் குறிக்குஞ் சொல், ஒருமைச் சொல் எனவும், ஒன்றற்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்குஞ் சொல், பன்மைச் சொல் எனவும் வழங்கப்படும்.

ஒருமை :

உயர்திணையில், ஆண்பாலைக் குறிக்குஞ் சொல்லும் பெண்பாலைக் குறிக்குஞ் சொல்லும், அஃறிணையில் ஒன்றன் பாலைக் குறிக்குஞ் சொல்லும் ஒருமைச்சொல் ஆகும்.

இராமன் —உயர்திணை ஆணொருமை
சீதை —உயர்திணைப் பெண்ணொருமை
குதிரை, நாற்காலி—அஃறிணை யொருமை

பன்மை :

உயர்திணையில், பலரைக் குறிக்குஞ் சொல்லும், அஃறிணையில் பலவற்றைக் குறிக்குஞ் சொல்லும் பன்மைச் சொல் ஆகும்.

அவர்கள் —உயர்திணைப் பன்மை
குதிரைகள்—அஃறிணைப் பன்மை

உயர்திணைப் பன்மை :

1. னகார ஈற்று ஒருமைப்பெயரை, ரகார ஈறு ஆக்கின், பன்மைப்பெயர் ஆகும்.

ஒருமை	பன்மை
அரசன்	அரசர்
அமைச்சன்	அமைச்சர்
தோழன்	தோழர்

2. உயர்திணை ஒருமைப்பெயரோடு அர் விகுதி சேர்த்தால், பன்மைப்பெயர் ஆகும்.

ஒருமை				பன்மை
தந்தை	+	அர்	=	தந்தையர்
தாய்	+	அர்	=	தாயர்
அரசி	+	அர்	=	அரசியர்
தோழி	+	அர்	=	தோழியர்

3. உயர்திணை ஒருமைச் சொல்லோடு, மார் என்னும் விகுதியைச் சேர்த்தால் பன்மைச் சொல் ஆகும். மார் விகுதியோடு கள் என்பதைச் சேர்த்துக் கூறுதலும் உண்டு.

ஒருமைப்பெயர்		பன்மைப்பெயர்
தம்பி + மார்,கள்	=	தம்பிமார், தம்பிமார்கள்
செட்டி + மார்,கள்	=	செட்டிமார், செட்டிமார்கள்

4. உயர்திணை ஒருமைப்பெயரோடு ஆர் விகுதி சேர்த்தால், உயர்வுப்பன்மை (மரியாதை ஒருமை) ஆகும்.

ஒருமை				உயர்வுப் பன்மை
தந்தை	+	ஆர்	=	தந்தையார் (—தந்தை ஒருவர்)
தாய்	+	ஆர்	=	தாயார் (—தாய் ஒருவர்)
அரசி	+	ஆர்	=	அரசியார் (—அரசி ஒருவர்)

குறிப்பு :—தந்தையர் என்பது பலரையும், தந்தையார் என்பது ஒருவரையும் குறித்தல் அறிக.

அஃறிணைப் பன்மை:

அஃறிணை யொருமைச் சொல்லோடு கள் விகுதி சேர்த்தால், அஃறிணைப் பன்மைச் சொல் ஆகும்.

ஒருமை				பன்மை
குதிரை	+	கள்	=	குதிரைகள்
நாய்	+	கள்	=	நாய்கள்
மரம்	+	கள்	=	மரங்கள்

என்பன காண்க.

4. இடம்

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

தன்மை ஒருமைப்பெயர்—யான், நான்.

தன்மைப் பன்மைப்பெயர்—யாம், யாங்கள், நாங்கள்; நாம்.

1 தன்மையும் முன்னிலையும் கூடிய பெயர்.

இராமா, நாம் வெளியே போவோம்.

இவ்வாக்கியத்தில், நாம் என்பது, முன்னிற்பவனாகிய இராமனைத் தன்மையிடத்தோடு சேர்க்கின்றது. ஆதலின், அது, தன்மையும் முன்னிலையும் கூடிய தன்மைப் பன்மைப் பெயராகும். இனி, நாம் என்னுஞ் சொல்லே, தன்மையோடு முன்னிலையையும் படர்க்கையையுங் கூட்டிச் சொல்லுதற்கும் வரும்.

இராமா, நாம் எல்லாரும் போவோம்.

2. தன்மையும் படர்க்கையும் கூடிய பெயர்.

இராமா, நாங்கள் போகின்ளும்.

இவ்வாக்கியத்தில், முன்னிற்பவனுகிய இராமனைத் தன்மை யிடத்தோடு சேர்க்காமல் நீக்கியுளது; ஆதலின், நாங்கள் என்பது, தன்மையும் படர்க்கையும் கூடிய தன்மைப் பன்மைப்பெயராகும். இவ்வாறே,

இராமா, யாம் போகின்றேம்
இராமா, யாங்கள் போகின்றேம்

என்பவற்றில், யாம், யாங்கள் என்பவை, தன்மையும் படர்க்கையும் கூடிய பெயர்களே யாதல் அறிக.

முன்னிலை:

முன்னிலை ஒருமைப் பெயர்—நீ
முன்னிலைப் பன்மைப் பெயர்—நீர், நீயிர், நீவிர், நீங்கள்.

படர்க்கை:

படர்க்கை ஒருமை —அவன்—ஆண்பால்
அவள்—பெண்பால்
அது—அஃறிணை ஒன்றன்பால்

படர்க்கைப் பன்மை—அவர்கள்—பலர்பால்
அவை —பலவின்பால்

குறிப்பு:—தன்மை, முன்னிலைப் பெயர்கள் ஒழிந்த பிறபெயர்களெல்லாம் படர்க்கைப்பெயர்களே.

5. வேற்றுமை

வேற்றுமையாவது, பெயர்ச்சொல்லின் பொருளை வேறு படுத்துவது. அஃது எட்டு வகைப்படும்.

முதல் வேற்றுமை :

தச்சன் குதிரை

என்னுமிடத்தில், அவை, பெயர்ச்சொற்களின் அளவில் நின்று பொருள் தருகின்றன.

தச்சன் நாற்காலி செய்கின்றான்
குதிரை வண்டி இழுக்கின்றது

என்னுமிடத்தில், தச்சன், நாற்காலியைச் சமைத்தல் ஆகிய தொழிலைச் செய்பவன் (கருத்தா) ஆகின்றான். குதிரை, வண்டியை இழுத்தல் ஆகிய தொழிலைச் செய்வது (கருத்தா) ஆகின்றது. ஒரு தொழிலைச் செய்யும் பொருளுக்கு, வினைமுதல் (கருத்தா) என்பது பெயர். வினைமுதலை, எழுவாய் என்பர்.

தச்சன் நாற்காலி செய்கின்றான்
குதிரை வண்டி இழுக்கின்றது

என்னுமிடத்தில், தச்சனும் குதிரையும் எழுவாய்கள் (கருத்தாக்கள்) ஆகின்றன. ஆதலின், தச்சனையும், குதிரையையும் குறிக்கும் பெயர்ச்சொற்கள் (தச்சன், குதிரை என்பவை), பெயர்ப்பொருளினின்று வேறுபட்டு, எழுவாய்ப் பொருளைத் தருகின்றன. பெயர்ச்சொற்கள் எழுவாய்ப் பொருளைத் தருமிடத்து, முதல் வேற்றுமை எனப்படும். ஆதலின், முதல் வேற்றுமையின் பொருள், எழுவாய்ப் பொருளே யாகும்.

குறிப்பு:—முதல்வேற்றுமையில், பெயர்ச்சொற்கள் தம் வடிவில் வேறுபடாமல் இருக்கும்.

இரண்டாம் வேற்றுமை :

நாற்காலி அழகா யிருக்கின்றது

என்னுமிடத்தில், நாற்காலி என்னுஞ் சொல், எழுவாய்ப் பொருளில் இருக்கின்றது.

நாற்காலியைத் தச்சன் செய்தான்

என்னுமிடத்தில், நாற்காலி, தச்சன் செய்த தொழிலின் பயனுக்குச் சார்பாகின்றது. அதனால், நாற்காலி செயப்படு பொருள் ஆகும். எழுவாய்ப் பொருளில் இருந்த நாற்காலி என்பதைச் செயப்படுபொருள் ஆக்கினது எது? ஐ என்பதே. இதனால், ஒரு சொல்லை எழுவாய்ப் பொருளி னின்று செயப்படுபொருளாக மாற்றும் உருபு ஐ - என அறியலாகும்.

மூன்றும் வேற்றுமை :

மாணக்கன் வந்தான்

என்பதில், மாணக்கன் எழுவாய் ஆகின்றான்.

ஆசிரியனொடு மாணக்கன் வந்தான்

என்றால், ஆசிரியன் வந்தான்; அவனோடு மாணக்கனும் வந்தான் என்பது பொருளாகலின், வருதலாகிய தொழி லுக்கு முக்கிய கருத்தா ஆசிரியனே. ஆசிரியனது வருதலா கிய தொழிலை மாணக்கனுக்கும் உடன் நிகழ்ந்ததாகக் காட்டி னது ஒடு என்பது. ஆகலின், ஒடு என்னும் உருபு உட னிகழ்ச்சிப் பொருளைத் தரும் என அறிக. ஓடு, உடன் என்பவையும் இப்பொருளைத் தரும்.

ஆசிரியனோடு மாணக்கன் வந்தான்

ஆசிரியனுடன் மாணக்கன் வந்தான்

என்பன அறிக.

ஊசி கூர்மை யானது

என்பதில், ஊசி எழுவாய்ப் பொருளதா யிருக்கின்றது.

ஊசியால் தைத்தான்

என்பதில், தைத்தலாகிய தொழிலுக்கு, ஊசி கருவியாகின்றது. ஆகலின், ஆல் என்னும் உருபு, கருவிப் பொருளைத் தரும் என அறிக.

வாளால் வெட்டினன்
தடியால் அடித்தான்

என வரும்.

நான்காம் வேற்றுமை:

நம்பி பொன் கொடுத்தான்

என்னுமிடத்தில், நம்பி, பொன்னைக் கொடுத்தவன் ஆகின்றான். ஆதலால், நம்பி எழுவாய். இனி,

நம்பிக்குப் பொன் கொடுத்தான்

என்னுமிடத்தில், நம்பி, பொன்னைக் கொண்டவன் ஆகின்றான். நம்பியை, எழுவாய்ப் பொருளினின்று வேறு படுத்தினது எது? கு-என்னும் உருபு. இதனால், கு என்னும் உருபு, கொள்ளுதற் பொருளைத் தெரிவிக்கும் என அறிக.

ஐந்தாம் வேற்றுமை:

கல்வி உயர்வைத் தரும்

என்பதில், கல்வி எழுவாய்ப் பொருளதா யிருக்கின்றது.

கல்வியிற் பெரியவர் கம்பர்

என்னுமிடத்தில், கம்பர் பெரியவரானதற்குக் கல்வி ஏதுவா யிருக்கின்றது. அதனால், கல்வி ஏதுப்பொருள தாகும். இவ்வாறு, ஏதுப் பொருளைத் தந்தது எது? இன் என்னும் உருபே. அதனால், இன் - உருபு, ஏதுப் பொருளைத் தரும் என அறிக.

ஆறும் வேற்றுமை:

இராமன் சிறுவனாயிருக்கின்றான்

என்பதில், இராமன் எழுவாய். இனி,

இராமனது குழந்தை

என்றால், இராமன் குழந்தையை யுடையவன் ஆகின்றான். இராமனுக்கும் குழந்தைக்கும் உரிமை யிருக்கின்றது. இந்த உரிமையைக் காட்டினது எது? அது என்னும் உருபு. இதனால், அது என்னும் உருபு உரிமைப் பொருளைத் தரும் என அறியலாகும். உரிமைப் பொருளை, கிழமைப் பொருள் என்பர்.

இராமனது கை
இராமனது புத்தகம்

என்பவற்றிலும், அது என்பது உரிமைப் பொருளைத் தருதல் அறிக.

ஏழாம் வேற்றுமை:

அங்கே பெரிய தேரு இருக்கின்றது

என்பதில் தேரு எழுவாய்ப்பொருள தா யிருக்கின்றது.

என் வீடு, பெரிய தெருவில் இருக்கின்றது

என்பதில், தெரு எழுவாய் அன்று; எழுவாயா யிருப்பது வீடு. இதில், தெரு இடப்பொருளில் வந்துளது. இவ்வாறு இடப்பொருள் ஆகச் செய்தது எது? இல் என்பது. இல் என்பதே யன்றி இடம், மேல் முதலிய சொற்களும் இப் பொருளில் வரும்.

இராமனிடம் நல்ல புத்தகம் இருக்கின்றது

கூரையின்மேல் காகம் இருக்கின்றது

எட்டாம் வேற்றுமை:

இராமா, இங்கே வா

என்னுமிடத்தில், இராமன், எதிர்முகமாக விளிக்கப்பட்டான். இவ்வாறு விளிக்க வரும் வேற்றுமைக்கு விளி வேற்றுமை என்பது பெயர். [விளித்தல்—கூப்பிடுதல்]

அண்மை விளி—அருகில் இருப்பவர்களைக் கூப்பிடும் போது, பெயர்ச்சொல் வேறுபாடு அடையாமல் இயல்பாக இருக்கும்.

மணி, வா—இயல்பாக நின்றது.

சேய்மை விளி—தொலையில் இருப்பவர்களை விளிக்கும் போது ஏ என்னும் எழுத்து, பெயரின் இறுதியில் சேர்க்கப் படும். ஈற்றெழுத்தினை நீட்டியும் கூப்பிடலாம். ஈற்றெழுத் தினைக் கெடுத்து, அதற்கு அடுத்த எழுத்தினை நீட்டிக் கூப்பிடுதலும் உண்டு.

அப்பனே — ஏ சேர்ந்தது.

நம்பீ — ஈற்றெழுத்து நீண்டது.

இராமா — ஈற்றெழுத்துக் கெட, அயலெழுத்து நீண்டது.

வேற்றுமை யுருபுகளும் அவற்றின் பொருளும்

வேற்றுமையுருபு		பொருள்
1.	...	எழுவாய்ப்பொருள்
2.	ஐ	செயப்படுபொருள்
3.	ஒடு, ஓடு, உடன்	உடனிகழ்ச்சிப்பொருள்
,,	ஆல்	கருவிப்பொருள்
4.	கு	கொள்ளுதற்பொருள்
5.	இன்	ஏதுப் பொருள்
6.	அது	கிழமைப் பொருள்
7.	இல், இடம், மேல் முதலியன	இடப் பொருள்
8.	பெயரில் வருந் திரிபு முதலியன	விளிப் பொருள்

பயிற்சி

அடியிற் காணும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்கள் இன்ன வேற்றுமையை ஏற்றவை என்று குறிக்க.

இராமன், ஏழைகளுக்குப் பொன்னைக் கொடுத்தான்.
சாத்தன், மரத்தை வாளால் வெட்டினான்.
எனது புத்தகம் வீட்டில் இருக்கின்றது.
அவர் செல்வத்திற் சிறந்தவர்.
அவரோடு வேலைக்காரன் வந்தான்.
இராமா, எப்போது வந்தாய்?
அவன் வீட்டை விற்றான்.
இராமனுக்குத் தம்பி இலக்குவன்.

மகர ஈற்றுப் பெயர், வேற்றுமையுருபு ஏற்கும் முறை.

அவன் என்னுஞ் சொல்லோடு, ஐ என்னும் இரண்டாம் வேற்றுமையுருபு சேர்த்தால், அவன் + ஐ = அவனை என்றாகும். மரம் என்னுஞ் சொல்லோடு இரண்டாம் வேற்றுமை யுருபு சேர்த்துச் சொல்லும்போது,

மரத்தை என வருகின்றது.

மரம் + ஐ = மரமை என்றுதானே ஆகவேண்டும்; மரத்தை என்று ஆனது எப்படி? அத்து என்னுஞ் சொல் இடையே வந்தது. அத்துச் சாரியை வரின், மரம் என்பதில் உள்ள மகரமெய்யும், அத்துச்சாரியையி லுள்ள அகரமும் கெட்டு விடும்; அப்பொழுது, மர என்றும், த்து என்றும் இருக்கும்.

மர என்பதனோடு த்து என்பது சேர்ந்தால், மர + த்து = மரத்து என்றாகும். ஆகலின்,

மரத்து + ஐ = மரத்தை
மரத்து + ஒடு = மரத்தொடு
மரத்து + ஆல் = மரத்தால்
மரத்து + கு = மரத்துக்கு

என இவ்வாறு வரும்.

எல்லாம் என்பதில் மகரம் கெட, அற்றுச் சாரியை இடையே வரும்; வேற்றுமை யுருபின்முன் உம் நிற்கும்.

எல்லாவற்றையும் —எல்லா + அற்று + ஐ + உம்.
எல்லாவற்றோடும்—எல்லா + அற்று + ஒடு + உம்.

பயிற்சி

குளம், தோட்டம், நகரம், வள்ளம் இச் சொற்களுக்கு வேற்றுமையுருபுகளைச் சேர்த்து எழுதுக.

II. வினைச்சொல் :

ஒரு பொருளின் தொழிலைக் குறிக்குஞ் சொல், வினைச் சொல் எனப்படும். அது, காலத்தைக் காட்டும்; வேற்றுமை யுருபினை ஏற்காது.

கருத்தா செய்யுந் தொழிலின் பயனுக்குக் கருத்தாவே சார்பாயிருக்கும் வினையில் செயப்படு பொருள் இராது. அப்படிப்பட்ட வினைக்குச் செயப்படுபொருள் குன்றிய வினை என்பது பெயர். கருத்தா செய்யுந் தொழிலின் பயனுக்கு வேறு பொருள் சார்பாயிருக்கும் வினையில் செயப் படுபொருள் தோன்றும். அப்படிப்பட்ட வினைக்குச் செயப் படுபொருள் குன்றா வினை என்பது பெயர். இவ்விரண்டி லும் வினை உளதாயினும், பயனுக்குச் சார்பினைக் கருதி இவ்வாறு பிரித்திருக்கின்றனர்.

இராமன் உறங்குகின்றான்.

இதில், உறங்குதலாகிய தொழிலின் பயனுக்கு இராம னே சார்பா யிருத்தலின், செயப்படுபொருள் இல்லை.

தச்சன் நாற்காலி செய்கின்றான்.

இதில், நாற்காலி செய்தல் ஆகிய தொழிலின் பயனுக்கு நாற்காலி சார்பாயிருத்தலின் செயப்படுபொருள் உளது.

காலம்.

இனி வினைச் சொல்லை, இறந்தகால வினை, நிகழ்கால வினை, எதிர்கால வினை என்று காலத்தைக் கருதி மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

தச்சன் நாற்காலி செய்தான் —இறந்தகால வினை
தச்சன் நாற்காலி செய்கின்றான்—நிகழ்கால வினை
தச்சன் நாற்காலி செய்வான் —எதிர்கால வினை

செய்தான், செய்கின்றான், செய்வான் என்னும் வினைச்சொற்கள் மூன்றிலும், செய் - ஆன் என்னும் இரண்டு உறுப்புக்களும் உள்ளன. ஆகலின், இவை, காலத்தைக் குறிப்பன அல்ல. காலத்தைக் குறிப்பவை வேறு யாவை?

செய்தான் —என்பதில், த்—(செய் + த் + ஆன்)
செய்கின்றான்—என்பதில், கின்று—(செய் + கின்று + ஆன்)
செய்வான் —என்பதில், வ்—(செய் + வ் + ஆன்)

என்பவையே காலத்தைக் குறிக்கின்றன. இவை, வினைச்சொல்லின் இடையில் நிற்றலின், இவற்றிற்கு இடை நிலை என்பது பெயர். காலத்தைக் குறிப்பவை இவையேயன்றி, இன்னுஞ் சில உள்ளன.

(1) இறந்தகால இடைநிலை—ட், த், ற்; இன்.

ட்—இராமன் உண்டான்—(உண் + ட் + ஆன்)
த்—தச்சன், நாற்காலி செய்தான்—(செய் + த் + ஆன்)
ற்—சாத்தன் பண்டம் தின்றான்—(தின் + ற் + ஆன்)
இன்—சாத்தன் உறங்கினான்—(உறங்கு + இன் + ஆன்)

(2) நிகழ்கால இடைநிலை—கின்று, கிறு.

கின்று-தச்சன் நாற்காலி செய்கின்றான். (செய் + கின்று + ஆன்)
கிறு—அவன் ஓடுகிறான். (ஓடு + கிறு + ஆன்)

(3) எதிர்கால இடைநிலை—ப், வ்.

ப்—இராமன் வந்து உண்பான் —(உண் + ப் + ஆன்)
வ்—அவன் ஊருக்குப் போவான்—(போ + வ் + ஆன்)

செய்வினை, செயப்பாட்டு வினைகள்

திருவள்ளுவர் திருக்குறளைச் செய்தார்

என்றால், திருவள்ளுவரைக்குறித்து அறிவது முக்கியமாகும். இனி,

திருக்குறள் திருவள்ளுவரால் செய்யப்பட்டது

என்றால், திருக்குறளைக்குறித்து அறிவது முக்கியமாகும். ஆகலின், முக்கியத்தைக் கருதி, வினைச்சொல்லை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவற்றுள், முதலிற் கூறியது போல, செய்பவனுக்கு முதன்மை தரும் வினை செய்வினை எனப்படும்.

திருக்குறள் திருவள்ளுவரால் செய்யப்பட்டது

என்பதிற்போல செய்யப்பட்டபோருளுக்கு முதன்மை தரும் வினை செயப்பாட்டுவினை எனப்படும். செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தோடு, படு என்பதைச் சேர்த்துச் சொல்லை யமைத்தால், செயப்பாட்டுவினை ஆகும்.

முற்றுவினை, எச்சவினை

இராமன் உறங்கி எழுந்தான்

என்பதில், உறங்கி என்னுஞ் சொல்லை நோக்கின், உறங்குதலாகிய வேலையைச் செய்த கருத்தா உயர்திணைப் பொருளோ,

அஃறிணைப் பொருளோ என்பது தெரியாது; எழுந்தான் என்பதை நோக்கினல், கருத்தா - உயர்திணை ஆண்பால் என்பது தெரியும். இவ்வாறே,

எருது வண்டியை இழுத்துச் செல்கின்றது

என்பதில், இழுத்து என்னும் வினையை நோக்கினல், கருத்தா இன்ன பொருள் என்பது விளங்காது; செல்கின்றது என்னும் வினையை நோக்கினல், அஃது அஃறிணை ஒன்றன்பால் என்பது விளங்கும். இவ்வாறு, கருத்தாவினைத் தெரிவிக்கக் கூடிய வினைச்சொல் முற்றுவினை என்றும், மற்றையது எச்சவினை என்றும் பெயர் பெறும்.

எச்சவினையின் வகை:

பெயரெச்சம், வினையெச்சம்.

பள்ளிக்கூடத்திற்குப் போன சிறுவன்

என்பதில், போன என்னும் எச்ச வினைச்சொல், சிறுவன் என்னும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தது; பெயரையன்றி, எந்த வினைமுற்றைச் சேர்ப்பினும் பொருள் அமையாது. இவ்வாறு பெயர்ச் சொல்லையே கொண்டு முடியும் எச்சத்துக்குப் பெயரெச்சம் என்பது பெயர்.

பள்ளிக்கூடத்திற்குப் போய் வந்தான்

என்பதில், போய் என்னும் எச்ச வினைச்சொல், வந்தான் என்னும் முற்றுவினையைக் கொண்டு முடிந்தது. இவ்வாறு வினைச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சத்துக்கு, வினையெச்சம் என்பது பெயர்.

1. பெயரெச்சம்

படித்த சிறுவன்
படிக்கின்ற சிறுவன்
படிக்குஞ் சிறுவன்

என்பவற்றில்-படித்த, படிக்கின்ற, படிக்கும் என்னும் மூன்று எச்ச வினைகளும் பையன் என்னும் பெயர்ச்சொல்லையே கொண்டு முடியினும், அவை காலத்தில் வேறுபாடு உடையன.

படித்த (படி + த் + த் + அ) - இறந்தகாலப் பெயரெச்சம்.
படிக்கின்ற(படி + க் + கின்று + அ)-நிகழ்காலப்பெயரெச்சம்.
படிக்கும் (படி + க் + கு + உம்) - எதிர்காலப் பெயரெச்சம்.

2. வினை யெச்சம்

இராமன் உண்டு வந்தான்.
இராமன் உண்ண வருவான்.

இவற்றில், உண்டு என்பது, இதன்முன்னரே நடந்த தொழிலாகலின் இறந்தகாலவினை. உண்ண என்பது, இனிமேல் நடக்கப்போகுந் தொழிலாகலின், எதிர்காலவினை.

மழை பெய்தால் வெள்ளம் வரும்

என்பதில், பெய்தால் என்னும் வினைச்சொல் எதிர்காலத்து வினையைக் குறிக்கின்றது. அதனால், இதுவும் எதிர்கால வினையெச்சமே. இப்பொருளில்,

மழை பெய்யின் வெள்ளம் வரும்
மழை பெய்தக்கால் வெள்ளம் வரும்

என்றுஞ் சொல்லலாம்.

இராமன் உண்ணக் கண்டேன்.

சூரியன் உதிக்க வண்டி புறப்பட்டது.

என்பவைபோல இரண்டு தொழில்கள் ஒரேகாலத்தில் நடத்தலைக் கூறும்போதே நிகழ்கால வினையெச்சம் வரும்.

பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள வினையெச்சங்களை இன்னகாலத்து வினையெச்சங்கள் என்று குறிக்க.

1. நான் வீட்டுக்குச் சாப்பிடப் போகிறேன்.
2. அவன் என்னைக் கண்டு ஓடிவிட்டான்.
3. நான் கோழி கூப்பிட எழுந்தேன்.
4. இராமன் பரீக்ஷைக்குப் போகப் படிக்கிறான்.
5. நீ சொன்னால் அவன் கேட்பான்.

III. இடைச்சொல்

பெயர்ச்சொல் வினைச்சொற்களைப்போலத் தனியாக வழங்க வாராமல், அப் பெயர் வினைகளை அடுத்துவருஞ் சொற்களுக்கு இடைச்சொல் என்பது பெயர்.

தான் :

அவன்தான் சொன்னான்

என்பதில், தான் என்பது, பொருளை உறுதிப்படுத்துகின்றது. அதனால், அது தேற்றப்பொருளில் வந்துளது. ஆயின், 'தான் சொன்னான்' என்றால், இப்பொருள் வருதல் இல்லை.

வாளா, சும்மா :

அவன் வாளா இருக்கின்றான்

அவன் சும்மா போதுபோக்குகின்றான்

என்பவற்றில், வாளா, சும்மா என்பவை பயனில்லாமையை உணர்த்துகின்றன.

ஐயோ, அந்தோ:

ஐயோ, உன்னை அடித்தவர் யார்!

அந்தோ, எனக்குத் துணை யாவர்!

என்பவற்றில், ஐயோ, அந்தோ என்பவை இரக்கப் பொருளைத் தருகின்றன.

கொல்:

'இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வளவிற் காணுங் கொல்' என்பதில், கொல் என்பது ஐயப்பொருளைத் தருகின்றது.

IV. உரிச்சொல்

அவன் நல்ல சிறுவன்

இவன் சாலப் பேசுவான்

என்பவற்றில், நல்ல என்பது பையனது தன்மையைத் தெரிவிக்கின்றது. சால என்பது பேசுதலின் தன்மையைத் தெரிவிக்கின்றது. இவ்வாறு, ஒன்றன் தன்மையைத் தெரிவிக்குஞ் சொல்லுக்கு உரிச்சொல் என்பது பெயர்.

நல்ல சிறுவன் என்பதில், நல்ல என்பது சிறுவன் என்னும் பெயர்ச் சொல்லுக்கு அடைமொழியாதலின், அது, பெயருரிச்சொல் எனப்படும்.

சாலப் பேசுவான் என்பதில், சால என்பது, பேசுவான் என்னும் வினைச்சொல்லுக்கு அடைமொழியாதலின், அது, வினையுரிச்சொல் எனப்படும்.

V. சொற்றொடர்

சொற்றொடர்களில், எழுவாய் முதலிலும், செயப்படு பொருள் அதனை அடுத்தும், பயனிலை கடைசியிலும் அமைந்திருக்கும். இவற்றை இம்முறை மாற்றியும் வழங்குதல் உண்டு. அவ்வாறு மாற்றின், பொருட்சிறப்பு வேறுபடும்.

மழை பெய்தது

என்று சொல்ல வேண்டுவதை,

பெய்தது மழை

என்றால், மழை மிகுதியாகப் பெய்தது எனப் பொருள் வரும். இவ்வாறே,

அடித்தது காற்று
ஓடிற்று குதிரை

என்று வருதல் காண்க.

ரவிவர்மா சகுந்தலையின் படம் எழுதியிருக்கிறார்

என்பதை,

சகுந்தலையின் படத்தை ரவிவர்மா எழுதியிருக்கிறார்

என்றால், 'அந்தப் படம் மிக்க அழகுடையது' என, அதன் சிறப்புத் தோன்றும்.

ஓர் எழுவாய்க்கு இரண்டு பயனிலைகளைக் கொடுத்துச் சொல்லுதல் உண்டு.

இராமன், நேற்று மாலையில் இங்கு வந்தான்; இன்று காலையில் ஊருக்குப் போனான்.

என்பது காண்க.

இவ்வாறன்றி, இராமன் என்னுஞ் சொல்லையே திரும்பத் திரும்பச் சொன்னால், காலம் வீணாகும்.

இரண்டு மூன்று எழுவாய்களுக்கு ஒரு பயனிலை கொடுத்தலும் உண்டு.

அண்ணனும் தம்பியும் பள்ளிக்கூடத்திற்குப் போனார்கள்.

கன்றும் பசுவும் மேய்கின்றன

என்றும்,

இராமனும் சீதையும் லட்சுமணனும் காட்டுக்குப் போனார்கள்.

என்றும் வருதல் காண்க. இவற்றையே,

அண்ணனோடு தம்பி பள்ளிக்கூடத்திற்குப் போனான்.

பசுவோடு கன்று மேய்கிறது.

இராமனோடு சீதையும் லட்சுமணனும் காட்டுக்குப் போனார்கள்

என்றும் சொல்லாம்.

அப்படிச் சொன்னால், அண்ணன், பசு, இராமன் என்பவர்களுக்கே வினைசெய்தலில் சிறப்புடைமை தோன்றும்.

நான் பள்ளிக்கூடத்திற்குப் போனேன்.

நீ பள்ளிக்கூடத்திற்குப் போனாய்.

அவன் பள்ளிக்கூடத்திற்குப் போனான்.

என்று தனித்தனியே உள்ள மூன்று சொற்றொடர்களைச் சேர்த்து, ஒரே சொற்றொடராகச் சொல்லலாம். அப்பொழுது,

நானும் நீயும் அவனும் பள்ளிக்கூடத்திற்குப் போனோம்

என்றாவது,

நாம் பள்ளிக்கூடத்திற்குப் போனோம்

என்றாவது சொல்ல வேண்டும். இவ்வாறே,

நான் பள்ளிக்கூடத்திற்குப் போனேன்

அவன் பள்ளிக்கூடத்திற்குப் போனான்

என்னும் இரண்டு சொற்றொடரை ஒருங்கு சேர்த்து,

நானும் அவனும் பள்ளிக்கூடத்திற்குப் போயினோம்

என்றாவது,

யாம் பள்ளிக்கூடத்திற்குப் போயினேம்

என்றாவது கூறலாம்.

இவற்றால், தன்மையிடத்து வினையோடு பிறவிடங்களின் வினைகளைச் சேர்த்துச்சொல்லுவதாயின், தன்மைப் பன்மை வினைச்சொல்லாகவே சொல்ல வேண்டும் என அறிந்து கொள்க. இனி,

நீ பள்ளிக்கூடத்திற்குப் போனாய்.

அவன் பள்ளிக்கூடத்திற்குப் போனான்.

என்னும் இரண்டு சொற்றொடர்களை ஒரே சொற்றொடராகச் சொல்ல வேண்டுமானால்,

நீயும் அவனும் பள்ளிக்கூடத்திற்குப் போனீர்கள்

என்றாவது,

நீங்கள் பள்ளிக்கூடத்திற்குப் போனீர்கள்

என்றாவது சொல்ல வேண்டும்.

இதனால், முன்னிலை வினைச்சொல்லோடு படர்க்கை வினைச்சொல்லைச் சேர்த்துச்சொல்லுவதாயின், முன்னிலைப் பன்மை வினையாகவே சொல்லவேண்டும் என அறிக.

பயிற்சி

முருகனோடு வேலன் வந்தான்.

தாயோடு கன்று போயிற்று.

இச் சொற்றொடர்களில் இரண்டுஎழுவாய் வருமாறு எழுதுக.

இராமன் ஒரு படம் வரைந்திருக்கிறான்.

அவள் ஒரு பாட்டுப் பாடினாள்.

இச் சொற்றொடர்களிலுள்ள செயப்படு பொருளுக்குச் சிறப்புத் தோன்றுமாறு எழுதுக.

வெயில் காய்கிறது

இதில், பயனிலைக்குச் சிறப்பு வருமாறு எழுதுக.

அடைமொழிகள் :

சொற்றொடர்களில் இருக்கும் எழுவாய் பயனிலை செயப்படுபொருள்கள் அடைமொழியோடு கூடி இருத்தலும் உண்டு.

1. நல்ல பிள்ளைகள் பழைய பாடங்களையும் மறவாதபடி படிப்பார்கள்.

2. மாணவர்கள் எழுத்துக்களைத் திருத்தமாக எழுதுதல் வேண்டும்.

எண்	எழுவாய்	எழுவாயின் அடை	செயப்படு பொருள்	செயப்படு பொருளின் அடை	பயனிலை	பயனிலையின் அடை
1.	பிள்ளைகள்	நல்ல	பாடங்கள்	பழைய	படிப்பார்கள்	மறவாதபடி
2.	மாணவர்கள்	...	எழுத்துக்கள்	...	எழுதுதல் வேண்டும்	திருத்தமாக

சொல்லிலக்கணம் :

சொற்றொடரிலிருக்குஞ் சொற்களுக்குப் பெயர், திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறி, முடிபும் கூறுதல் சொல்லிலக்கணம் கூறுதலாம். வினைச்சொற்களுக்குக் காலமும் கூறுதல் வேண்டும்.

இராமன் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படித்து வருகின்றான்.

இச்சொற்றொடரில்,

சொல்	பெயர்	திணை	பால்	எண்	இடம்	வேற்றுமை	முடிபு
இராமன்	பெயர்ச்சொல்	உயர்திணை	ஆண்பால்	ஒருமை	படர்க்கை	1.	வருகின்றான் என்பதனோடு முடிகிறது
பள்ளிக்கூடத்திற்கு	பெயர்ச்சொல்	அஃறிணை	ஒன்றன்பால்	ஒருமை	படர்க்கை	4.	போய் என்பதனோடு முடியும்

சொல்	பெயர்	திணை	பால்	எண்	இடம்	காலம்	முடிபு
போய்	வினையெச்சம்	...	...	...	...	இறந்தகாலம்	படித்து என்னும் வினையெச்சத்தோடு முடியும்
படித்து	வினையெச்சம்	...	...	...	...	இறந்தகாலம்	வருகின்றான் என்பதனோடு முடியும்
வருகின்றான்	வினைமுற்று	உயர்திணை	ஆண்பால்	ஒருமை	படர்க்கை	நிகழ்காலம்	இராமன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றது.

IV. புணர்ச்சி

1. உயிரீற்றுச் சொற்களுக்கு முன், வல்லெழுத்து முதன்மொழி வரின் அவ்வல்லெழுத்து மிகும்.

பலா	+ காய்	= பலாக்காய்
அத்தி	+ காய்	= அத்திக்காய்
ஈ	+ சிறகு	= ஈச்சிறகு
தெரு	+ திண்ணை	= தெருத்திண்ணை
பூ	+ பறித்தான்	= பூப்பறித்தான்
வாழை	+ பழம்	= வாழைப்பழம்

2. உயிரீற்றுச்சொற்கள் சிலவற்றின்முன் வல்லெழுத்து முதன்மொழி வரின், அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்து மிகும்.

விள	+ காய்	= விளங்காய்
மா	+ காய்	= மாங்காய்
பூ	+ சோலை	= பூஞ்சோலை
பூ	+ தோட்டம்	= பூந்தோட்டம்

3. ஐகார ஈற்றுச் சொற்களுக்குமுன் வல்லெழுத்து முதன்மொழி வரின், ஈற்று ஐகாரம் கெட, அம் தோன்றும்.

மாதுளை	+ காய்	= மாதுளங்காய்	(மாதுள் + அம் + காய்)
பனை	+ பழம்	= பனம்பழம்	(பன் + அம் + பழம்)
ஆவிரை	+ பூ	= ஆவிரம்பூ	(ஆவிர் + அம் + பூ)
தாழை	+ பூ	= தாழம்பூ	(தாழ் + அம் + பூ)

4. குற்றியலுகர ஈற்றுச் சொற்களுக்கு முன் உயிர்முதன் மொழி வரின், அவ்வுகரம் கெடும்.

பந்து + அடித்தான் = பந்தடித்தான் (பந்த் + அடித்தான்)
வரகு + அறுத்தான் = வரகறுத்தான் (வரக் + அறுத்தான்)
சோறு + உண்டான் = சோறுண்டான் (சோற் + உண்டான்)
பட்டு + உடுத்தான் = பட்டுடுத்தான் (பட்ட் + உடுத்தான்)
அஃது + எங்கே = அஃதெங்கே (அஃத் + எங்கே)

5. வன்றொடர்க் குற்றியலுகர ஈற்றுப் பெயர்கட்குமுன்னும், அவ்வீற்று வினையெச்சங்கட்கு முன்னும் வல்லெழுத்து முதன்மொழி வரின், அவ்வல்லெழுத்து மிக்கே வரும்.

கொக்கு + கால் = கொக்குக்கால்		குற்றியலுகர ஈற்றுப் பெயர்
கொக்கு + சிறகு = கொக்குச்சிறகு		
பத்து + தலை = பத்துத்தலை		
பட்டு + புடவை = பட்டுப்புடவை		

பிடித்து + கொண்டான் = பிடித்துக்கொண்டான்	வினையெச்சம்
கேட்டு + சிரித்தான் = கேட்டுச்சிரித்தான்	
படித்து + தேர்ந்தான் = படித்துத்தேர்ந்தான்	
விற்று + போனான் = விற்றுப் போனான்	

6. இரண்டாம் வேற்றுமை யுருபிற்குமுன் வல்லெழுத்து முதன்மொழி வரின், அவ் வல்லெழுத்து மிக்கே வரும்.

அவனை + கண்டான் = அவனைக்கண்டான்
கோயிலை + சுற்றினான் = கோயிலைச்சுற்றினான்
கடவுளை + தொழுதான் = கடவுளைத்தொழுதான்
பாடத்தை + படித்தான் = பாடத்தைப் படித்தான்

7. இகர ஈற்று இறந்தகால வினை யெச்சத்திற்குமுன்னும், யகர ஈற்று இறந்த கால வினையெச்சத்திற்குமுன்னும் வரும் வல்லெழுத்து மிக்கே வரும்.

ஆடி + குதித்தான் = ஆடிக்குதித்தான்
பாடி + சிரித்தான் = பாடிச்சிரித்தான்
ஓடி + திரிந்தான் = ஓடித்திரிந்தான்
எழுதி + படித்தான் = எழுதிப்படித்தான் } இகர ஈறு
போய் + சேர்ந்தான் = போய்ச் சேர்ந்தான்—யகர ஈறு

8. செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திற்குமுன் வரும் வல்லெழுத்து மிக்கே வரும்.

உண்ண + கண்டேன் = உண்ணக்கண்டேன்
குளிக்க + சென்றான் = குளிக்கச்சென்றான்
படிக்க + தெரியும் = படிக்கத்தெரியும்
மெல்ல + போனான் = மெல்லப்போனான்

9. ரகர ஈற்றுச் சில பெயர்களுக்குமுன் வரும் வல்லெழுத்து மிகும்.

மோர் + குடம் = மோர்க்குடம்
உகிர் + சுற்று = உகிர்ச்சுற்று
தேர் + தட்டு = தேர்த்தட்டு
தயிர் + பானை = தயிர்ப்பானை

மூன்றும் பகுதி

I. எழுத்து

1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

தமிழ்மொழியில் எல்லாவெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரமாட்டா; அவ்வாறே எல்லாவெழுத்துக்களும் மொழியின் இறுதியிலும் நிற்கமாட்டா.

உயிரேழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்; மெய்யெழுத்துக்களுள், க, ச, த, ப என்னும் வல் லெழுத்துக்கள் நான்கும், ஞ, ந, ம, என்னும் மெல்லெழுத் துக்கள் மூன்றும், ய, வ என்னும் இடையெழுத்துக்கள் இரண்டும் மொழிமுதலில் வரும்.

அம் மெய்யெழுத்துக்களுள், க, ச, த, ப, ந, ம என்னும் ஆறு மெய்யெழுத்துக்களே பன்னிரண்டு உயிரேழுத்துக்க ளோடும் மொழிமுதலில் வரும்.

வ—அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயி ரெழுத்துக்களோடு கூடிவரும்.

ய—அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரெழுத் துக்களோடு கூடிவரும்.

ஞ—அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரெழுத்துக்க ளோடு கூடிவரும்.

வரலாறு :

உயிரெழுத்து—12

அவன், ஆண், இலை, ஈரம், உரல், ஊற்று,
எலி, ஏடு, ஐந்து, ஒன்று, ஓரம், ஔவியம்.

ககரவரி—12

கல், கால் கிளி, கீரி, குரல், கூத்து,
கெடுதல், கேள், கை, கொடி, கோழி, [1]கௌவை.

சகரவரி—12

சட்டி, சாரல், சினம், சீர், சுழி, சூடு,
செய், சேர், சைகை, சொல், சோறு, சௌரியம்.

தகரவரி—12

தந்தை, தாய், தின், தீமை, துணி, தூற்றல்,
தெரு, தேர், தையல், தொழில், தோடு, [2]தௌவை.

நகரவரி—12

நன்று, நாய், நிலை, நீர், நுனி, நூல்,
நெய், நேர், நைதல், நொந்தான், நோய், [3]நௌவி.

பகரவரி—12

பசி, பார், பிடி, பீர்க்கு, புகழ், பூனை,
பெருமை, பேர், பை, பொரி, போர், [4]பௌவம்.

---

1. பழிச்சொல்
2. அக்கை
3. மான்
4. கடல்

மகரவரி—12

மலை, மான், மிகுதி, மீன், முடி, மூங்கில்,
மென்மை, மேன்மை, மை, மொழி, மோர், [1]மௌவல்.

வகரவரி—8

வழி, வாள், வில், வீடு, — —
வெளி, வேல், வை, — — வௌவால்.

யகரவரி—6

யவனர், யானை, — — யுகம், [2]யூபம்,
— — — — யோகம், யௌவனம்.

ஞகரவரி—4

[3]ஞமலி, [4]ஞாண், — — — —
[5]ஞெகிழி, — —[6]ஞொள்கல், — —

2. மொழியின் இறுதியில் நிற்கும் எழுத்துக்கள்

உயிரெழுத்துக்களுள், எகரம் ஒன்று தவிர மற்றைப் பதினோர் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களோடு கூடி மொழியின் இறுதியில் நிற்கும்.

விள, பலா, அணி, தீ, தெரு, பூ,—, சே, பனை, நொ, போ, கௌ.

இனி, மெய்யெழுத்துக்களுள் வல்லெழுத்துக்கள் இறுதியில் நிற்கமாட்டா. மெல்லெழுத்துக்களுள், ண், ம், ன்— இம்மூன்றும், இடையெழுத்துக்கள் ஆறும் இறுதியில் நிற்கும். குற்றியலுகரமும் இறுதியில் நிற்கும்.

---

1. மல்லிகை
2. யாகசாலைத்தூண்
3. நாய்
4. கயிறு
5. சிலம்பு
6. இளைத்தல்

மெல்லெழுத்துக்கள் 3:

மண், மரம், பொன்.

இடையெழுத்துக்கள் 6:

நெய், தேர், வில், [1]தெவ், கூழ், வாள்.

குற்றியலுகரம்:

வரகு, காசு முதலியன.

3. போலி

சொற்களில், ஓரெழுத்துக்கு ஈடாகப் பிறிதோர் எழுத்து வந்து, பொருள் வேறுபடாதே நிற்றலும் உண்டு. அவ்வாறு நிற்கும் எழுத்துக்கு, 'போலியெழுத்து' என்பது பெயர். [போலி—போல்வது.]

(1) சில சொற்களின் இறுதியில், னகரமெய்க்கு ஈடாக, மகரமெய் நிற்றல் உண்டு.

மரன்—மரம்　　　அகன்—அகம்

குளன்—குளம்　　　வளன்—வளம்

(2) சில சொற்களின் இறுதியில், ரகாரத்துக்கு லகாரம் வந்து நிற்கும்.

பந்தர்—பந்தல்

சாம்பர்—சாம்பல்

குடர்—குடல்

(3) சில குற்றியலுகரவீற்றுச்சொற்களோடு 'அர்' சேர்ந்துவரும்.

வண்டு—வண்டர்

சிறகு—சிறகர்

சுரும்பு—சுரும்பர்

1. பகை

II. சொல்

சொல்லாவது—பொருளை அறிதற்குக் கருவியாயிருக்கும் ஓசை.

சொல்லின் வகை

சொற்கள் நான்கு வகைப்படும். அவை-பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பன.

தமிழ்மொழியில், வேறு நாடுகளில் வழங்கும் மொழிகளிலுள்ள சொற்களும் வந்து வழக்குகின்றன. அவற்றிற்குத் திசைச்சொற்கள் என்பது பெயர்

திசைச் சொல்

அரபி—அத்தர், அமல், அமானத், கரார், பதல், பாகி (பாக்கி), மஹஜர்.

இந்துஸ்தானி—இஸ்திரி, கச்சேரி, கிச்டி, சட்னி, தாறு, ரூப்யா (ரூபாய்).

பார்ஸி—ஹௌல்தார், அல்மாரி, குல்லா, கொத்வால், பஜார், சர்க்கார்.

ஆங்கிலம்—ஆபீஸ், இன்ஸ்பெக்டர், கலெக்டர், பாரம், பென்ஸில், ரிப்போர்ட், ரோடு, ஸ்கூல்.

தமிழ்மொழியில், வடமொழிச் சொற்கள் பல வந்து வழங்குகின்றன. அவை :—

அதிகம், ஆசை, காரணம், சந்திரன், சூரியன், திசை, பாடம், மார்க்கம், வீரம், ஸமயம் முதலியன.

1. பெயர்ச்சொல்

பெயர்:

பொருள்களின் பெயர்களுள் பலவற்றிற்குக் காரணம் தெரியவில்லை ; சிலவற்றிற்குக் காரணம் தெரிகின்றது. பொருட் காரணம் தெரியாத பெயர்களுக்கு இடுகுறிப் பெயர் எனவும், காரணம் தெரிகின்ற பெயர்களுக்குக் காரணப்பெயர் எனவும் பெயர் என்று மேலே படித்திருக்கிறோம் அன்றோ?

பனை, மரம் என்பவற்றிற்குக் காரணப்பொருள் தெரியாமையின், அவை, இடுகுறிப்பெயராகும். ஆயின், அவற்றுள், பனை என்பது ஒருவகை மரத்துக்கே சிறப்பாக வழங்குகின்றது ; மரம் என்பது பனை, தென்னை, மா, பலா முதலிய பலவகை மரங்களுக்கும் பொதுவாக வழங்குகின்றது. ஆதலின்,

பனை என்பது—இடுகுறிச் சிறப்புப்பெயர்.
மரம் ,, —இடுகுறிப் பொதுப்பெயர்.

வளை, அணி என்பவற்றிற்குக் காரணப்பொருள் தெரிதலின், அவை, காரணப்பெயர்களாகும். ஆயினும், அவற்றுள், வளை என்பது வளையல் என்னும் ஒருவகை ஆபரணத்திற்கே சிறப்பாக வழங்குகின்றது. அணி என்பது வளை, சிலம்பு, முதலிய பலவகை ஆபரணங்களுக்கும் பொதுவாக வழங்குகின்றது. ஆதலின்,

வளை என்பது—காரணச் சிறப்புப்பெயர்.
அணி என்பது—காரணப் பொதுப்பெயர்.

[வளை —வளைந்திருப்பது; அணி = அணியப்படுவது.]

தொழிற் பெயரின் வகை:

இராமா, ஓர் அடி அடி

என்பதில், முதலிற் சொன்ன அடி என்னுஞ் சொல்லுக்கும், இரண்டாவது சொன்ன அடி என்னுஞ் சொல்லுக்கும் வேறுபாடு இருக்கின்றதா, என்ன? சொல்லுங்கள்.

முதலில் உள்ள அடி என்பது, அடித்தல் ஆகிய தொழிலுக்குப் பெயரா யிருக்கின்றது; இரண்டாவதுள்ள அடி என்பது, (இராமனை) ஏவுகின்றது. அதனால், முதலிலுள்ள அடி என்பது தொழிற்பெயர் ஆகும்.

ஆனால் நடத்தல், நடக்கை என்பவைபோன்ற தொழிற் பெயர்களுக்கும் அடி என்னுந் தொழிற்பெயர்க்கும் வேறுபாடு உண்டு. என்னெனின்,

நடத்தல் என்னும் பெயரை, நட + தல் என்று, முதனிலையும் இறுதிநிலையும் ஆகப் பிரிக்கலாம்; அடி என்பதை அவ்வாறு பிரிக்க முடியாது; முதனிலைமட்டுமே தொழிற் பெயராகி இருக்கின்றது. அவ்வாறு, முதனிலைமட்டுமே தொழிற்பெயராகி வரும் பெயர்களுக்கு முதனிலைத் தொழிற் பெயர் என்பது பெயர்.

(1) முதனிலைத் தொழிற்பெயர்:

அடி, பிடி, உதை, இடி முதலாயின. இவற்றை,

அவனை ஓர் அடி அடித்தான்
அவன் பிடித்த பிடி விடமாட்டான்
அவனுக்கு ஓர் உதை கொடுத்தான்
மின்னுமல் இடி இடித்தது

என அமைத்து அறிந்துகொள்க.

(2) முதனிலை திரிந்த தொழிற்பெயர்:

அடி, பிடி, உதை, இடி முதலிய முதனிலைகள் திரியாமலே பெயர்ச்சொற்களாகும். இவ்வாறன்றி, முதனிலை திரிந்தும் பெயர்ச்சொல் ஆதல் உண்டு. அப்படிப்பட்ட பெயர்களை, முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் என்பர்.

கேடு —கெடு என்னும் முதல்நிலை திரிந்தது.
சூடு —சுடு என்னும் முதல்நிலை திரிந்தது.
வீடு —விடு என்னும் முதல்நிலை திரிந்தது.
இடையூறு—இடையுறு என்னும் முதல்நிலை திரிந்தது.
கோள் —கொள் என்னும் முதனிலை திரிந்தது.

(3) வினையாலணையும் பெயர்:

பலபேர் இருக்குமிடத்தில் ஒருவன் பேசினால், 'அங்கே பேசினவன் யார்?' என்று கேட்கிறோம். இவ்வாறே, சிரித்தவன் யார்? வந்தவன் யார்? என்றும் கேட்கிறோம். பேசினவன் (பேசின + அவன்) என்பது, பேசுதல் ஆகிய தொழிலைச் செய்த அவன் எனப் பொருள்படும். ஆகலின், 'பேசினவன் இராமன்' என்றால், பேசுதல் ஆகிய தொழிலைச் செய்தவன் இராமன் என்றாகும். இவ்வாறே, சிரித்தவன் (சிரித்த + அவன்) என்பது, சிரித்தலைச் செய்தவன் என்றும், வந்தவன் (வந்த + அவன்) என்பது, வருதலைச் செய்தவன் என்றும் பொருள் படும். இப்படி, ஒரு தொழிலினால் ஒரு பொருளுக்கு வரும் பெயர்களுக்கு வினையாலணையும் பெயர் என்பது பெயர். பேசினவன் யார்? என்பதைப் பேசினான் யார்? என்றும் சொல்லலாம்.

[தொழிற்பெயர்— தொழிலைக் குறிக்கும்; வினையாலணையும் பெயர்—தொழிலைச் செய்யும் பொருளைக் குறிக்கும்.]

ஆகு பெயர் :

எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என்னும் அளவின் பெயர்கள், பிறபொருள்களுக்குப் பெயராக வரும். அவ்வாறு ஆகும்போது, அவற்றிற்கு அளவை யாகுபெயர் என்பது பெயர்.

ஐந்து வந்தாலும் அவசரம் ஆகாது

என்பதில், ஐந்து என்னும் எண்ணின் பெயர், அந்த அளவுள்ள பொன்னைத் தெரிவிக்கின்றது. அதனால், இங்கே ஐந்து என்பது எண்ணலளவை யாகுபெயர்.

கத்தரிக்காய் விற்பவனைப் பார்த்து,
'எனக்கு ஒரு வீசை கொடு'

என்றால், வீசை என்பது வீசை எடையுள்ள கத்தரிக்காயைக் குறிக்கும். அதனால், இங்கு வீசை என்பது எடுத்தலளவை யாகுபெயர்.

'உண்பது நாழி'

என்றால், நாழி என்பது நாழி அளவுள்ள அரிசி முதலியவற்றைக் குறிக்கும். ஆகலின், இங்கு நாழி என்பது முகத்தலளவை யாகுபெயர்.

'உடுப்பது நான்கு முழம்'

என்பதில், நான்கு முழம் என்பது நான்கு முழ அளவுள்ள ஆடையைக் குறிக்கின்றது. ஆதலால், இங்கு முழம் என்பது நீட்டலளவை யாகுபெயர்.

இனி, காரண ஆகுபெயர், காரிய ஆகுபெயர் என இரு வகை ஆகுபெயர் உண்டு.

அவளுடம்பில் மஞ்சாடிப் பொன்கூட இல்லை

என்பதில், பொன் என்பது பொன்னுற்செய்த ஆபரணத்தைக் குறித்தலால், கருவி யாகுபெயர். இதனை, காரண ஆகுபெயர் என்றும் கூறலாம். ஆபரணத்துக்குக் காரணம் பொன் ஆதலின், பொன் காரண ஆகுபெய ராயிற்று.

அலங்காரம் படி

என்பதில், அலங்காரம் என்பது, அலங்காரத்தை அறிவித்தற்குக் காரணமான நூலுக்கு ஆதலின், காரிய ஆகுபெயர்.

வேற்றுமை

முதல் வேற்றுமை:

பெயர்ச்சொல், கருத்தாவின் பொருளை யுணர்த்துமிடத்து, முதல்வேற்றுமை யாகும். அதனை எழுவாய் வேற்றுமை எனவும் வழங்கலாம். முதல்வேற்றுமையின் பொருள், கருத்தாப்பொரு ளாகும்.

தச்சன் நாற்காலியைச் செய்தான்.

இதில், தச்சன் என்னுஞ் சொல், தச்சன், நாற்காலியைச் செய்த கருத்தா எனக் குறித்தலின், அஃது எழுவாய்ப் பொருள தாயிற்று.

முதல் வேற்றுமை—வினைச்சொல்லையும், பெயர்ச்சொல்லையும், வினுச்சொல்லையும் கொண்டு முடியும்.

இராமன் படிக்கின்ருன்—வினைச்சொல்
இராமன் என் தம்பி—பெயர்ச்சொல்
இராமன் யாவன்?—வினுச்சொல்

இரண்டாம் வேற்றுமை:

இரண்டாம் வேற்றுமையின் பொருள் கருமப்பொருள். அஃதாவது, கருத்தா செய்த தொழிலின் பயனுக்குச் சார்பா யிருக்கும் பொருள். அப்பொருளை அறிவித்தற்கு ஐ என் னும் உருபு வரும்.

கருமப்பொருளை—ஆக்குதல், அழித்தல், அடைதல், நீத்தல் (விடுதல்), விரும்புதல், வெறுத்தல், அறிதல் என்னும் ஏழு பிரிவாகக் கூறலாம்.

1. ஆக்குதல் —வீட்டைக் கட்டினன்.
2. அழித்தல் —வீட்டை இடித்தான்.
3. அடைதல் —வீட்டை அடைந்தான்.
4. நீத்தல் —வீட்டை விட்டான்.
5. விரும்புதல்—பண்டத்தைத் தின்றான்.
6. வெறுத்தல்—நஞ்சை உண்டான்.
7. அறிதல் —நூற்பொருளை அறிந்தான்.

மூன்றும் வேற்றுமை:

கருத்தா, ஒரு தொழிலைச் செய்தற்கு வேண்டிய கருவி மூன்றும் வேற்றுமைப் பொருளதாம். அதனைக் குறித்தற்கு, ஆல் என்னும் உருபு வரும்.

தச்சன் நாற்காலியைச் செய்தற்கு, பலகை முதலியன வேண்டும்; உளி முதலியனவும் வேண்டும். ஆயின், பலகை முதலியனவே நாற்காலியாகச் சமைகின்றன; உளி முதலியன நாற்காலியாகச் சமைதல் இல்லை. ஆதலின், நாற்காலி செய் தற்கு வேண்டிய கருவிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அக் கருவிகளுள், பலகை முதலியவற்றை முதற் கருவி என்

றும், உளி முதலியவற்றைத் துணைக் கருவி என்றும் வழங்குவர்.

தச்சன் மரத்தால் நாற்காலி செய்தான்—மரம் முதற்கருவி.
தச்சன் உளியால் நாற்காலி செய்தான்—உளி துணைக்கருவி.

இனி, மூன்றும் வேற்றுமைக்கு உடனிகழ்ச்சிப் பொருளும் உண்டு. அப்பொருளைத் தருதற்கு ஒடு, ஓடு என்னும் உருபுகள் வரும்.

ஆசிரியனோடு மாணாக்கன் வந்தான்	—ஒடு	உடன்நிகழ்ச்சி.
தாயோடு குழந்தை வந்தது	—ஓடு	

வருதலாகிய தொழில், இருவருக்கும் ஒருங்கே நிகழ்தலின், உடன்நிகழ்ச்சிப்பொருள் ஆயிற்று.

நான்காம் வேற்றுமை :

நான்காம் வேற்றுமையின் பொருள், கோடற் பொருள் (கொள்ளுதற்கு வரும் பொருள்). அதன் உருபு, கு என்பது.

நான்காம் வேற்றுமை—கொடை, பகை, நட்பு, தகுதி, முறை, அச்சம், பண்பு முதலிய பல பொருள்களில் வரும்.

ஏழைகளுக்கு அன்னம் இட்டான்—கொடை
பாம்புக்குப் பகை கீரி —பகை
இராமனுக்கு நண்பன் சுக்ரீவன் —நட்பு
செங்கோல் அரசர்க்குத் தக்கது —தகுதி
இராமனுக்குத் தம்பி இலக்குவன் —முறை
புலிக்கு அஞ்சி ஓடினான் —அச்சம்
அவனுக்கு இவன் நல்லவன் —பண்பு

ஐந்தாம் வேற்றுமை :

ஐந்தாம் வேற்றுமையின் உருபு இன் என்பது. அத னோடு நின்று என்பது சேர்ந்துவருதலும் உண்டு. ஐந்தாம் வேற்றுமை—நீங்குதல், ஒப்பு, எல்லை, ஏது[1] முதலிய பொருள் களில் வரும்.

குதிரையினின்று இறங்கினான்	—நீங்குதல்
அன்னம், பாலின் வெள்ளையானது	—ஒப்பு
மயிலாப்பூரின் வடக்கு, திருவல்லிக்கேணி	—எல்லை
வியாபாரத்திற் பணஞ் சேர்ந்தது	—ஏது

[பாலின் = பால்போல. வியாபாரத்தின் = வியாபாரத்தினால்.]

குறிப்பு:—பணஞ் சேர்ந்ததற்கு வியாபாரம் காரணமாதுமே யன் றிக் கருவி ஆகாது. ஆதலின், இதனை மூன்றும் வேற்றுமைப் பொருளாகக் கொள்ளுதல் தகாதாயிற்று.

ஆறும் வேற்றுமை :

இராமனது புத்தகம்

என்றால், இராமனுக்கும் புத்தகத்துக்கும் உரிமை யுளது எனத் தெரிகின்றதன்றோ? அவ்வுரிமையைத் தெரி விக்க வந்தது அது என்னும் உருபு. இவ்வாறே,

இராமனது கை

என்றாலும், இராமனுக்கும் கைக்கும் உரிமை யுளது. ஆயின், 'இராமனது புத்தகம்' என்பதில், புத்தகம் இராம னோடு சேர்ந்திராமல் தனியே இருக்கின்றது; 'இராமனது கை' என்பதில், கை இராமனை விட்டு நீங்காமல் அவனோடு சேர்ந்திருக்கிறது. ஆகலின், இவ்விரண்டு பொருள்களின்

1. ஏது—கருத்தா அடையும் பயனுக்குக் காரணமாயிருப்பது.

உரிமைக்கும் வேறுபாடு உளதென்பது நன்கு விளங்கும். அது கருதி, கை என்பது போல, விட்டு நீங்காமலேயே உரிமையா யிருப்பதைத் தற்கிழமைப் பொருள் என்றும், புத்தகம் என்பதுபோல, விட்டு நீங்கியும் உரிமை யுள்ளதைப் பிறிதின் கிழமைப் பொருள் என்றும் வழங்குகின்றனர்.

தற்கிழமைப் பொருள்.

இராமனது கை மரத்தினது கிளை பூவினது இதழ்	உறுப்பு
இராமனது கருமை பாலினது வெண்மை	நிறம்
இராமனது நடை மரத்தினது அசைவு	தொழில்
குதிரைப் பந்தி ஆட்டு மந்தை	ஒன்றன் கூட்டம்
மஞ்சட்பொடி சிப்பிச் சுண்ணம்பு தந்தச் சீப்பு	திரிபின் ஆக்கம்

[திரிபின் ஆக்கம் ஆவது, ஒரு பொருள் மற்றொரு பொருளாக மாறுதல். மஞ்சட்பொடி என்பதில், மஞ்சள் தன் உருமாறிப் பொடியானது காண்க.]

பிறிதின்கிழமைப் பொருள்.

இராமனது புத்தகம்—பொருள்

இராமனது ஊர்—இடம்

அரசனது (பிறந்த) நாள்—காலம்

ஏழாம் வேற்றுமை:

புத்தகம் பலகைமேல் இருக்கின்றது

என்பதில், புத்தகம் இருத்தற்கு இடமாயிருப்பது பலகையாகலின், மேல் என்னும் உருபு அந்த இடப்பொருளைக் காட்ட வந்தது. இதனால், ஏழாம் வேற்றுமையின் பொருள் இடப்பொருள் என்பது விளங்கும். இனி,

இராமன் வீட்டில் இருக்கின்றான்
எள்ளில் எண்ணெய் இருக்கின்றது

என்பவற்றைக் கவனியுங்கள். வீடும், எள்ளும் இடமாயினும், இராமன் வீடுமுழுவதிலும் நிறைந்திருக்கவில்லை; எண்ணெயோ எள் முழுவதிலும் நிறைந்திருக்கின்றது. ஆகலின்,

இராமன் இருக்குமிடம் —ஏகதேசம், ஓரிடம்
எண்ணெய் இருக்குமிடம் —முழுவதும்

எனப்படும். இடத்தை இவ்வாறு இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

புத்தகம் பலகைமேல் இருக்கின்றது—(ஏகதேசம்)
பூவில் மணம் உளது —(முழுவதும்)

என்பவற்றை இவ்வாறே அறிந்துகொள்க.

ஏழாம் வேற்றுமைக்குக் காலப்பொருளும் உண்டு.

இளவேனிலில் மாமரம் காய்க்கும்.
காரில் மயில்கள் ஆடும்.

என்பன காண்க.

இனி, பல பொருள்களுள் ஒன்றனைப் பிரித்துக்கூறு மிடத்து, ஏழாம் வேற்றுமையின் உருபுகளுள் உள் என்னும் உருபு வரும்.

அவர்களுள் இவன் நல்லவன்
விலங்குகளுள் பெரியது யானை

என வரும். இவ்வாறன்றி,

[1] அவர்களில் இவன் நல்லவன்
விலங்குகளில் பெரியது யானை

என்று எழுதுவது தவறாகும்.

எட்டாம் வேற்றுமை :

படர்க்கைப் பொருளை விளித்து எதிர்முக மாக்குவதே எட்டாம் வேற்றுமையின் பொருள். இதனை விளிவேற்றுமை என்று வழங்குவர். [விளித்தல்—அழைத்தல்.]

அருகில் இருப்பவரை விளித்தற்கு அண்மைவிளி என்பது பெயர்.

தொலையில் இருப்பவரை விளித்தற்குச் சேய்மை விளி என்பது பெயர்.

அண்மை விளி :

1. அண்மை விளியில், பெயர்ச்சொல் இயல்பாக இருக்கும்.

தம்பி, படி -- இயல்பாக நின்றது

---

1. 'அவர்களில் இவன் நல்லவன்' என்று எழுதினால், அவர்களைக்காட்டிலும் இவன் நல்லவன் என்னும் பொருளே வரும்; அவர்களுக்குள் இவன் நல்லவன் என்னும் பொருள் வாராது.

2. ஈற்றெழுத்துக் கெடுதலும் உண்டு.

நாராயண, வா—ஈறு கெட்டது.

சேய்மை விளி :

1. ஈற்றெழுத்து நீண்டு ஒலிக்கும்.

தம்பீ—ஈற்று இகரம் நீண்டது.

2. *ஈற்றெழுத்துக்கெட, அதற்கு அடுத்த எழுத்து நீளும்.*

அப்பா } *—ஈற்று னகரம் கெட,*
அண்ணா } *அதனை அடுத்த அகரம் நீண்டது.*

3. *ஈற்று ஐகாரம், ஆய் என்றும், ஆ என்றும் திரியும்.*

அன்னாய்—அன்னை என்பதன் ஐ, ஆய் எனத்திரிந்தது.
அம்மா —அம்மை என்பதன் ஐ, ஆ எனத்திரிந்தது.

4. *ஈற்றெழுத்தின்மேல் ஏகாரம் சேரும்.*

மகனே
மக்களே
நாயே
கிளியே } *ஏ—சேர்ந்தது.*

வேற்றுமை யுருபுகளை ஏற்காத பெயர்கள்

முன்னிலைப் பெயர்களுள் நீயிர், நீவிர் என்னும் பெயர்களும், தன்மைப் பெயர்களுள் நான் என்னும் பெயரும் வேற்றுமையுருபுகளை ஏற்கமாட்டா ; மற்ற எல்லாப் பெயர்களும் வேற்றுமை யுருபுகளை ஏற்கும்.

வேற்றுமை கொண்டு முடியுஞ் சொற்கள்:

ஆறும் வேற்றுமையும், எல்லைப் பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமையும் பெயரையே கொண்டு முடியும்; மற்ற வேற்றுமைகளெல்லாம் வினைச்சொல்லைக் கொண்டு முடியும்.

இராமனது புத்தகம்

மயிலாப்பூரின் வடக்கு, திருவல்லிக்கேணி

என, பெயரைக்கொண்டு முடிந்தன.

வினைச்சொல்லைக் கொண்டு முடிபவற்றிற்கு உதாரணம்:

வேற்.

1. இராமன் வந்தான்.

2. இராமனைக் கண்டேன்.

3. இராமனோடு வந்தான்.

,, இராமனால் வென்றான்.

4. ஏழைகளுக்குப் பொருள் கொடுத்தான்.

5. குதிரையினின்று இறங்கினான்.

7. இராமன் வீட்டில் இருக்கிறான்.

என்பன காண்க. இவற்றுள், நான்காம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் பெயரையும் கொண்டு முடியும்.

வேற்.

4. இராமனுக்குத் தம்பி இலக்குவன்

7. எள்ளில் எண்ணெய்

என வரும்.

சொற்கள் வேற்றுமையுருபு ஏற்கும்போது வருஞ் சாரியைகள்

1. அது, இது, எது, யாது என்னுஞ் சொற்கள் வேற்றுமை யுருபு ஏற்கும்போது அன் சாரியை வரும்.

அதனை —அது + அன் + ஐ

அதனால் —அது + அன் + ஆல்

இதற்கு —இது + அன் + கு

இதனின் —இது + அன் + இன்

எதனை —எது + அன் + ஐ

யாதனின்—யாது + அன் + இன்

எனக் காண்க.

2. அவ், இவ் என்பவற்றிற்கு அற்றுச் சாரியை வரும்.

அவற்றை —அவ் + அற்று + ஐ

இவற்றால் —இவ் + அற்று + ஆல்

3. குற்றியலுகர ஈற்றுப் பெயர்களுக்கு இன் சாரியை வரும்.

குரங்கினை —குரங்கு + இன் + ஐ

குரங்கிற்கு —குரங்கு + இன் + கு

குரங்கினது—குரங்கு + இன் + அது

4. எண்ணுப் பெயர்களுக்கு அன் சாரியை வரும்.

ஒன்றனை—ஒன்று + அன் + ஐ

எட்டனை—எட்டு + அன் + ஐ

II. வினைச்சொல்

வினைச்சொற்கள் காலத்தைக் காட்டும். ஆயின், சில வினைச்சொற்கள், காலத்தை வெளிப்படையாகக் காட்டுதல் இல்லை; குறிப்பாகக் காட்டும்.

அவன் வந்தான்

என்பதில், வந்தான் என்பது இறந்த காலத்தை வெளிப் படையாகக் காட்டுகின்றது.

அவன் நல்லன்

என்பதில், நல்லன் என்பது அவ்வாறு காலத்தைக் காட்டவில்லை. ஆயின்,

அவன் இப்போது நல்லன்

என்றால், இப்போது என்னுஞ் சொல்லினால், நல்லன் என்பது நல்லவனாயிருக்கிறான் என நிகழ்காலத்தைக் காட்டும். இதுபோலவே,

அவன் முன்பு நல்லன்

என்றால், முன்பு என்னுஞ் சொல்லினால், நல்லன் என் பது நல்லவனாயிருந்தான் என இறந்த காலத்தைக் காட்டும். இவை காலத்தைக் குறிப்பினால் காட்டுதலின், இவற்றிற்கு, குறிப்புவினை என்பது பெயர். இவ்வாறன்றி, காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினைக்கு, தெரிநிலைவினை என் பது பெயர்.

தெரிநிலை வினைமுற்று

பகுபதத்தின் உறுப்புக்கள்:

தெரிநிலை வினைச் சொல்லில், செயலைக் குறிக்கும் உறுப்பு முதலில் நிற்கும். அதனால், அதனை முதல்நிலை என்பர்; பகுதி

என்றும் வழங்குவர். அச்சொல்லின் இறுதியில் நிற்கும் உறுப்பினை இறுதி நிலை என்பர்; அதனை விகுதி என்றும் வழங்குவர். முதல்நிலை இறுதிநிலைகளுக்கு இடையே நிற்பதை இடைநிலை என்பர். சில சொற்களில், இடைநிலைக்கும் இறுதி நிலைக்கும் இடையே ஓர் உறுப்பு இருக்கும். அதற்கு, சாரியை என்பது பெயர். சில சொற்களில் முதல்நிலைக்கும் இடைநிலைக்கும் இடையே ஏதேனும் ஓரெழுத்து நிற்கும். அதற்கு, சந்தி என்பது பெயர். சில சொற்களில் பகுதி திரிந்திருக்கும். அதற்கு, விகாரம் என்பது பெயர்.

1. முதல் நிலை— செயலைக் குறிக்கும்.

2. இறுதிநிலை—வினையின் கருத்தாவினைக் குறிக்கும். [அதனால், திணை, பால், எண், இடம் அறியலாகும்.]

3. இடைநிலை—காலத்தைக் குறிக்கும்.

இம் மூன்று உறுப்புக்களும் தெரிநிலை வினைச்சொற்கள் எல்லாவற்றிலும் இருக்கும்.

சொல்	முதல் நிலை (பகுதி)	விகாரம்	சந்தி	இடை நிலை	சாரியை	இறுதி நிலை (விகுதி)
செய்தான்	செய்	—	—	த்	—	ஆன்
செய்தனன்	செய்	—	—	த்	அன்	அன்
இருந்தனன்	இரு	—	ந்	த்	அன்	அன்
கண்டனன்	காண்	கண் எனக் குறுகியது	—	ட்	அன்	அன்
உண்ணான்	உண்	—	—	ஆ— எதிர் மறை கெட்டது	—	ஆன்

இறுதிநிலை (விகுதி)

1. தன்மை ஒருமைக்கு என், ஏன் விகுதிகள் வரும்.

என்—யான் செய்தனென்

ஏன்—யான் செய்தேன்

2. தன்மைப் பன்மைக்கு எம், ஏம்; அம், ஆம்; ஓம் என்னும் விகுதிகள் வரும். அவற்றுள், தன்மையோடு படர்க்கை கூடிய சொற்களில் எம், ஏம் விகுதிகள் நிற்கும்.

எம்—யாம் செய்தனெம்

ஏம்—யாம் செய்தேம்

தன்மையோடு முன்னிலை கூடிய சொற்களில் அம், ஆம் விகுதிகள் நிற்கும்.

அம்—நாம் செய்தனம்

அம்—நாம் செய்தாம்

தன்மையோடு படர்க்கை, முன்னிலை இவ்விரண்டுங் கூடிய சொற்களுக்கு ஓம் விகுதி வரும்.

ஓம்—நாம் செய்தோம்

[இவை பிறழ்ந்தும் வழங்குகின்றன.]

3. முன்னிலை ஒருமைக்கு, இ, ஐ, ஆய் வரும்.

இ—நீ செய்தி

ஐ—நீ செய்தனை

ஆய்—நீ செய்தாய்

4. முன்னிலைப் பன்மைக்கு, இர், ஈர், ஈர் + கள்[1] வரும்.

இர்—நீவிர் செய்தனிர்

ஈர்—நீர் செய்தீர்

ஈர் + கள்—நீங்கள் செய்தீர்கள்

---

1. கள்—விகுதிமேல் விகுதி என்பர்.

5. முன்னிலைப் பன்மை ஏவல்வினைக்கு, மின், உம் உங்கள் வரும்.

மின் —நீவிர் செய்மின்
உம் —நீர் செய்யும்
உங்கள் —நீங்கள் செய்யுங்கள்

6. படர்க்கை ஆண்பாலுக்கு அன், ஆன் வரும்.

அன்—அவன் செய்தனன்
ஆன்—அவன் செய்தான்

7. படர்க்கைப் பெண்பாலுக்கு அள், ஆள் வரும்.

அள்—அவள் செய்தனள்
ஆள்—அவள் செய்தாள்

8. படர்க்கைப் பலர்பாலுக்கு அர், ஆர், ஆர்கள் வரும்.

அர்—அவர்கள் செய்தனர்
ஆர்—அவர் செய்தார்
ஆர்கள்—அவர்கள் செய்தார்கள்

9. படர்க்கை ஒன்றன்பாலுக்கு, து, று வரும்.

து —அது வந்தது
று[1]—அது போயிற்று

10. படர்க்கைப் பலவின்பாலுக்கு அ வரும்.

அ—அவை வந்தன

---

1. இஃது இறந்தகாலத்தில்மட்டுமே வரும்.

வினையின் வகைகள்

தன்வினை, பிறவினை.

ஒரு பொருள், தானாகவே செய்யுந் தொழில் தன்வினை எனப்படும். அவ்வாறன்றி, பிறிதொரு பொருளின் ஏவலால் நடைபெறுந்தொழில் பிறவினை எனப்படும்.

மாணாக்கன் படிக்கின்றான்—(தன்வினை)

ஆசிரியர் மாணாக்கனைப் படிப்பிக்கின்றார்—(பிறவினை)

என்பவற்றுள், முதல் வாக்கியத்தில், படித்தல் மாணாக்கன் தானாகவே செய்யுந் தொழிலாதலின் அது, தன்வினையாயிற்று. இரண்டாம் வாக்கியத்தில், படித்தலாகிய தொழில் ஆசிரியரால் நடைபெறுகின்றதாகலின், அது பிறவினையாயிற்று.

பிறவினையில், தொழில் செய்யுங் கருத்தாவும், தொழில் செய்ய ஏவுங் கருத்தாவும் ஆக இரண்டு கருத்தா இருக்கும்.

ஆசிரியர் மாணாக்கனைப் படிப்பிக்கின்றார்

என்னும் வாக்கியத்தில்,

படித்தல்—மாணாக்கனது தொழில்.

படிக்கும்படி ஏவுதல்—ஆசிரியரது தொழில்.

ஆகவே,

படித்தற்குக் கருத்தா—மாணாக்கன்.

படிப்பித்தற்குக் கருத்தா—ஆசிரியர்.

இவ்வாறே,

வண்டிக்காரன் மாட்டை ஓட்டினான்

என்றால்,

ஓடுதற்குக் கருத்தா—மாடு

ஓட்டுதற்குக் கருத்தா—வண்டிக்காரன்

பிறவும் இவ்வாறே காண்க. இனி,

படிக்கின்றான் என்னும் தன்வினையில், முதல்நிலை யாது?

படி—என்பது.

படிப்பிக்கின்றான் என்னும் பிறவினையில் முதல்நிலை யாது?

படிப்பி—என்பது.

இங்கே, தன்வினையைப் பிறவினை யாக்க வந்தது யாது?

பி—என்பது.

படி + பி = படிப்பி.

சில சொற்களில், வி—வருதல் உண்டு.

பாடினான் (பாடு + இன் + ஆன்) —தன்வினை

பாடுவித்தான் (பாடு + வி + த் + த் + ஆன்)–பிறவினை

இவற்றால், தன்வினைப் பகுதிகளோடு, பி, அல்லது, வி சேர்ந்தால், பிறவினைப் பகுதி ஆகும் என்பது விளங்கும்.

1. பி, வி—என்னும் இவ் விரண்டே யன்றி, சில வினைகளில் கு, சு, து, பு இவற்றுள் ஒன்று சேர்ந்தும் பிற வினைப் பகுதியாய் வரும்.

தன்வினைப்பகுதி		சேர்ந்தது		பிறவினைப்பகுதி
போ	—	கு	—	போக்கு
பாய்	—	சு	—	பாய்ச்சு
நட	—	து	—	நடத்து
துயில்	—	து	—	துயிற்று
உருள்	—	து	—	உருட்டு
எழு	—	பு	—	எழுப்பு,

என்பன காண்க.

2. கு, டு, று இவ் வீற்றுத் தன்வினைப் பகுதிகளில் இடையே அவ்வொற்றுத் தோன்றின், பிறவினைப் பகுதி யாகும்.

தன்வினைப்பகுதி	தோன்றியது	பிறவினைப்பகுதி
ஆகு	க்	ஆக்கு
கூடு	ட்	கூட்டு
ஏறு	ற்	ஏற்று

3. சில தன்வினைப் பகுதிகளில், மெல்லொற்று வல் லொற்று ஆகத் திரியின், அவை பிறவினைப்பகுதிகள் ஆகும்.

தன்வினைப்பகுதி	திரிந்தது	பிறவினைப்பகுதி
நீங்கு	ங் = க்	நீக்கு
வருந்து	ந் = த்	வருத்து
கிளம்பு	ம் = ப்	கிளப்பு

பயிற்சி

கீழ் வருவனவற்றுள், தன்வினையைப் பிறவினையாக வும், பிறவினையைத் தன்வினையாகவும் மாற்றி எழுதுக.

இராமன் படித்தான்.
கிளி பேசுகின்றது.
தாய் குழந்தையை உண்பித்தாள்.
உழவன் வயலுக்கு நீர் பாய்ச்சினான்.
அவன் மனம் உருகிவிட்டது.
ஆசிரியர் மாணாக்கனைத் திருத்தினார்.
சக்கரம் உருள்கின்றது.
அவன் மற்போர் பயில்கின்றான்.

ஏவல்வினை:

முருகா, விறகு வெட்டு

என்பதில், வெட்டு என்பது, முருகனை வேலை செய்ய ஏவுதலின், ஏவல்வினை எனப்படும். இங்கு, முருகனொருவனையே ஏவுதலின், வெட்டு என்னும் முதல்நிலையே ஏவல் வினையாக வந்தது. இனி, பலரை ஏவ வேண்டுமாயின், முதல் நிலையோடு, மின், உம், உம் + கள் என்பவற்றுள் ஒன்றனைச் சேர்த்துச் சொல்லவேண்டும்.

மின்— நீவிர் எழுதுமின்
உம்— நீர் எழுதும்
உம் + கள்—நீங்கள் எழுதுங்கள்

ஒருமையேவலில் தி (து + இ) என்பது சேர்ந்து வருதலும் உண்டு.

முருகா, விறகு வெட்டுதி

வேண்டும் என்னுஞ் சொல்லை எடுத்தலோசையால் சில இடங்களில் ஏவற்பொருளில் ஒருமை, பன்மை இரண்டுக்கும் வழங்குவர்.

நீ காலை ஆறுமணிக்கு வரவேண்டும்.
நீங்கள் காலை ஆறுமணிக்கு வரவேண்டும்.

வியங்கோள் வினை:

க, அர் என்னும் விகுதிகளை ஈற்றிலுடைய சொற்கள் வியங்கோளாக வரும். அது படர்க்கை, முன்னிலை, தன்மை என்னும் மூன்றிடத்துக்கும் வரும்.

வாழ்த்துதற் பொருள்.

	க	அர்	
அவன்	வாழ்க—	வாழியர்	படர்க்கை
அவள்	வாழ்க—	வாழியர்	
அவர்	வாழ்க—	வாழியர்	
அது	வாழ்க—	வாழியர்	
அவை	வாழ்க—	வாழியர்	
நீ	வாழ்க—	வாழியர்	முன்னிலை
நீங்கள்	வாழ்க—	வாழியர்	
யான்	வெல்க—		தன்மை
யாம்	வெல்க—		

வைதற் பொருள்.

அவன் நாசமாய்ப் போக.

வேண்டிக்கோடற் பொருள்:

கடவுள் காக்க

தாங்கள் வருக

என்பனபோல வரும்.

வேண்டும் என்பது, வேண்டிக்கோடற் பொருளிலும், வாழ்த்துதற் பொருளிலும், வைதற் பொருளிலும் வருதல் உண்டு. அப்பொழுது, அது வியங்கோள்வினை எனப்படும்.

ஐயா, என்னைக் காப்பாற்றவேண்டும்—வேண்டிக்கோடல்
நீ, சுகமாக வாழவேண்டும் —வாழ்த்து
நீ, நாசமாய்ப் போகவேண்டும் —வைதல்

இக்காலத்தில், 'உம்' விகுதியும் முன்னிலையில் வருகின்றது.

நீ வந்து சேரவும்
நீங்கள் வந்து சேரவும்

என்பன அறிக.

வியங்கோட் பொருளில், படர்க்கை யிடத்திற்கு, 'அட்டும்' என்னுஞ் சொல் சேர்ந்தும் வரும்.

அவன் ஊருக்குப் போகட்டும்.
அவன் கடைக்குப் போய் வரட்டும்.

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடு.

மேற்காட்டிய உதாரணங்களால், ஏவலுக்கும் வியங்கோளுக்கும் சில வேறுபாடுகள் உள என்பது விளங்கும்.

அவை :

1. ஏவல், முன்னிலையிலேயே வரும்.
   வியங்கோள், முன்னிலையிலும் வரும் ; படர்க்கையிலும், தன்மையிலும் வரும்.
2. ஏவலில், ஒருமை யேவலுக்கும் பன்மை யேவலுக்கும் சொல்லில் வேறுபாடு உண்டு.
   வியங்கோளில், ஒருமைக்கும் பன்மைக்கும் சொல்லில் வேறுபாடு இல்லை.
3. ஏவலுக்கு, கட்டளைப்பொருள் ஒன்றே உண்டு.
   வியங்கோளுக்கு வாழ்த்துதல், வைதல், வேண்டிக்கோடல் முதலிய பல பொருள் உண்டு.

பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களில், ஏவல் ஒருமைவினையை ஏவற் பன்மைவினை யாகவும், ஏவற் பன்மைவினையை வியங்கோள்வினை யாகவும், வியங்கோள் வினையை ஏவற் பன்மை வினையாகவும் எழுதுக.

நீ கடைக்குப் போ.
தாங்கள் எழுந்தருள்க.
நீங்கள் படியுங்கள்.
நீர் எழுதும்.

செய்யும் என்னும் முற்று:

உம் என்னும் விகுதியை ஈற்றிலுள்ள வினைச்சொல் லுக்கு, செய்யும் என்னும் முற்று என்பது பெயர். அது, படர்க்கை ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் வரும்; செய்யுட்களில் ஆண்பால் பெண்பால்களுக்கும் வருகின்றது.

மாடு வரும் —ஒன்றன் பால்

மாடுகள் வரும் —பலவின் பால்

'குலஞ்செய்தவ மென்றினிது கூறமுனி கூறும்—ஆண்பால்

'கேகயர்க்கிறை திருமகள்......நோக்கினள் சொல்லும்' —பெண்பால்

இவற்றில், செய்யும் என்னும் முற்று, எதிர் காலத்தில் வந்துளது காண்க. இச்சொல், எதிர்காலமேயன்றி, தன்மை, குறிப்பு, வாழ்த்து, ஏற்பாடு முதலிய பல பொருள்களையும் உணர்த்தி வரும்.

தீ சுடும்
தண்ணீர் குளிரும் —தன்மை

ஒருகால் நாளை மழை பெய்யும்—குறிப்பு

அவனுக்கு நன்மை உண்டாகும்—வாழ்த்து

ரெயில், காலை எட்டு மணிக்கு இங்கு வரும் —ஏற்பாடு

இவ்வாறே, உயர்திணையில் எதிர்காலமுற்று வினைச் சொல்லும், தனக்குரிய எதிர்காலத்தையே யன்றி, கடமை, திறன், ஏற்பாடு, குறிப்பு முதலிய பல பொருள்களையும் உணர்த்தும்.

அவர் நாளைக்கு வருவார் —எதிர்காலம்

குயவன் பானை வனைவான்—கடமை

எங்கள் உபாத்தியாயர் நன்றாகப் பாடஞ் சொல்லுவார் } —திறன்
அவர் எந்நாளும் பத்து மணிவரையும் வீட்டில்தான் இருப்பார் } —ஏற்பாடு
ஒருகால் அவர், இந்த நேரத்தில் வீட்டில் இருப்பார் } —குறிப்பு

உடன்பாடு, எதிர்மறை:

மேற்கூறிய பலவகைப்பட்ட வினைகளையெல்லாம் உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

உடன்பாட்டு வினை, தொழிலின் நிகழ்ச்சியைக் குறிக்கும்.

அவன் உண்டான்.
அவன் வருவான்.

எதிர்மறை வினை தொழில் நிகழாமையையும், தொழிலை மறுத்தலையும் உணர்த்தும்.

அவன் உண்டிலன்—தொழில் நிகழாமை
தீயவரோடு சேராதே—மறுத்தல்

எதிர்மறை வினைமுற்று:

1. மூன்று காலத்திலும் உடன்பாட்டு வினைமுற்றுக்களோடு, அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல; அல்லேன், அல்லேம்; அல்லை, அல்லீர் என்னுஞ் சொற்களைச் சேர்த்துக் கூறின், எதிர்மறை வினைமுற்று ஆகும்.

வந்தானல்லன் — அல்லன்
வந்தாளல்லள் — அல்லள்
வந்தாரல்லர் — அல்லர்
வந்ததன்று — அன்று

வந்தன அல்ல —அல்ல
வந்தேனல்லேன்—அல்லேன்
வந்தேமல்லேம் —அல்லேம்
வந்தாயல்லை —அல்லை
வந்தீரல்லீர் —அல்லீர்

இவ்வாறே மற்றைக் காலங்களோடும் ஒட்டுக.

2. உடன்பாட்டு வினைமுற்றுக்களோடு, இல்லை என்னுஞ் சொல்லைச் சேர்த்தாலும், எதிர்மறை வினைமுற்று ஆகும்.

வந்தானில்லை
வந்தாரில்லை
வந்தேனில்லை
வந்தேமில்லை
வந்தாயில்லை
வந்தீரில்லை

3. இறந்தகால வினையெச்சத்தோடும், நிகழ்கால வினையில் கின்று இடைநிலையோடும், இலன், இலள், இலர், இலது, இல; இலேன், இலேம்; இலை, இலாய், இலீர் என்னுஞ் சொற்களைச் சேர்த்தால், இறந்தகால, நிகழ்கால எதிர்மறை வினைமுற்று ஆகும்.

வந்திலன் —இலன்
வந்திலள் —இலள்
வந்திலர் —இலர்
வந்திலது —இலது
வந்தில —இல
வந்திலேன் —இலேன்
வந்திலேம் —இலேம்
வந்திலை, வந்திலாய் —இலை, இலாய்
வந்திலீர் —இலீர்

இவ்வாறே நிகழ்கால எதிர்மறைவினை அமைக்க.

4. செய என்னும் வாய்பாட்டு எச்சச் சொல்லோடு, இல்லை என்னுஞ் சொல்லைச் சேர்த்தாலும் எதிர்மறை வினை ஆகும். இவ்வழக்கு இறந்தகால வினையில் உளது.

அவன் வரவில்லை	*நான் வரவில்லை*
அவள் வரவில்லை	*நாங்கள் வரவில்லை*
அவர் வரவில்லை	*நாம் வரவில்லை*
அது வரவில்லை	*நீ வரவில்லை*
அவை வரவில்லை	*நீங்கள் வரவில்லை*

இனி, வினை செய்தலை மறுத்துக் கூறும் எதிர்மறை வினை முற்றுக்களில், பகுதியும் விகுதியுமே காணப்படும்; எதிர்மறையை உணர்த்தும் ஆகார இடைநிலை உயர்திணை வினையில் கெட்டுவிடும்; அஃறிணை வினையில் கெடாதிருக்கும்.

செய்யான்—(செய் + (ஆ) ஆன்	உயர்திணை
செய்யாள்—(செய் + (ஆ) ஆள்	வினையில்
செய்யார் —(செய் + (ஆ) ஆர்	ஆ-கெட்டது.
செய்யாது—(செய் + ஆ + து	அஃறிணையில்
செய்யா —(செய் + ஆ + [1] அ)	ஆ-கெடவில்லை

எதிர்மறை யேவல்வினைமுற்று:

1. உடன்பாட்டு ஏவல் வினைமுற்றில், பகுதியை அடுத்து, ஆ என்பதைச் சேர்த்துச் சொன்னால், எதிர்மறை யேவல் வினைமுற்று ஆகும்.

---

[1] செய்யா என்பதில், அஃறிணைப் பன்மையை உணர்த்தும் அ-விகுதி புணர்ந்து கெட்டது.

செய்தி—உடன்பாட்டு ஏவல் வினைமுற்று
செய்யாதி—(செய் + ஆ + தி) எதிர்மறை ஏவல் வினைமுற்று } ஒருமை.

செய்திர்—உடன்பாட்டு ஏவல் வினைமுற்று
செய்யாதிர்—(செய் + ஆ + திர்) எதிர்மறை ஏவல் வினைமுற்று } பன்மை.

செய்யாதி என்னும் ஒருமையேவல், செய்யாதே எனத் திரிந்தும் வழங்கும்.

2. விகுதி சேராத ஒருமை யேவல்வினையோடு, அல் என்னுஞ் சொல்லைச் சேர்த்தால் எதிர்மறை ஒருமை யேவல் ஆகும்.

செய்யல் (செய் + அல்)—செய்யாதே
உண்ணல் (உண் + அல்)—உண்ணாதே

அல் என்பது ஏல் எனத் திரிந்து செய்யேல் என்றும் வரும்.

3. அல் ஈற்று எதிர்மறை ஒருமையேவல் வினையோடு, மின் என்பதைச் சேர்த்தால், எதிர்மறைப் பன்மையேவல் ஆகும்.

செய்யன்மின் (செய்யல் + மின்) —செய்யாதேயுங்கள்
உண்ணன்மின் (உண்ணல் + மின்)—உண்ணாதேயுங்கள்

4. செய்யாதே என்னும் எதிர்மறை ஒருமை யேவலோடு உம், உங்கள் என்பவற்றைச் சேர்த்துச் சொல்லுதலும் உண்டு.

செய்யாதேயும் —(செய்யாதே + உம்)
செய்யாதேயுங்கள்—(செய்யாதே + உங்கள்)

எதிர்மறை வியங்கோள் வினை:

க-ஈற்று உடன்பாட்டு வியங்கோள் வினையில் பகுதியோடு, அல் என்பதைச் சேர்த்துச்சொன்னால், எதிர்மறை வியங்கோள் ஆகும்.

செய்க—உடன்பாட்டு வியங்கோள்.

செய்யற்க–(செய் + அல் + க) எதிர்மறை வியங்கோள்.

எதிர்மறைப் பெயரெச்சம்:

செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தில், பகுதியை அடுத்து ஆ என்னும் எதிர்மறை யிடைநிலையைச் சேர்த்தால், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும்.

செய்த —உடன்பாட்டுப் பெயரெச்சம்

செய்யாத (செய் + ஆ + த)–எதிர்மறைப் பெயரெச்சம்

எதிர்மறை வினையெச்சம்:

செய்து என்னும் வினையெச்சத்தில் பகுதியை யடுத்து ஆ என்பதைச் சேர்த்தால், எதிர்மறை வினையெச்சம் ஆகும்.

செய்து—உடன்பாட்டு வினையெச்சம்.

செய்யாது (செய் + ஆ + து)–எதிர்மறை வினையெச்சம்.

இனி, பகுதியோடு ஆ என்னும் எதிர்மறை இடைநிலையையும், அதனோடு மல், மே என்னும் விகுதிகளுள் ஒன்றனையுஞ் சேர்த்தாலும் எதிர்மறை வினையெச்சம் ஆகும்.

செய்யாமற் போனான் —(செய் + ஆ + மல்)

உண்ணுமே போனான் —(உண் + ஆ + மே)

III. இடைச்சொல்

இடைச்சொல்— பெயர்ச்சொல், வினைச்சொற்களைப் போலத் தனித்து வாராது ; அவற்றைச் சார்ந்து வரும்.

வேற்றுமை யுருபு, இடைநிலை, சாரியை, விகுதி, உவம வுருபு, சுட்டு, வினா இவையெல்லாம் இடைச்சொற்களே. இவையேயன்றி, ஏ, ஓ, உம், கொல், அந்தோ, ஐயோ, அம்மா, மற்று, பிற முதலிய சொற்களும் இடைச் சொற்க ளாகும்.

அவனை	ஐ	வேற்றுமையுருபு
போகின்றான்	கின்று	இடைநிலை
போகின்றனன்	அன்	சாரியை
வந்தான்	ஆன்	விகுதி
புலிபோலப் பாய்ந்தான்	போல	உவமவுருபு
அத்தெரு	அ	சுட்டு
வந்தானா	ஆ	வினா

(1) ஏகார இடைச்சொல் - பிரிநிலை, தேற்றம், எண், ஈற்றசை என்னும் நான்கு பொருளில் வரும்.

அவருள் இவனே நல்லவன்—பிரிநிலை.

பலருள் ஒருவனைப் பிரித்துக் கூறுதலின், ஈண்டு ஏகா ரம், பிரிநிலைப்பொருளது ஆயிற்று.

தருமமே வெல்லும்—தேற்றம்

தருமத்தினது உறுதியைக் கூறுதலின், ஈண்டு ஏகாரம் தேற்றப்பொருளைத் தந்தது.

நிலனே நீரே தீயே வளியே—எண்

இதில், நிலனும் நீரும் தீயும் வளியும் என எண்ணுப் பொருளைத் தருதலின், ஏகாரம் எண்ணுப் பொருளது ஆயிற்று.

'மறையோதி வசிட்டனும் வந்தனனே'—ஈற்றசை.

இதில், வந்தனன் என்னுஞ் சொல்லோடு சேர்ந்துவந்துள்ள ஏகாரத்திற்குப் பொருள் இல்லாததனால், அஃது, அசைநிலை ஆயிற்று. சொல்லின் ஈற்றிலேயே இவ்வாறு வருமாகலின், அதனை ஈற்றசை என்பர்

(2) ஓ என்னும் இடைச்சொல் — உயர்வுசிறப்பு, இழிவுசிறப்பு, ஒழியிசை, எதிர்மறை, வினா, அசைநிலை என்னும் ஆறு பொருளில் வரும்.

ஓ ஓ பெரியர் — உயர்வுசிறப்பு.
ஓ ஓ கொடியன் — இழிவுசிறப்பு.

'படிக்கவோ வந்தான்' என்றால், விளையாட வந்தான் என்னும் ஒழிந்த சொற்களைத் தருதலின், } ஒழியிசை.

'பெரியோர், தீச்செயலைச் செய்வாரோ!' என்றால், செய்யமாட்டார் எனப் பொருள் தருதலின்— } எதிர்மறை.

அவ்வுருவம், குற்றியோ மகனோ ?—வினா

'காணிய வம்மினோ'— இதில், ஓகாரத்திற்குப் பொருள் ஒன்றும் இல்லை. ஆகலின்— } அசைநிலை.

(3) உம் என்னும் இடைச்சொல்—உயர்வுசிறப்பு, இழிவுசிறப்பு, எதிர்மறை, ஐயம், இறந்தது தழுவிய எச்சம், எதிரது தழுவிய எச்சம், முற்று, எண் என்னும் எட்டுப் பொருளைத் தரும்.

குரங்கும் ஏறமுடியாத மரம் என்றால், மரமேறுதலில் வல்ல குரங்கும் என அதன் உயர்வு விளங்கும். அதனால்— } உயர்வுசிறப்பு.

இந்தச் சோற்றை நாயும் தின்னாது என்றால், நாயின் இழிவு தெரிதலின்— } இழிவுசிறப்பு.

அவன் இன்று வரவுங் கூடும் என்றால், வாராதிருக்கவுங் கூடும் எனப் பொருள் வருதலின்— } எதிர்மறை.

பத்தாயினும் எட்டாயினும் கொடு—ஐயம்.

அவன், இன்றும் வந்தான்— என்றால், நேற்றும் வந்தான் எனக் கழிந்த செய்தியை உணர்த்துதலின் — } இறந்தது தழுவிய எச்சம்.

அவன் நேற்றும் வந்தான்— என்றால், இன்றும் வருவான் என இனி வருஞ் செய்தியை உணர்த்துதலின்— } எதிரது தழுவிய எச்சம்

துரியோதனாதியர் நூற்றுவரும் மடிந்தனர்—முற்று.

தருமரும் வீமனும் விசயனும் நகுலனும் சகாதேவனும் என ஐவர் இருந்தனர்— } —எண்.

(4) கொல் என்பது - ஐயப்பொருளையும், அசைநிலைப் பொருளையும் தரும்.

‘இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்
வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காதல் இயம்புங்கொல்’ } ஐயம்.

‘நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா.’ —அசைநிலை

IV. உரிச்சொல்

கடைக்காரனைப் பார்த்து, 'நூல் கொடு' என்றால், 'எந்த நூல் வேண்டும்?' என்று வினவுவான். அப்போது நாம், 'கறுப்பு நூலைக் கொடு' என்றோ, 'சிவப்பு நூலைக் கொடு' என்றோ சொல்ல நேரும். இவற்றில் கறுப்பு, சிவப்பு என்பன, நூலை வேறுபடுத்தின. இவ்வாறே நல்ல பிள்ளை, தீய பிள்ளை என்னுமிடங்களில், நல்ல, தீய என்னுஞ் சொற்களும் பிள்ளைகளை வேறு படுத்துகின்றன. கறுப்பு, சிவப்பு என்பன நூல்களுக்கும், நல்ல, தீய என்பவை பிள்ளைகளுக்கும் உரிமையான பண்பினைத் தெரிவித்தலின், அவை உரிச்சொல் எனப்படும். இவ்வுதாரணங்களில் உரிச்சொற்கள், பொருள்களின் பண்பினைக் குறித்துநின்றன. இப்படிப்பட்ட சொற்களுக்குப் பெயருரிச்சொல் என்பது பெயர்.

இராமன் சாலப் பேசுகின்றான்.
சாத்தன் நனி உண்பான்.

என்பவற்றில், சால என்பது பேசுதல் ஆகிய வினையையும், நனி என்பது உண்ணுதல் ஆகிய வினையையுங் குறித்து நிற்றலின், இவை வினையுரிச்சொல் எனப்படும்.

சில உரிச்சொற்களுக்குப் பல பொருள் உண்டு. உதாரணமாக—கடி என்னுஞ் சொல்லை நோக்குவோம்:

கடி மணம்	—சிறப்பு
கடி மலர்	—மணம்
கடி நகர்	—காவல்
கடி மிளகு	—காரம்
கடிது வந்தான்	—விரைவு

இனி, ஒரே பொருளில் பல உரிச்சொற்கள் வரும். உதாரணமாக—

நனி தின்ருன் — மிகுதி
சாலப் பேசினுன் — ,,
கழி மகிழ்வு — ,,
உறு பொருள் — ,,

என்பன காண்க.

V. வழக்கியல்

நாம் பேசும்போது, சில சொற்களை இலக்கண விதிப் படியே பேசுகின்ருேம்; சிலசொற்களை இலக்கணவிதியோடு ஒப்பப் பேசுகின்ருேம். சில சொற்கள் சிதைந்து வழங்கு கின்றன. இப்படிப்பட்டவற்றை இயல்பு வழக்கு என்பர். இவற்றுள், இலக்கணவிதியை யுடையது இலக்கணமுடை யது எனவும், இலக்கணவிதியை ஒத்தது இலக்கணப் போலி எனவும், சிதைந்த சொற்கள் மரூஉ மொழி எனவும் பெயர் பெறும்.

சாத்தன் வந்தான்
தண்ணீர் குளிரும் } இலக்கணமுடையது

வாயில்—இலக்கணப் போலி

இதில், இல்வாய் என்பது முன் பின்னுக மாறி, வாயில் என வந்தது. அதனுல், இலக்கணப்போலி ஆயிற்று.

அவனுக்கு அஞ்சு ரூபாய் கொடு
அது அப்படி ஆச்சு } மரூஉ மொழி

இனி, சில சொற்களைப் பெரியோர்கள்முன் சொல்லுதல் தகாது என்று மறைத்துச் சொல்லுவர். அதற்கு, இடக்கர் அடக்கல் என்பது பெயர்.

அவன், கால்கழுவப் போயிருக்கிறான்

என்பது போல்வன.

தீமையான சொற்களை வழங்குதல் தகாது என்று கருதி அதற்கு ஈடாக நன்மையான சொற்களைக் கூறுதல் வழக்கம். அது மங்கலம் எனப்படும்.

இன்று வீடு நிறைந்திருக்கிறது-வீட்டில் ஒன்றும்இல்லை.

வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி } —இறந்த

என்பது போல்வன.

[துஞ்சுதல்—தங்கியிருத்தல்; இறத்தல்—கடந்து போதல்.]

சில கூட்டத்தவர்கள் சில சொற்களுக்கு ஈடாக வேறு சொற்களைக் குறிப்பாக வழங்குவர். அதற்கு, குழூஉக்குறி என்பது பெயர்.

சொல் விளம்பி —கள்

இது, வேடர் கூறுவது.

இடக்கரடக்கல் முதலிய மூன்றும் சொல்லத்தகாதவற்றை மறைத்து, சொல்லத்தக்க சொற்களை வழங்குதலின், தகுதி வழக்கு எனப்படும்.

குறிப்பு மொழிகள் :

சொற்கள் வெளிப்படையாகத் தம் பொருளைத் தெரிவிக்கும். ஆனால், சில சொற்கள் குறிப்பாகப் பொருள் தருதலும் உண்டு.

ஆத்திசூடி படிக்கின்றான்.

என்றால், 'ஆத்திசூடி' என்னுந் தொடரை முதலிலே யுடையதொரு நூலைப் படிக்கின்றான் என்பது பொருள்.

வெற்றி வேற்கை வாங்கிவா.

பல்லாண்டு படி.

என்பனவும் இத்தன்மையனவே. நூலின் முதலில் உள்ள சொல்லால், அந்நூலைக் குறித்தலின், இது, முதற்குறிப்பு எனப்படும்.

பாரதப்போரில் ஐவர் வென்றனர்; நூற்றுவர் மடிந்தனர் என்றால், ஐவர் என்பது பாண்டவர்களையும், நூற்றுவர் என்பது கௌரவர்களையும் குறிக்கும். ஐவர், நூற்றுவர் என்னுந் தொகையினால், பாண்டவர், கௌரவர் என்னும் பொருள் வருதலின், இது, தொகைக் குறிப்பு எனப்படும்.

அவன் வெள்ளைக்குதிரைமேல் வருகிறான்—கள்

அவனுக்கு இரண்டு வட்டங் கொடு—ரூபாய்

இவைபோல்வனவும் குறிப்பு மொழி ஆகும்.

வழூவமைதி :

நாம், உரைநடை எழுதும்போது, இலக்கணவழு இல்லாமல் எழுதுதல் வேண்டும். இலக்கண வழுவில்லாத நடை, வழாநிலை எனப்படும். சில விடங்களில், ஒவ்வொரு காரணத்தைக் கருதி, இலக்கண வழுவாகவும் பெரியோர் சில சொற்களை வழங்கியிருக்கின்றனர். அப்படிப்பட்டவற்றிற்கு வழுவமைதி என்பது பெயர். அது பலவகைப்படும்.

திணைவழுவமைதி

பசுவின் கன்றினை, 'என் அம்மை வந்திருக்கிறாள்' என்பது திணைவழு. உவப்பினால், அஃறிணைப் பொருள் உயர்திணைப் பொருளாகக் கூறப்பட்டது.

பால்வழுவமைதி

ஒருவனை நோக்கி, 'ஐயா, நீங்கள்தாம் எனக்குத் தாய்' என்பது, பால்வழுவமைதி. இது, சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாக வழங்கப்பட்டது.

இடவழுவமைதி

தன் மகனை நோக்கி, 'உன் தாய், உன்னை இப்படிச் சொல்லுவேனோ?' என்பது இடவழுவமைதி. [தாய் என்பது படர்க்கைச் சொல்; சொல்லுவேனோ என்பது தன்மைச் சொல்.]

காலவழுவமைதி

உணவு உண்கின்றவன், தன்னைக் கூட்டிக்கொண்டு போக வந்திருப்பவனை நோக்கி, 'சாப்பிட்டாயிற்று, வந்து விட்டேன்' என்பது காலவழுவமைதி. விரைவு பற்றி, நிகழ் காலம் இறந்த காலமாகக் கூறப்பட்டது.

மரபுவழுவமைதி

தன் மகனை நோக்கி, 'என் அப்பா வா' என்பது மரபு வழுவமைதி. இது, உவப்பினால் வந்தது. [மரபு=பழைய வழக்கம்]

திணை விரவி முடிதல்

இராமன் வந்தான்.
குதிரை வந்தது.

என்று, தனித்தனியே முடிபவற்றைச் சேர்த்துச்சொல்ல வேண்டுமானால் எப்படிச் சொல்லலாம்?

இராமனும் குதிரையும் வந்தனர்

என்றால், குதிரைக்கு உயர்திணை முடிபு வரும்.

இராமனும் குதிரையும் வந்தன

என்றால், இராமனுக்கு அஃறிணை முடிபு வரும். இவ்வாறன்றி, இரண்டு எழுவாய்க்குஞ் சிறப்பு வரும்படி வேறுவிதமாகச் சொல்ல முடியாது. ஆகலின், சிறப்பு, இழிவு, மிகுதி என்னுங் காரணங்களுள் ஒன்றனைக் காரணமாகக் கொண்டு முடிப்பர்.

இராமனுங் குதிரையும் வந்தனர்

என்பதில், சிறப்பினால் குதிரைக்கும் உயர்திணை முடிபு கொடுக்கப்பட்டுளது.

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா

என்பதில், இழிவு கருதி, மூர்க்கன் என்னும் உயர்திணைப் பெயருக்கு அஃறிணை முடிபு கொடுக்கப்பட்டுளது.

வீரரும் யானையும் குதிரையும் தேரும் சென்றன

என்பதில், மிகுதி பற்றி, வீரர் என்னும் உயர்திணைச் சொல்லுக்கு அஃறிணை முடிபு கொடுக்கப்பட்டுளது.

முற்றும்மை வரவேண்டும் இடம்:

தொகை இத்தனை என்று அறிந்த பொருள்களைச் சொல்லும்பொழுது, உம்மை கொடுத்தே சொல்ல வேண்டும்.

அவர் நான்கு வேதமும் கற்றவர்

அவனுக்கு இரண்டு கண்ணும் சிவந்திருக்கின்றன

என்பதுபோலச் சொல்லுதல் வேண்டும். இவ்வாறன்றி, 'அவர் நான்கு வேதம் கற்றவர்' என்றுசொன்னால், நான்கற்கு மேற்பட்ட வேதங்கள் உள்ளன என்றும், அவற்றுள், நான்கு வேதத்தைமட்டுமே அவர் கற்றிருக்கின்றார், மற்றைய வேதங்களைக் கற்கவில்லை என்றும் பொருள் படும்.

VI. சொற்றொடர் :

சொற்றொடர் வகைகள் :

சொற்றொடரை வாக்கியம் என்று வழங்குவர். வாக்கியம் மூன்று வகைப்படும். அவை : 1. தனிநிலை வாக்கியம், 2. கலவை வாக்கியம், 3. தொடர்நிலை வாக்கியம் என்பன.

(1) தனிநிலை வாக்கியம்.

தனிநிலை வாக்கியத்தில், ஓர் எழுவாயும் அதன் பயனிலையும் இருக்கும் ; செயப்படுபொருள் இருத்தலும் உண்டு.

இராமன் காட்டுக்குப் போனான்.

கைகேயி, இராமனைக் காட்டுக்குப் போக்கினாள்.

(2) கலவை வாக்கியம்.

கலவை வாக்கியத்தில் ஒரு வாக்கியம் முக்கியமானதாயும், மற்றது முக்கியமல்லாததாயும் இருக்கும். முக்கியமான வாக்கியத்திற்கு, அவயவி வாக்கியம் என்றும், முக்கியமல்லாததற்கு அவயவ வாக்கியம் என்றும் பெயர்.

கைகேசி ஏவினதனால், இராமன் காட்டுக்குப் போனான். இதில், இராமன் காட்டுக்குப் போனான் என்பதுவே முக்கியமாகலின், அது, அவயவி வாக்கியம்.

கைகேயி ஏவினாள் என்பது, அவயவ வாக்கியம்.

மூலபலம் வந்தபொழுது, குரங்குகள் அஞ்சி ஓடின. என்பதிலும் இவ்வாறே காண்க.

(3) தொடர்நிலை வாக்கியம் :

தனி வாக்கியங்கள் பலவற்றை ஒரு தொடராக அமைத்துக் கூறுவது, தொடர்நிலை வாக்கியம் ஆகும்.

இராமன் நல்லவன்; பெற்றோர்களைப் பேணுவான், பெரியோர்களை வணங்குவான்; ஏழைகளுக்கு உதவிசெய் வான்.
என்று கூறுதல் போல்வது.

பயிற்சி

1. சுக்ரீவன் முதலியோர் இராமரைச் சார்ந்ததனால், இராமர் இராவணனை எளிதில் வென்றார்.

2. அனுமான் சீதையைக் கண்டு திரும்பினதை யறிந்து, வானரவீரர் களிப்புற்று மதுவனத்தை அழித்தனர்.

இவ்வாக்கியங்களில், அவயவி வாக்கியத்தையும் அவயவ வாக்கியத்தையும் எடுத்தெழுதுக.

1. இராமர், அனுமானது அறிவையும் திறனையும் அறிந்தவர். அவர் அவனிடத்தில் தமது திருவாழியைக் கொடுத்தனுப்பினார்.

2. இலக்குவன் இராமரிடத்தில் மிக்க அன்புள்ளவன். அவன் ஒரு நாளும் அவரைப் பிரிந்திருக்க மாட்டான்.

இத் தனி வாக்கியங்களைக் கலவைவாக்கிய மாக்குக.

தொடர்கள்:

ஒருசொல், மற்றொரு சொல்லோடு பொருட்பொருத்தம் உறத் தொடருமாயின், அது தொடர் எனப்படும்.

இராமன் வந்தான்

என்பதில், இராமன் என்பது எழுவாய்ப்பொருளுடையது. அது, வந்தான் என்னுஞ் சொல்லோடு தொடர்ந்துளது;

ஆதலின், 'இராமன் வந்தான்' என்பது, எழுவாய்த் தொடர் எனப்படும். இவ்வாறே பிற தொடர்களிலுங் காண்க.

இராமன் வருகின்றான்	— எழுவாய்த் தொடர்
இராமா வா	— விளித்தொடர்
வந்த மனிதன்	— பெயரெச்சத் தொடர்
வந்து போனான்	— வினையெச்சத் தொடர்
வந்தான் இராமன்	— வினைமுற்றுத் தொடர்
மற்றொன்று	— இடைச்சொற் றொடர்
சாலப் பேசினான்	— உரிச்சொற் றொடர்
பாம்பு பாம்பு	— அடுக்குத் தொடர்

வினைப்பகுதிகள், பெயர்ச்சொல்லோடு தொடர்தல் உண்டு. அது, வினைத்தொகை நிலைத்தொடர் எனப்படும்.

[பெயரெச்சத் தொடரில், பகுதியோடு காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் சேர்ந்திருக்கும்; இதில் அவை சேர்ந்திரா.]

சுடு நீர்	இடி கரை
விளை நிலம்	ஓடு கால்

முதலியன காண்க.

பண்புஅடிகள், பெயர்ச்சொல்லோடு தொடர்ந்துவரும். அது, பண்புத்தொகை நிலைத்தொடர் எனப்படும்.

செந்தாமரை	தண்ணீர்
கருங்குரங்கு	வெந்நீர்
பசும்பொன்	நல்வழி

முதலியன காண்க.

உபமானச் சொல் உபமேயச் சொல்லோடு தொடர்ந்து வருதல், உவமைத்தொகை எனப்படும்.

மதிமுகம் = மதிபோன்ற முகம்.

இதில், மதி—உபமானம்; முகம்—உபமேயம்.

பவள வாய்

பால் மொழி

முதலியன காண்க.

பொருளில் தொடர்புடைய சொற்கள், தொடர்ந்து வரின் உம்மைத்தொகை எனப்படும்.

பகல்இரவு — பகலும் இரவும்

அட்டமிநவமி — அட்டமியும் நவமியும்

பால்பழம் — பாலும் பழமும்

அண்ணன்தம்பி — அண்ணனும் தம்பியும்

தாய்தகப்பன் — தாயும் தகப்பனும்

முதலியன காண்க.

இரண்டாம் வேற்றுமைமுதல், ஏழாம் வேற்றுமை வரையும் உள்ள ஆறு வேற்றுமைகளுள் யாதேனும் ஒரு வேற்றுமையின் பொருள் வரும்படி சொற்கள் தொடர்ந்தால் அவை, வேற்றுமைத்தொடர் எனப்படும். அவற்றுள் வேற்றுமையுருபு இல்லாதிருப்பவை வேற்றுமைத் தொகைநிலை என்றும், வேற்றுமையுருபு இருப்பவை வேற்றுமைத் தொகாநிலை என்றும் சொல்லப்படும்.

பால் குடித்தான் — என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலை

பாலைக் குடித்தான் — என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலை

வேற்.	தொகை	விரி
2.	சோறு உண்டான்	—சோற்றை யுண்டான்
3.	வாள் எறிந்தான்	— வாளால் எறிந்தான்
4.	பள்ளிக்கூடம் போனான்	— பள்ளிக்கூடத்துக்குப் போனான்
5.	மலைவீழ் அருவி	— மலையினின்று வீழ் அருவி
6.	என் புத்தகம்	— எனது புத்தகம்
7.	காட்டுப் பூனை	— காட்டிலுள்ள பூனை

தொடரிலக்கணம் கூறுதல்:

தொடரிலக்கணம் கூறும்போது, ஒரு சொற்றொடரில் இரண்டு இரண்டு சொற்களாக எடுத்துக்கொள்ள வேண்டும். அவ் விரண்டுசொற்களுள் முதலில் இருப்பது என்ன சொல்லோ, அதன்பெயரால் தொடருக்குப் பெயர் கூறவேண்டும். பொருள் நோக்கியும் தொடருக்குப் பெயரிடுதல் உண்டு.

அறஞ்செய விரும்பு

முதலில், அறம் + செய—என்னும் இரண்டு சொற்களை எடுத்துக்கொள்ள வேண்டும். 'அறம்' என்பதற்கு 'அறத்தை' என்பது பொருள். இதில் இரண்டாம் வேற்றுமையுருபு இல்லை. ஆதலின், இது, இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர். இனி, செய + விரும்பு - என்னும் இரண்டு சொற்களை எடுத்துக்கொள்ளவேண்டும். அவற்றுள், 'செய' என்பது வினையெச்சம். அதனால், 'செய விரும்பு' என்பது, வினையெச்சத் தொடர்.

இவ்வாறே, பிறவுங் கண்டுகொள்க.

III. புணர்ச்சி

பால் குடித்தான் என்பது பால் + குடித்தான் என்னும் இரண்டு சொற்களால் ஆகிய தொடர். இதில் ஐ என்னும் வேற்றுமையுருபு இல்லை. ஆயினும், அவ்வேற்றுமையின் பொருள் தோன்றுகின்றது. இரண்டாம் வேற்றுமைமுதல் ஏழாம் வேற்றுமைவரையும் உள்ள ஆறு வேற்றுமைகளுள் யாதேனும் ஒன்றன் பொருள் வரும்படி சொற்கள் புணரின், அது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். இவ்வாறு வேற்றுமைப் பொருள்படாத புணர்ச்சி அல்வழிப்புணாச்சி எனப்படும்.

இராமன் வந்தான்
இராமா வா
வந்த மனிதன்
வந்து போனான்

என்பவைபோன்றன, அல்வழிப்புணர்ச்சியாகும்.

உயிரீற்றுப் புணர்ச்சி:

உயிரெழுத்துக்களுள், எ ஒன்று தவிர, மற்றைய பதினோர் எழுத்துக்களும் சொற்களின் இறுதியில் நிற்கும். அவற்றின்முன் வரும் வல்லெழுத்துக்கள், இருவகைப் புணர்ச்சியிலும் பெரும்பாலும் மிகும்.

விள + பெரிது	= விளப் பெரிது	அல்வழி
பலா + பெரிது	= பலாப் பெரிது	
கோ + பெரியன்	= கோப்பெரியன்	
விள + பெருமை	= விளப் பெருமை	வேற்றுமை
பலா + காய்	= பலாக்காய்	
கோ + பெருமை	= கோப்பெருமை	

உயிரீற்றுச் சொற்களுக்குமுன் மெல்லெழுத்து, இடை யெழுத்துக்கள் வந்தால், அவை இயல்பாக இருக்கும்.

விள + நீண்டது = விளநீண்டது		
பலா + யாது = பலாயாது		அல்வழி
கோ + வலியன் = கோவலியன்		
விள + நீட்சி = விளநீட்சி		
பலா + மாட்சி = பலாமாட்சி		வேற்றுமை
கோ + வலிமை = கோவலிமை		

மெய்யீற்றுப் புணர்ச்சி:

மெய்யெழுத்துக்களுள் ண், ந், ம், ன் என்னும் நான்கு மெல்லெழுத்துக்களும் ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறு இடையெழுத்துக்களும் ஆகப் பத்துஎழுத்துக்கள் மொழி களின் இறுதியில் நிற்கும்அன்றோ? அவற்றுள் ய், ர், ழ் என்னும் மூன்றீற்றுச் சொற்களுக்குமுன் வரும் வல்லெ ழுத்து முதன்மொழிகள் வேற்றுமையில் மிகும்.

நாய் + கால் = நாய்க்கால்

தேர் + கால் = தேர்க்கால்

பூழ் + சிறகு = பூழ்ச்சிறகு [பூழ் - ஒரு பறவை]

என மிக்கது காண்க.

சொற்களின் இறுதியில் நிற்கும் ல்,ன் என்னும் இரண்டு எழுத்துக்கள், வல்லெழுத்து முதன்மொழி வரின், வேற்று மையில், ற் ஆகத் திரியும்.

பால் + சோறு = பாற்சோறு

பொன் + குடம் = பொற்குடம்

மொழிகளின் ஈற்றில் நிற்கும் ள், ண் என்னும் இரண்டு எழுத்துக்கள் வல்லெழுத்து முதன்மொழி வரின், வேற்றுமையில், ட் ஆகத் திரியும்.

தேள் + கொடுக்கு = தேட் கொடுக்கு
மண் + கலம் = மட்கலம்

மொழிகளின் ஈற்றில் நிற்கும் மகரமெய், க ச த முதன்மொழி வரின், அல்வழியில் அவ் வல்லெழுத்திற்கு இனமாகிய மெல்லெழுத்தாகத் திரியும்; வேற்றுமையில் மகரம் கெட, வல்லெழுத்து மிகும்.

மரம் + குறிது = மரங் குறிது
மரம் + சிறிது = மரஞ் சிறிது
மரம் + தளிர்த்தது = மரந்தளிர்த்தது
} அல்வழி

மரம் + கிளை = மரக்கிளை—வேற்றுமை

மொழிகளின் ஈற்றில்நிற்கும் லகரமெய், மெல்லெழுத்து முதன்மொழி வரின், இருவழியிலும் ன் ஆகத் திரியும்.

வில் + நீண்டது = வின்னீண்டது—அல்வழி
கல் + மலை = கன்மலை—வேற்றுமை

மொழிகளின் இறுதியில் நிற்கும் ளகரமெய், மெல்லெழுத்து முதன்மொழி வரின், இருவழியிலும் ண் ஆகத் திரியும்.

முள் + நீண்டது = முண்ணீண்டது—அல்வழி
எள் + நெய் = எண்ணெய்—வேற்றுமை

மொழிகளின் இறுதியில் நிற்கும் ணகரமெய்க்குமுன் வரும் நகாரம், இருவழியிலும் ணகாரம் ஆகும்.

மண் + நன்று = மண்ணன்று—அல்வழி
மண் + நன்மை = மண்ணன்மை—வேற்றுமை

மொழிகளின் இறுதியில் நிற்கும் ணகரமெய்க்குமுன் வரும் நகரம், இருவழியிலும் ணகரம் ஆகும்.

பொன் + நன்று = பொன்னன்று—அல்வழி
பொன் + நன்மை = பொன்னன்மை—வேற்றுமை

மொழிகளின் இறுதியில் நிற்கும் ள், ண் என்னும் மெய்யெழுத்துக்களுக்குமுன் வரும் தகாரம், டகாரமாகத் திரியும்.

வாள் + திறல் = வாட்டிறல்
ஆண் + தகை = ஆண்டகை

மொழிகளின் இறுதியில் நிற்கும் ல், ன் என்னும் மெய்யெழுத்துக்களுக்குமுன் வரும் தகாரம், றகாரம் ஆகும்.

கல் + தூண் = கற்றூண்
முன் + தோன்றல் = முற்றோன்றல்

The Model Press, Educational Printers, Madras.